॥ श्रीकृष्णाय परब्रह्मणे नमः ॥

। ईशकेनोपनिषदौ ।

॥ श्रीशङ्करभाष्योपेते ॥

ஈச கேனோபநிஷத்துக்கள்

சங்கர பாஷ்யத்துடனும், தமிழுரையுடனும்
கூடியன.

★★★★

ஆசிரியர் : ஜௌதிஷ, வைதிக, வ்யாகரண
ந்த சாஸ்திர பாரங்கத:
லங்குடி நடேச சாஸ்திரிகள்

கடலங்குடி பப்ளிகேஷன்ஸ்
38, நடேச அய்யர் தெரு
தி. நகர், (பஸ் ஸ்டாண்ட் அருகில்)
மெட்ராஸ் 600 017. © 434 34 06

2425

FORWARDED FREE OF COST
WITH THE COMPLIMENTS OF
RASHTRIYA SANSKRIT
SAMSTHAN - NEW DELHI

॥ श्रीकृष्णाय परब्रह्मणे नमः ॥

। ईशकेनोपनिषदौ ।

॥ श्रीशङ्करभाष्योपेते ॥

ஈச கேனோபநிஷத்துக்கள்.

சங்கர பாஷ்யத்துடனும், தமிழுரையுடனும் கூடியன.

'ஈசாவாஸ்யம்' என இந்த உபநிஷத்திற்கு பெயர் வரக் காரணமும் அதன் பொருளும், உபநிஷத்தில் அடங்கியுள்ள 18 மந்திரங்களின் பொருள், ஸந்யாஸிகளுக்கு ஞான நிஷ்டையும் மற்றவர்களுக்கு கர்மம் உபாஸனம் இவற்றின் சேர்க்கையின் பலனும் விரிவாக விளக்கப் பட்டுள்ளன. 'கேனோபநிஷத்' என்ற பெயர் வரக் காரணமும், அதன் சிறப்பும்; குரு-சிஷ்ய பாவ விளக்கம், ப்ரம்ஹம் ப்ராணனுக்கு பிராணனாகுதலின் விளக்கம் போன்றவை 35 மந்திரங்கள், 4 கண்டங்களில் ஸ்ரீசங்கரபாஷ்யகாரரின் பதபாஷ்யமும், வாக்யபாஷ்யமும் தெளிவான தமிழ்மொழி பெயர்ப்பில் விளக்கப்பட்டுள்ளன.

ஆசிரியர் : ஜௌதிஷ, வைதிக, வ்யாகரண, வேதாந்த சாஸ்திர பாரங்கத:

பிரம்மஸ்ரீ கடலங்குடி நடேச சாஸ்திரிகள்

தொகுப்பாசிரியர்: **Dr. K. N. சரஸ்வதி**

M.A., M.S., MEd., Doctorate in Counselling, Diplomas in Naturopathy, Art, Yoga, and Computer

பதிப்பாசிரியர்: **M. A. ஜெய்சங்கர்** *B.A., M.B.A*

கடலங்குடி பப்ளிகேஷன்ஸ்

38, நடேச அய்யர் தெரு

தி. நகர் (பஸ் ஸ்டாண்ட் அருகில்)

மெட்ரூஸ் - 600 017. Phone : 4343406

காபிரைட்]

[இரண்டாம் பதிப்பு

© உரிமை : 1996 டாக்டர் கே. என். சரஸ்வதி
கடலங்குடி ஹவுஸ்
38, நடேச அய்யர் தெரு
மெட்ருஸ் - 17

முதற் பதிப்பு : 1933

இரண்டாம் பதிப்பு : மார்ச் 1996

''எமது வெளியீடுகள்'' என்று இந்நூலில் கடைசியில் பட்டியல்படுத்தி விளம்பரம் செய்யப்படும் புத்தகங்கள் எங்களுடைய காபிரைட் உரிமை பெற்றவை. அவற்றிலுள்ள விஷயங்களையும் கருத்துக்களையும் முழுதாகவோ, பகுதியாகவோ மொழிபெயர்த்தோ போட்டோ காப்பி எடுத்தோ, அதே கருத்து அமைந்த சொற்றொடர்களாகவோ, வேறு தலைப்புக் கொடுத்துப் புத்தகமாக வெளியிடுவதோ தங்கள் வெளியீடுகளில் எந்த முறையிலுமோ கையாளுவது எமது காபிரைட் உரிமையை மீறியது (*infringement*) ஆகும் என்றும் சட்டப்படி நடவடிக்கைக்கு இலக்காகும் என்றும் ஞாபகப் படுத்துகிறோம்.

Jurisdiction-Madras Courts.

விலை ரூ. 55-00

Printed by :
ஜெய்சங்கர் பிரிண்டர்ஸ்
38, நடேச அய்யர் தெரு,
தி. நகர் (பஸ் ஸ்டாண்ட் அருகில்)
மெட்ருஸ்-17. போன் : 4343406

கோபால தத்துவ ரக்ஷாமணி, அபிநவ வியாஸர்,
குலபதி, ஜோதிஷ சக்கரவர்த்தி, அபிநவ
சுகபிரம்மம், அபிநவ வராஹமிஹிரர்.

கடலங்குடி

பிரம்மஸ்ரீ நடேச சாஸ்திரிகள்

(1878 — 1961)

Internationally reputed

"Asia's Leading Woman Astrologist - Counsellor"

"JYOTHISHA KALANIDHI"

Dr. K.N. Saraswathy

M.A., M.S., M.Ed., Doctorate in Counselling, Diplomas in Naturopathy, Art, Yoga and Computer.

வாசக நேயர்களுக்கு

உபநிஷத்துக்கள், வேதங்களின் மிக உயர்ந்த கருத்துக்களும், தத்துவ ஞானமும் அடங்கிய நூல்களாகும். நம் நாட்டில் வாழ்ந்த ஞானிகள் 'ஞான திருஷ்டி' அதாவது "பின்னர் வருவதை முன்னரே அறிந்து கொள்ளக் கூடிய ஆற்றல் படைத்தவர்கள்." அவர்கள் மனிதன், பிரபஞ்சம் ஆகியவற்றின் தோற்றம், இயக்கம், முடிவு பற்றிய பிரச்னைகளைத் தீர்க்க ஒரே மார்க்கம் ஜீவாத்மாவிற்கும், பரமாத்மாவிற்குமுள்ள தொடர்பை அறிவது தான் என அறிந்தனர். மேலும் இறப்பு, பிறப்பு, மாறுதல் போன்ற விவரங்களை அறியவும் அழிவில்லாத அமர நிலையை அடையவும் ஆன்மிக உணர்வும், ஆத்ம வளர்ச்சியும் அத்யாவசியமானது என வலியுறுத்தினர். ஞானிகள் மனிதனின் உள்ளத்தில் ஆன்மிக அறிவைத் தூண்டி புதுமையான உணர்வைக் கொடுப்பது உபநிஷத்துக்கள் தான் என்பதை நிலைநாட்டினர். உபநிஷத்துக்கள் வேதங்களின் ஞான காண்டப் பகுதியைக் கொண்டவை.

நம்மிடையே போற்றப்படும் 12 உபநிஷத்துக்களில் வேதாந்த சாகரத்தின் கரையைக் கண்ட கடலங்குடி பிரும்மஸ்ரீ நடேச சாஸ்திரியார் காடகோபனிஷத், ஈச-கேன உபநிஷத், தைத்திரீயோபநிஷத் முதலிய உபநிஷத்துக்களை தேவ நாகரி மூலத்துடனும், விரிவான தமிழ் மொழி பெயர்ப்புடனும் 1933வது வருடத்திலேயே முதல் முதலாக வெளியிட்டு வேதாந்த உலகிலும், ஆன்மிக மக்களின் மனதிலும் தனக்கென நீங்காத ஒரு தனியிடத்தைப் பெற்றார்.

1995 இல் பல ஆஸ்திகர்களின் இடைவிடாத வற்புறுத்தலினாலும், சாஸ்திர விற்பன்னர்களின் தூண்டுதலினாலும் காடகோபநிஷத் என்ற அரிய நூலை வெளியிட்டு பலரின் பாராட்டுக்களையும் ஆன்மிக மக்களின் நல்லாதரவையும் "கடலங்குடி பப்ளிகேஷன்ஸ்" பெற்றுவருகிறது என்பதை மிக மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம். இந்த நூல் 63 ஆண்டுகளுக்குப் பின் இரண்டாவது பதிப்பாக வெளி வந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

ஆன்மிக மக்களை மேலும் பரவசமூட்ட 'ஈச-கேன உபநிஷத்' என்ற அரிய நூலை இது சமயம் வெளியிட்டுள்ளோம். ஸ்ரீ சங்கர பகவத்பாதர்களின் பாஷ்யத்துடனும், விரிவான தமிழுரையுடனும் கூடியது. இதில் ஈசாவாஸ்யோபநிஷத்தும், கேனோபநிஷத்தும் சேர்ந்து வெளியிடப்பட்டுள்ளதால் இதற்கு 'ஈச-கேநோபஷத்' எனப் பெயரிடப்பட்டுள்ளது.

இதில் ஈசாவாஸ்யோபநிஷத்தில் 18 மந்திரங்களின் விரிவான பாஷ்யமும், பதவுரையும், கேநோபநிஷத்தில் 35 மந்திரங்களும், நான்கு கண்டங்களும் அடங்கியுள்ளன. சிறப்பு அம்சமாக ஆதிசங்கரரின் பதபாஷ்யமும், வாக்ய பாஷ்யமும் வெளியிடப்பட்டு ஆங்காங்கே அவற்றின் வேறுபாடுகளும் தமிழ் மொழி பெயர்ப்பில் வெளியிடப்பட்டுள்ளன.

புகழுடம்புடன் நம்மிடையே வாழ்ந்து வரும் பிரும்ம ஸ்ரீ கடலங்குடி நடேச சாஸ்திரியாரின் அரிய படைப்பாகும். அன்னாரின் அபிலாஷையைப் பூர்த்தி செய்யவே 63 ஆண்டுகளுக்குப் பின் இந்நூலை இரண்டாவது பதிப்பாக பல இடையூறுகளையும் கடந்து வெளியிட்டுள்ளோம். அன்னாரின் உயரிய நூலில் எந்தவித அச்சுப்பிழையோ சொற்பிழையோ ஏற்பட்டு அன்னாரின் புகழிற்கு எந்தவித பங்கமும் ஏற்படக்கூடாது என்ற நோக்கில் இந்த நூலை ஆப்செட்டில் பிரசுரித்துள்ளோம்.

தற்சமயம் உள்ள பேப்பர் விலை, அச்சுக்கூலி, ஆட்கள் தொல்லை போன்ற தவிர்க்க முடியாத சூழ்நிலையில் இது ஒரு மகத்தான வேள்வியாகும். எல்லாவற்றிற்கும் மேலாக 'பொருளாதாரம்' குறிப்பாக குறிப்பிடத்தக்கது.

ஆயினும் கடலங்குடிப் பெரியவரின் அபிலாஷையைப் பூர்த்தி செய்வதையே முக்கிய குறிக்கோளாகக் கருதி அன்னாரின் அனுக்கிரஹத்தையும், ஆன்மிக மக்களின் ஆர்வத்தையும் பெரியோர்களின் ஆசீர்வாதங்களையும் மூலதனமாக்கி இந்நூலை ஆன்மிக உலகிற்குப் படைக்கிறேன்.

இந்த வேள்வியில் அன்னாரின் தௌஹித்திரனும், எனது புத்திரனுமான சிரஞ்சீவி ஜெய்சங்கரின் ஆன்மிக உணர்வும், கடலங்குடிப் பெரியவரிடம் உள்ள பக்தியும், தொழிலில் உள்ள ஈடுபாடும், முயற்சியும் பெரிதும் குறிப்பிடத்தக்கது. சிரஞ்சீவி ஜெய்சங்கருக்கு ஆன்மிகப் பெரியோர்களின் ஆசியும், கடலங்குடிப் பெரியவரின் அனுக்கிரஹமும் ஆண்டவனின் அருளும் பரிபூரணமாய்க் கிட்ட நான் பிரார்த்திக்கிறேன்.

கடலங்குடிப் பெரியவரின் பொற்பாதங்களில் குருகாணிக்கையாக இந்த நூலைச் சமர்ப்பிக்கிறேன். எமது இதர ஆன்மிக ஜோதிட, கலாசார, ஸ்வயமுன்னேற்ற நூல்களுக்கு ஆதரவு அளித்து எம்மை இதுகாறும் ஊக்குவித்து வரும் ஆன்மிக, வாசக உலகம் இந்நூலையும் ஆதரித்து, கடலங்குடிப் பெரியவரின் அனுக்கிரஹத்தைப் பெற்று எல்லா வளமுடனும் நலமுடனும் வாழ நான் வணங்கும் ஸ்ரீதுர்கையம்மனைப் பிரார்த்திக்கிறேன்.

மாசி மகம்
March 04, 1996

கே. என். சரஸ்வதி

ஈசாவாஸ்யோபநிஷத்.

முகவுரை.

இந்த ஈஶாவாஸ்யோபநிடதத்தில் 18 மந்திரங்களடங்கியிருக்கின்றன. அவற்றுள் முதலாவது மந்திரத்தால் ஏஷணாத்ரய பரித்யாக பூர்வகமான ஸன்யாஸநிஷ்டையும், இரண்டாவது மந்திரத்தால் அத்தகைய ஸன்யாஸ நிஷ்டைக்குச் சாதனமான நிஷ்காம கர்மநிஷ்டையும், 3-வது மந்திரத்தால் அவித்வந்நிந்தையும், 4 முதல் 8 முடியவுள்ள 5 மந்திரங்களால் பரமாத்மஸ்வரூபநிரூபண பூர்வகமாக ப்ரம்ஹாத்மைக்ய ஜ்ஞானமும், 9 முதல் 11 முடியவுள்ள 3 மந்திரங்களால் கர்மத்தையும் ஸகுணப்ரம்ஹோபாஸனத்தையும் ஸமப்ரதானமாக அநுஷ்டித்தல் வாயிலாக சித்தைகாக்ர்ய ஸம்பாதனம் செய்வதற்குரிய ஸ்தூல மார்க்கமும், 12 முதல் 14 வரையுள்ள 3 மந்திரங்களால் ஹிரண்யகர்ப்ப ப்ரகிருத்யுபாஸனங்களால் சித்தைகாக்ர்யத்துக்குரிய ஸூக்ஷ்மமார்க்கமும், அதற்குமேலுள்ள 4 மந்திரங்களால் இவ்விதவுபாஸனங்களால் சித்தைகாக்ர்யத்தையடையமுயர்ச்சிசெய்பவர்க்கு இடையில் சரீரபாதமேற்படுமாயின் ப்ரம்ஹலோக ப்ராப்த்தியேற்பட்டு அதனின்றும் ஸ்வரூபஸாக்ஷாத்காரத்தினல் ப்ரம்ஹாத்மைக்யானுபவ மேற்படவேண்டி வருவதால் அதற்கு வேண்டி ஸகுணப்ரம்ஹ ப்ராப்த்திக்குரிய மார்க்கயாசனமும் செய்யப்பட்டிருக்கிறது.

"ज्ञानञ्चाप्यद्वितीयस्वरससुखघनानन्तचिन्मात्ररूप
ब्रह्मात्मैकत्वबोधः स भवति सुमतेस्तत्वमस्यादिवाक्यात् ।
देहाद्यध्यासदार्ढ्याच्छ्रुतमपि सहसा नैव संभावनीयं
ब्रह्मत्वं स्वस्य तस्मान्नयगुरुवचनैस्साधुमीमांसनीयम ॥"

"ஜ்ஞாநஞ்சாப்யத்விதீயஸ்வரஸஸுகக⁴நாநந்தசிந்மாத்ர ரூப ப்³ரஹ்மாத்மைகத்வபோ³த⁴: ஸ ப⁴வதி ஸுமதேஸ்தத்வமஸ்யாதி³வாக்யாத் । தே³ஹாத்³யத்⁴யாஸதா³ர்ட்⁴யாச்ச்²ருதமபி ஸஹஸா நைவ ஸம்பா⁴வநீயம் ப்³ரஹ்மத்வம் ஸ்வஸ்ய தஸ்மாந்நயகு³ருவசநைஸ்ஸாது⁴மீமாம்ஸநீயம் ॥"

[அத்விதீயமும் (இரண்டற்றதும்) ஸ்வரஸமும்(ஸ்வஸம்வேத்யமும்) ஸாகுனமும் மூன்றுவித டரிச்சேதங்களற்றதும், சின்மாத்ரரூபமுமான ப்ரம்ஹம் ஆத்மா இவற்றின் ஐக்ய ஸாக்ஷாத்காரம் யாதுண்டோ அதுவே வேதாந்தங்களாலுபதேசிக்கப்படும் க்ஞானமாகும். அந்த க்ஞானமோ நிஷ்காமகர்மானுஷ்டான பகவதுபாஸனங்களால் தெளிந்த சித்தமுள்ளவர்க்கு தத்த்வமஸி முதலிய மஹாவாக்யோபதேச மூலமேற்படுகிறது. ஆயினும் வெகு ஜன்மப்பழக்கங்காரணமாய் தேஹாதிகளிலேற்பட்ட ஆத்மாத்மீய அத்யாஸதார்ட்யங் காரணமாய் எத்தனை தடவை மஹாவாக்யோபதேசம் பெறினும் 'தான் ப்ரம்ஹமே' என்ற பொதுப்படையான தோற்றமே ஏற்படுவதில்லை. ஆகவே ப்ரம்ஹ ஸூத்திராதிகளைக்கொண்டும் குரூபதேசம் மூலமும் இடையறாது விசாரித்தறிதல் வேண்டும்] என்றபடி வேதாந்தங்களாலுபதேசிக்கப்படும் க்ஞானமானது அகண்டாகாராந்தக்கரண விருத்திரூபமாகவிருக்கிறது. அந்த அகண்டாகார விருத்தியானது

इत्थं वाक्याद्रिमृष्टारणिविमथनाद्वह्निकीलेव सद्यः
संभूताखण्डवृत्तिस्तृणमिव निखिलं द्वैतजालं समोहम् ।
दग्ध्वा निर्वाणसंज्ञे निरतिशयसुखे नित्यसिद्धात्मतत्त्वे
सद्यो याति प्रणाशं कतकरज इवोदस्य पङ्कं जलस्य ॥

𑌇𑌤𑍍𑌥𑌂 𑌵𑌾𑌕𑍍𑌯𑌾𑌦𑍍𑌰𑌿𑌮𑍃𑌷𑍍𑌟𑌾𑌰𑌣𑌿𑌵𑌿𑌮𑌥𑌨𑌾𑌦𑍍𑌵𑌹𑍍𑌨𑌿𑌕𑍀𑌲𑍇𑌵 𑌸𑌦𑍍𑌯𑌃
𑌸𑌂𑌭𑍂𑌤𑌾𑌖𑌣𑍍𑌡𑌵𑍃𑌤𑍍𑌤𑌿𑌸𑍍𑌤𑍃𑌣𑌮𑌿𑌵 𑌨𑌿𑌖𑌿𑌲𑌂 𑌦𑍍𑌵𑍈𑌤𑌜𑌾𑌲𑌂 𑌸𑌮𑍋𑌹𑌮𑍍।
𑌦𑌗𑍍𑌧𑍍𑌵𑌾 𑌨𑌿𑌰𑍍𑌵𑌾𑌣𑌸𑌂𑌜𑍍𑌞𑍇 𑌨𑌿𑌰𑌤𑌿𑌶𑌯𑌸𑍁𑌖𑍇 𑌨𑌿𑌤𑍍𑌯𑌸𑌿𑌦𑍍𑌧𑌾𑌤𑍍𑌮𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑍇
𑌸𑌦𑍍𑌯𑍋 𑌯𑌾𑌤𑌿 𑌪𑍍𑌰𑌣𑌾𑌶𑌂 𑌕𑌤𑌕𑌰𑌜 𑌇𑌵𑍋𑌦𑌸𑍍𑌯 𑌪𑌙𑍍𑌕𑌂 𑌜𑌲𑌸𑍍𑌯॥

என்றபடி தத்வமஸ்யாதி மஹாவாக்கியத்தாலுண்டாகி முடிவில் ஸ்வரூபத்திலொடுங்கக் கூடியதாகவுமாகிறது. அத்தகைய விருத்தியேற்படவேண்டுவதாயின் நிஷ்காமகர்மானுஷ்டானத்தால் சித்தத்திலுள்ள சாஞ்சல்ய தோஷத்தைப்போக்கிக்கொண்டு ஸகுண பகவதுபாஸனத்தினால் சித்தைகாக்ர்யத்தை ஸம்பாதிக்க முயற்சி செய்யவேண்டுவதவஸ்யமாகிறது. அம்முறையாவது—வெளியில் பல விஷயங்களிலும் செல்லும் இயல்புடைய மனத்தை வெளிதேசத்திலுள்ள பகவத் விக்ரஹாதிகளில் செலுத்தி இடையறாது அம்மூர்த்திவிசேஷத்தைத் தியானித்துவருதல் இவ்வழிசெல்லுவோர்க்கு

धर्मविच्छित्तिसाधनमात्मैकत्वादिविज्ञानमुत्पादयन्ति । इत्येवमुक्ताधिकार्यभिधेयसंबन्धप्रयोजनान्मन्त्रान् संक्षेपतो व्याख्यास्यामः ॥

ईशावास्यमिदं सर्वं यत्किञ्च जगत्यां जगत् ।
तेन त्यक्तेन भुञ्जीथा मा गृधः कस्य स्विद्धनम् ॥ १ ॥

பட்ட அதிகாரி, சொல்லப்படும் பொருள், ஸம்பந்தம், பயன், இவற்றையுடைய ஈசாவாஸ்யம் என்றதாதி மந்த்ரங்களைச் சுருக்கமாக வியாக்யானஞ் செய்யப்போகிறோம்.

அவதாரிகை.—"ईशा वास्यमिदं सर्वम्"("ஈஶாவாஸ்யமிதம் ஸர்வம்") என இந்தவுபநிடதத்தில் மந்திராரம்ப மிருப்பதால் இதற்கு இப்பெயரிடப்பட்டிருக்கிறது. பொதுவாய் உபநிஷத் என்ற பதத்துக்கு ப்ரம்ஹவித்யை என்ற பொருளேற்படினும் "மஞ்சங்கள் கத்துகின்றன" என்றவிடத்தில் அதிலிருக்கும் ஜனங்கள் கத்துகின்றனர் என லக்ஷணை முறையால் பொருள் கொள்ளுவதுபோல அத்தகைய ப்ரம்ஹவித்யையை யுபதேசிக்கும் நூலும் லக்ஷணைமுறையால் உபநிஷத் என்றே சொல்லப்படுகிறது. இதில் பதினெட்டு மந்திரங்களடங்கி இருக்கின்றன. அவற்றுள் முதலாவது "ईशा वास्यमिदं सर्वम्' ("ஈஶாவாஸ்யமிதம் ஸர்வம்") என்ற மந்திரத்தால் ஸர்வ ஏஷணாபரித்யாக பூர்வகமான க்ஞானநிஷ்டையும், "कुर्वन्नेवेह कर्माणि" ("குர்வந்நேவேஹ கர்மாணி") என்ற இரண்டாவது மந்திரத்தால் அத்தகைய க்ஞான நிஷ்டைக்கு அந்தரங்கஸாதனமான நிஷ்காமகர்மநிஷ்டையும் சொல்லப்படுகிறது. அந்த முதல் மந்திரம் பின்வருமாறு—

பதவுரை.—जगत्याम्(ஜகத்யாம்)=பூமியில், जगत्(ஜகத்)=அசையும்பொருளும், किञ्च (கிஞ்ச)=மேலும், सर्वम्(ஸர்வம்)=ப்ரத்யக்ஷம், அனுமானம்,சப்தம் இவற்றால் அறியப்படுவதும், यत्(யத்)=யாதுண்டோ इदम् (இதம்)=இவையாவும், ईशा (ஈஶா)=பரமாத்மக்ஞானத்தால், वास्यम् (வாஸ்யம்)=மறைக்க (போக்க) த்தக்கதாகவாகிறது. तेन (தேந)=ஆனதுபற்றி=ப்ரத்யக்ஷம் அனுமானம் சப்தம் முதலிய ப்ரமாணங்களாலறியப்படும் த்வைத பதார்த்தங்கள் யாவும் பரமாத்மக்ஞானத்தினுல் நாசமடையக்கூடியதாக இருப்பதுபற்றி त्यक्तेन

𑌈𑌶𑌾𑌵𑌾𑌸𑍍𑌯𑌮𑌿𑌦𑌂 𑌸𑌰𑍍𑌵𑌂 𑌯𑌤𑍍𑌕𑌿𑌞𑍍𑌚 𑌜𑌗𑌤𑍍𑌯𑌾𑌂 𑌜𑌗𑌤𑍍 ।
𑌤𑍇𑌨 𑌤𑍍𑌯𑌕𑍍𑌤𑍇𑌨 𑌭𑍁𑌞𑍍𑌜𑍀𑌥𑌾 𑌮𑌾 𑌗𑍃𑌧𑌃 𑌕𑌸𑍍𑌯𑌸𑍍𑌵𑌿𑌦𑍍𑌧𑌨𑌮𑍍 ॥ ௧ ॥

ईशावास्यमित्यादि॥ ईशा=ईष्ट इतीट्, तेनेशा। ईशिता परमेश्वरः परमात्मा सर्वस्य। स हि सर्वमीष्टे सर्वजन्तूनामात्मा सन् प्रत्यगात्मतया, तेन स्वेन रूपेणात्मनेशा वास्यम्=आच्छादनीयम्। किं? इदम् सर्वम्, यत्किञ्च=यत्किञ्चित्, जगत्याम्=पृथिव्यां जगत्तत्सर्वं स्वेन आत्मना ईशेन प्रत्यगात्मतयाहमेवेदं सर्वमिति परमार्थसत्यरूपेणानृतमिदं सर्वं चराचरमाच्छादनीयं

(𑌤𑍍𑌯𑌕𑍍𑌤𑍇𑌨)=த்யாகத்தினால்=பற்றையொழித்தலினால், भुञ्जीथाः(𑌭𑍁𑌞𑍍𑌜𑍀𑌥𑌾𑌃)=ஆத்மாவைக்காப்பாற்றிக்கொள்ளுவாயாக. मागृधः(𑌮𑌾𑌗𑍃𑌧𑌃)= ஆசையையே அடியோடு ஒழிப்பாயாக. धनम् (𑌧𑌨𑌮𑍍)=நீ ஆசைப் படக்கூடிய பொருள் कस्य स्वित् (𑌕𑌸𑍍𑌯𑌸𑍍𑌵𑌿𑌤𑍍)=எவனுக்கிருக்கிறது. அதாவது:—பரமாத்மஜ்ஞானத்தைத் தவிர்த்து ஆசைப்படக்கூடிய பொருள் ஓரிடத்திலும் இல்லை என்றும். (1) (எ—று)

முதலாவது மந்திரத்தின் சங்கரபாஷ்யம்.

ईशावास्यमित्यादि (𑌈𑌶𑌾𑌵𑌾𑌸𑍍𑌯𑌮𑌿𑌤𑍍𑌯𑌾𑌦𑌿)=ईशा (𑌈𑌶𑌾)= ईष्टे इति ईट् तेन ईशा (𑌈𑌷𑍍𑌟𑍇 𑌇𑌤𑌿 𑌈𑌟𑍍 𑌤𑍇𑌨 𑌈𑌶𑌾) அதாவது:—ஈஶ ஐஶ்வர்யே என்றதாதுவின்மேல் क्विप् (𑌕𑍍𑌵𑌿𑌪𑍍) என்ற ப்ரத்யயம் வைத்தால் ईट् (𑌈𑌟𑍍) என்ற ரூபமேற்படும். எதையும் தனததீனமாக (தன் வசப்பட்டதாக) ச்செய்யக்கூடியவன் என்பது அதன் பொருள். ஆகவே அந்த ஈஶ்வரனால் என்றும். பரமேஶ்வரனான பரமாத்மா ஸர்வத்துக்கும் ஈஶிதாவாகிறார். அவரன்றோ ப்ரத்யகாத்மாவாகவாவதன் மூலம் ஸர்வஜந்துக்களுக்கும் ஆத்மாவாக இருந்துகொண்டு ஸர்வத்துக்கும் ஈசனாகிறார். அந்தச் சொந்த ரூபமான ஈசனான ஆத்மாவினால் வாஸ்யமாக = மறைக்கத்தக்கதாகவாகிறது. எது ? இவையாவும், ஜகதியில்=பிருதிவியில் எந்த ஜங்கமப் பொருளுண்டோ அவையாவும் சொந்தமான ஈஶனாகிற ஆத்மாவினால் அதாவது:—'ப்ரத்யகாத்மாவாகவிருத்தல்பற்றி நானே இவையாவும்' என்பதாய் பரமார்த்த ஸத்யரூபத்தினால் அநிருதமான=அழியக் கூடியதான, அசையுமசையாப்பொருள் ரூபமான இவையாவும் (சொந்தப்

போல எஞ்ஜியகாலத்தில் உபாஸனத்தையும் அவ்விதமே முறை பிறழாது செய்துவரவேண்டுமென்றும் அதனாற்றான் இவர் கோரிய பெரும் பயனையடையலாமென்றும் நிஸ்சிதமாயறியப்படுகிறது. अविद्यया मृत्युं तीर्त्वा विद्ययाऽमृतमश्नुते (அவித்₃யயா ம்ருத்யும் தீர்த்வா வித்₃யயாऽம்ருதமஶ்நுதே)=அவித்யையினால் (கர்மத்தினால்) மிருத்யுவை (இயற்கையிலமைந்துள்ள கர்மத்தையும் அஞ்ஞானத்தையும்) விட்டு நீங்கி உபாஸனத்தினால் ஆபேக்ஷிகாமிருதத்வத்தை (ஸகுணபகவல்லோகப்ராப்தியை) அடைகிறான் என்று தனித்த பலன் சொல்லப்பட்டிருப்பதும், முந்திய கர்மநிஷ்டைக்குத்தனித்த பலன் சொல்லப்படாதிருப்பதுமே அதன் காரணமாகும். ஆகவே இந்த 9, 10, 11 ஆகிய 3 மந்திரங்களால் விதிக்கப்பட்ட கர்ம பகவதுபாஸனங்கள் ஸாகர ஆந்தர ஸ்தூல தேசபந்தம் என்ற முறையில் சேர்ந்ததுகவாகிவிட்டன. 12, 13, 14 இந்த மூன்று மந்திரங்களிலோ ஸாகார ஆந்தர ஸ்தூல தேசபந்தம் என்ற முறையிலீடுபட்டவர்க்கு அதற்கடுத்தபடியான நிராகார ஸூக்ஷ்ம தேசபந்தநிலையில் பிரவிருத்தியேற்படவேண்டியது அவஸ்யமாதலால் அதற்குவேண்டி ஸாகாரபகவதுபாஸனத்தைச் செய்து எஞ்ஜிய காலத்தில் நிராகாரமானதும் ஸுஷுப்தி சுகானுஸந்தானம் போன்றதுமான ப்ரகிருதிஸ்வரூபாநுஸந்தானம் செய்தலைச் சாஸ்திரம் விதித்திருப்பதாக ஏற்படுகிறது.

சங்கை—ஸாகாரபகவதுபாஸனஞ் செய்பவர்க்கு ஸமாதிநிலையேற்பட்டு அந்நிலையிலேயே அவர் வெகுகாலம் இருக்கநேரலாமானதால் அக்காலம் நிராகார ப்ரகிருதியனுஸந்தானமேற்பட இடமில்லாமல் போகக்கூடுமன்றோ எனின்?

உத்தரம்—அவ்விஷயத்தில் பின்வருமாறு காண்க. அதாவது: ஸாகாரபகவதுபாஸனத்தில் ஸமாதிநிலையேற்படுமாயின் அந்நிலை கலைந்து வ்யுத்தானம் நேரக்கூடுமாதலால் அச்சமயத்தில் நிராகார ப்ரகிருத்யனுஸந்தானத்தைச் செய்து இதிலும் ஸமாதியேற்படுமாயின் இதனின்றும் வியுத்தானமேற்பட்டபின்னரே திரும்பவும் பகவதுபாஸனத்தைச்செய்து இவ்விதமாக ஒன்றன்பின்னொன்றாக முறையே இவ்வழியில் பழகிவரவேண்டுவது அவஸ்யமாகிறது. இவ்விரண்டாவது வழியில் பழகிவருகிறவர்க்குத் தமது உபாஸனமஹிமையால்

ஸத்குருலாபமும் மஹாவாக்யோபதேசமும் ஏற்பட்டு ஸ்வரூபாவஸ்தானரூபமான முக்தியேற்படுமாயின் “न तस्य प्राणा उत्क्रामन्ति” (“ந தஸ்ய ப்ராணா உத்க்ராமந்தி’’) “न तस्मात्प्राणा उत्क्रामन्ति” (“ந தஸ்மாத்ப்ராணா உத்க்ராமந்தி’’) என்றபடி இவரது ப்ராணாதிகளுக்கு ஆத்ம ஸ்வரூபத்தில் லயமேற்பட்டு ஸத்யோமுக்தியையடைந்துவிடுகிறார். அவ்விதமேற்படாதவர்க்கு உத்தமலோகப்ராப்தியேற்படுகிறபடியால் அதற்குவேண்டிய மார்க்கப்ரார்த்தனை 15, 16, 17, 18 இந்தமந்திரங்களால் செய்யப்படுகிறது. ஆயினும் உபாஸனா காலத்திலுள்ள வைராக்கியாதிகளை முன்னிட்டு அந்த லோகத்திலிருந்தபடியே ப்ரம்ஹாத்மைக்ய ஸாக்ஷாத்காரமேற்பட்டு விதேஹ முக்தியையடைந்தவராகவுமவர் ஆகிவிடலாம். இதைத்தான் கிரம முக்தியென்கின்றனர். அவ்விதமில்லாது உபாஸனாகாலத்தில் ராகாதிகளின் சேஷமிருக்குமாயின் உபாஸனாபலத்தால் உத்தமலோகத்தை யடைந்து அப்பலன் உள்ளவரை அங்கிருந்து பிறகு திரும்பி தமது பரிபாகத்துக்குத் தக்கபடி பூமியில் தீமான்களான யோகிகளுடையவோ சுத்தர்களான ஜனகாதிகள் போன்ற ஸ்ரீமான்களுடையவோ குலத்தில் பிறந்து பின்னர் அங்கிருந்து முயர்ச்சித்து ஸ்வரூபாவஸ்தான முக்தியையடைந்தவர்களாக ஆகின்றனர் என்பதை இங்குள்ள ஸ்ருதி தெளிவாயுபதேசிக்காவிடினும் வேறுசாஸ்திரங்களைக்கொண்டு கண்டுகொள்ளவேண்டும். ஆகவே இத்தகைய மஹாபலனையுபதேசிக்கும் இந்த உபநிஷத்தையும், அதன் சங்கரபாஷ்யத்தையும் குருநாதனுடைய அருளால் எமது சிற்றறிவுக்கெட்டியவளவு தமிழில் பெயர்த்து வெளியிட்டிருப்பதில் ஏதேனும் சொற்பிழை பொருட்பிழையிருக்குமாயின் பண்டித ரத்தினங்கள் நியாயமான வழியில் அதை எடுத்துக்காட்டித் திருத்தவுதவும்படி வேண்டுகிறேன். அவ்விதமுதவும் மஹான்களின் பெயரை அடுத்தபதிப்பில் வெளியிட்டு அவர்கள் பெயரால் அதைத் திருத்தியும் வெளியிட ஒருபொழுதும் தவறமாட்டேன் என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

இங்ஙனம் சங்கரகிங்கரன்

கடலங்குடி நடேச சாஸ்திரிகள்,

கஸ்தூரிரெங்கவிலாஸ், நடேசய்யர் தெரு, மாம்பலம், சென்னை.

[25–10–1932.]

விஷய அட்டவணை.

	பக்கம்.
"ஈசாவாஸ்யம்" என்றதாதி மந்திரங்கள் கர்மாவுக்கு அங்கமாயாகாத ஆத்மாவின் உண்மையான நிலையைத் தெரிவிப்பதால் கர்மாங்கமாகவாவதில்லை என்பதை ஸ்தாபித்தல் ...	1, 2
இந்த உபநிஷத்துக்கு "ஈஶாவாஸ்யம்" என்று பெயர் வைத்ததற்குக் காரணம் கூறல் ...	3
"ஈஶாவாஸ்யம்" என்ற முதல் மந்திரார்த்தம் ...	,,
"குர்வந்நேவ" என்ற இரண்டாவது மந்திரார்த்தம் ...	7
ஆத்மவித்துக்கு ஞானநிஷ்டையை முதல் மந்திரத்தால் உபதேசித்து, ஆத்மக்ஞானமற்றவனுக்கு கர்மநிஷ்டையை உபதேசித்தல் ...	8
ஸந்யாஸிக்கு க்ஞானநிஷ்டையும், ஆத்மக்ரஹணாசக்தனுக்கு கர்மநிஷ்டையும் கொள்ளவேண்டுமென்பதை யுக்திபூர்வகமாய் ஸ்தாபித்தல் ...	9
"அஸூர்யாநாம" என்ற மூன்றாவது மந்திரார்த்தம் ...	10
மூன்றாவது மந்திரத்தால் அவித்வானை நிந்தித்தல் ...	11
ஆத்மக்ஞானமற்றவர் ஆத்மஹனனம் செய்தவராகின்றனர் என்பதை ஸ்தாபித்தல் ...	,,
"அநேஜதேகம்" என்ற 4-வது மந்திரத்தின் அர்த்தம் ...	12
ஆத்மஸ்வரூபமித்தகையது என்பதை 4-வது மந்திரத்தாலுபதேசித்தல் ...	13
உபாதி சப்தார்த்த நிரூபணம் ...	,,
"ததேஜதி" என்ற ஐந்தாவது மந்திரார்த்தம் ...	16
4-வது மந்திரத்தால் கூறியதையே நன்கு போதமேற்பட வேண்டி 5-வது மந்திரத்தாலும் கூறல்	17, 18
"யஸ்து ஸர்வாணி பூதானி" என்ற மந்திரார்த்தம் ...	19
விதிவிலக்குகளைக்கடந்த ஜீவன் முக்தஸ்வரூபத்துடனிருத்தலே இதுவரை சொல்லிய ஆத்மக்ஞானத்தின் பலனாகும் என்பதை ஆறாவது மந்திரத்தால் உபதேசித்தல் ...	,,
"யஸ்மின் ஸர்வாணி பூதானி" என்ற மந்திரார்த்தம்	20
6-வது மந்திரம் கூறியதையே வேறொரு மந்திரம் கூறுவது	,,
"ஸபர்யகாத்" என்ற மந்திரார்த்தம்	21

		பக்கம்.
முன் சென்ற மந்திரங்களால் எந்த ஆத்மா உபதேசிக்கப் பட்டதோ அது தனது. சொரூபத்தினால் எந்த லக்ஷணமுடையதென்பதைக் கூறல்	...	22, 23
ஸந்யாஸிகளுக்கு ஞானநிஷ்டையும், கர்மிகளுக்கு உபாஸனம், கர்மம் இவற்றின் ஸமுச்சயமும் கொள்ளத் தக்கதென விரிவாய் கூறல்	....	24, 27
"அந்தம்தம:" என்ற மந்திரார்த்தம்	...	28
உபாஸனா கர்மங்களுக்கு ஸமுச்சயத்தைக் கூறுவதற்காக தனித்த உபாஸனத்தையும், தனித்த கர்மத்தையும் 9-வது மந்திரத்தால் நிந்தித்தல்	...	,,
"அந்யதேவாஹு:" என்ற மந்திரார்த்தம்	...	29
வித்யாவித்யைகளுக்கு ஸமுச்சயகாரணமான பலபேதத்தைக் கூறல்	....	,,
"வித்யாஞ்சாவித்யாஞ்ச" என்ற மந்திரார்த்தம்	...	30
"அந்தம்தம:" என்ற மந்திரார்த்தம்	....	32
வ்யாகிருதோபாஸனம், அவ்யாகிருதோபாஸனம் இவற்றுக்கு ஸமுச்சயத்தைக் கூறவேண்டி தனித்தனியே அனுஷ்டானத்தை நிந்தித்தல்	...	,,
"அந்யதேவாஹு:" என்ற மந்திரார்த்தம்	....	33
வ்யாகிருதாவ்யாகிருதோபாஸனங்களுக்கு ஸமுச்சய காரணமான தனித்தனியே பலபேதத்தைக் கூறல்	....	34
"ஸம்பூதிஞ்ச விநாசஞ்ச" என்ற மந்திரார்த்தம்	....	35
வ்யாகிருதா வ்யாகிருதோபாஸனங்களுக்கு ஸமுச்சயத்தைக் கூறல்	...	,,
"ஹிரண்மயேந பாத்ரேண" என்ற மந்திரார்த்தம்	...	37
ஸகுண ப்ரம்ஹோபாஸகன் ஸூர்யமண்டல மார்க்கத்தை ப்ராணோத்க்ரமண தசையில் யாசித்தல்	....	,,
"பூஷந்நேகர்ஷே" என்ற மந்திரார்த்தம்	....	38
"வாயுரநிலம்" என்ற மந்திரார்த்தம்	...	40
"அக்னேநய" என்ற மந்திரார்த்தம்	...	41
முக்கியமான பரமாத்ம வித்யைக்கும், கர்மத்துக்கும் ஏன் ஸமுச்சயங்கொள்ளக்கூடாதென்ற ஆக்ஷேபமும், ஸமாதானமும்	....	42, 48

விஷய அட்டவணை முற்றிற்று.

॥ ओं नमो भगवते वासुदेवाय ॥

। ईशावास्योपनिषत् ।

ईशावास्यमित्यादयो मन्त्राः कर्मस्वविनियुक्ताः, तेषामकर्मशेषस्यात्मनो याथात्म्यप्रकाशकत्वात्। याथात्म्यं चात्मनः शुद्धत्वापापविद्धत्वैकत्वनित्यत्वाशरीरत्वसर्वगतत्वादि वक्ष्यमाणम्। तच्च कर्मणा विरुध्येतेति युक्त एवैषां कर्मस्वविनियोगः। नह्येवं लक्षणमात्मनो याथात्म्यमुत्पाद्यं विकार्यमाप्यं संस्कार्यं कर्तृभोक्तृरूपं वा, येन कर्मशेषता स्यात्। सर्वा-

---

ஈசாவாஸ்யோபநிஷத்.

அவதாரிகா பாஷ்யம்.— "ईशावास्यम्" ("ஈசாவாஸ்யம்") என்றதாதிகளான மந்திரங்கள் கர்மங்களில் விநியோகப்படக்கூடியனவன்று. ஏன்? அவை கர்மாங்கமாகவாகாத ஆத்மாவினது யாதாத்ம்யத்தை (உண்மையான நிலையை) விளக்குகின்றனவாக இருப்பதே அதன்காரணமாகும். சுத்தத்தன்மை, பாபஸம்பந்தமற்றதன்மை, ஒன்றாகவிருக்குந்தன்மை, நித்யமான தன்மை, சரீரஸம்பந்தமற்றதன்மை, எங்கும் நீக்கமற நிறைந்திருக்கும் தன்மை முதலிய ஆத்மாவினது உண்மையான நிலையோ பின்னர் சொல்லப்படப் போகிறது. அவ்வாத்மநிலை கர்மத்துடன் முரண்படுவதுபற்றி இம்மந்திரங்களுக்குக் கர்மங்களில் விநியோகமின்மையானது பொருந்தக்கூடியதே. இத்தகைய லக்ஷணமுள்ள ஆத்மாவினது யாதாத்ம்யமானது=உண்மையான நிலையானது, உத்பாத்யமாக (உண்டுபண்ணக்கூடியதாக)வோ, விகார்யமாக(மாறுபாட்டையடைவிக்கக்கூடியதாக)வோ, ஆப்யமாக

सामुपनिषदामात्मयाथात्म्यनिरूपणेनैवोपक्षयात्। गीतानां मोक्षधर्माणां चैवं परत्वात्। तस्मादात्मनोऽनेकत्वकर्तृत्वभोक्तृत्वादि च, अशुद्धत्वपापविद्धत्वादि चोपादाय लोकबुद्धिसिद्धं कर्माणि विहितानि। यो हि कर्मफलेनाऽर्थी दृष्टेन ब्रह्मवर्चसादिना अदृष्टेन स्वर्गादिना च 'द्विजातिरहं न काणकुब्जत्वाद्यनधिकारप्रयोजकधर्मवान्' इत्यात्मानं मन्यते सोऽधिक्रियते कर्मस्विति ह्यधिकारविदो वदन्ति। तस्मादेते मन्त्रा आत्मनो याथात्म्यप्रकाशनेनात्मविषयं स्वाभाविकमज्ञानं निवर्तयन्तः शोकमोहादिसंसार-

---

(அடையக்கூடியதாக)வோ, ஸம்ஸ்கார்யமாக (புதிதாக அதிசயத்தை
யடைவிக்கக்கூடியதாக)வோ, கர்த்ருபோக்த்ருரூபமாகவோ ஆக
மாட்டாதன்றோ. அவ்விதமானாலன்றோ இதற்குக் கர்மசேஷத்துவம்
(கர்மாங்கமாகவிருத்தல்) ஸம்பவிக்கும். எல்லா வுபநிடதங்களும்
ஆத்மாவின் உண்மையான நிலையை விளக்குவதுடனேயே யன்றோ
முடிவுபெறுகின்றன. பகவத்கீதையும் (பாரதத்தில்) மோக்ஷ தர்ம
மும் இவ்விதமாகவேதான் முடிவுபெறுகின்றன. ஆகவே (வெகு
ஜன்மப்பழக்கங்காரணமாய்) ஆத்மவிஷயமாக லோகபுத்தி ஸித்த
மான அனேகத்வம், கர்த்ருத்வம், போக்த்ருத்வம் முதலியவற்றை
யும், அசுத்தமாகவிருத்தல் பாபஸம்பந்தம் பெற்றிருத்தல் முதலிய
வற்றையும் பின்பற்றிக்கொண்டு (சாஸ்திரங்களில்) கர்மங்கள் விதிக்
கப்பட்டன. எவனொருவன் திருஷ்டமான ப்ரம்ஹவர்ச்சஸம் முத
லியனவும் அதிருஷ்டமான ஸ்வர்க்கம் முதலியனவுமான கர்மபல
னில் விருப்பமுள்ளவனோ, 'நான் ப்ராம்ஹணன், கர்மாதிகாரத்தை
மறுக்கும் பொட்டை, நொண்டி முதலிய தர்மமற்றவன்' என ஆத்
மாவை எண்ணுகின்றானோ அவன் கர்மங்களில் அதிகாரத்தை அடைகி
றான் என்றல்லவோ கர்மாதிகார முறையறிந்தவர்கள் சொல்லுகின்
றனர். ஆகவே இந்த மந்திரங்கள் ஆத்மாவினது உண்மையான
நிலையை ப்ரகாசப்படுத்தும் வாயிலாக ஆத்மவிஷயமாகவுள்ள ஸ்வா
பாவிகமான (வெகு ஜன்மப்பழக்கம் காரணமாகவேற்பட்ட) அஞ்
ஞானத்தைப் போக்குகின்றனவாய்க்கொண்டு சோகம் மோஹம்
முதலிய ஸம்ஸார தர்மங்களின் அழிவுக்கு ஸாதனமான ஆத்மை
கத்வ விக்ஞானத்தை உண்டுபண்ணுகின்றன. இவ்விதம் சொல்லப்

முதலிலவஶ்யமாகிறது. இதையே "देशबन्धश्चित्तस्य धारणा" ("தேஶபந்தஶ்சித்தஸ்ய தாரணா") எனப் பதஞ்ஜலி உபதேசித்தார். வெளியிலுள்ள பகவன் மூர்த்திகளில் சித்தத்தை நெருத்துதல் தாரணை எனப்படும் என்பது அதன் பொருள். இதற்குவேண்டியே நமது சாஸ்திரங்களில் பகவத்விக்ரஹாராதனம் சொல்லப்பட்டிருக்கிறது. இது ஸாகார பாஹ்யதேசபந்தமென்றும் நிராகார பாஹ்யதேசபந்தமென்றும் இருவகைப்படும். இவற்றுள் பஞ்சலோகங்கள் கொண்டு சாஸ்திரங்களிற் சொல்லிய முறைப்படி தனது இஷ்டதைவத்தின் மூர்த்தியைத்தயாரித்து அதில் பூஜாதிகாலங்களிலும் வேறு ஸமயங்களிலும் அசைவில்லாது மனத்தை நிறுத்துதல் ஸாகாரபாஹ்யதேசபந்தமாகும். அதுபோலல்லாது சாஸ்திரத்திற் சொல்லிய முறைப்படி ஸ்வர்ணாதித் தகடுகளில் யந்திரமமைத்து அதில் சாஸ்திரத்திற் சொல்லியபடி தனது இஷ்டதேவதையைத் தியானித்தல் நிராகாரபாஹ்யதேசபந்தமெனப்படும். இதையே "யதாபிமதத்யானுத்வா" (பாதஞ்ஜல. பாதம் 1, ஸூ. 39) என்றதால் பதஞ்ஜலி உபதேசித்திருக்கிறார். இவ்விரண்டிலும் ஸித்திபெற்றவன் ஸாகார ஆந்தரதேசபந்தத்தில் அதிகாரம் பெறுகிறான். இவ்வழியைப் பதஞ்ஜலியும் "ஸ்வப்நநித்ரா ஜ்ஞாநாலம்பனம்வா" (பாதஞ்ஜல. பாதம் 1. ஸூ. 38) என்றதாலுபதேசித்திருக்கிறார். ஸ்வப்பனத்திலும் ஸுஷுப்தியினும் அறியப்பட்ட வஸ்துவை விழித்தெழுந்தபின்னர் த்யானஞ்செய்கின்ற சித்தமானது நிலைபெறுகின்றது என்பது அதன் பொருள். சுத்தஸத்வமயமாயும் மிக்கமிக்க ரமணீயமாயுமுள்ள ஆண்டவனுடைய ஸ்ரீமூர்த்தியை ஆவலுடன் பூஜிப்பதாக ஸ்வப்பனங்கண்டு உடன்விழித்தெழுந்ததும் ஸ்வப்பனத்திற்கண்ட ஆண்டவனது அம்மூர்த்தியை ஜாக்கிரத்தில் இடையறாது தியானித்தல் ஸ்வப்பனஜ்ஞானாலம்பனமாகும். இது ஸாகாரமான ஆந்தரதேசாலம்பனமாகும். இந்த ஸாகார ஆந்தரதேசாலம்பன விஷயத்தில் ஸ்ரீமத்ராமாயண ஸ்ரீமத்பாகவதாதி கதாஸ்ரவணமுபயோகத்தையடைகிறது. அதாவது:—பகவத்கதா ஸ்ரவணத்தினால் பகவத்ஸ்வரூபஸ்வபாவகுணமாதுர்யாதி ஜ்ஞானமேற்பட்டு அத்தகைய பகவத்ஸ்வரூபத்தை ஏகாந்தமான இடத்திலிருந்து தியானித்தலுக்கு இதன் மூலம் ஸௌகரியமேற்படுகிறது என்றும். ஆனதுபற்றியேதான் மஹான்களான துறவிகள்கூட ஸ்ரீமத்பாகவதத்தை ஸ்ர

வணஞ்செய்தும், செய்வித்தும் வருகின்றனர் என்றேற்படுகிறது. "ஸுஷுப்தியில் நான் ஸுகமாகத்தூங்கினேன்" என விழுத்தெழுந்ததும் முன்னர் சொன்னபடிக்கான எவ்வித ஆகாரத்தோற்றமுமில்லாமல் எவ்விதவுருவமுமற்ற சுகவிஷயமான நினைவேவருவதால் அத்தகைய சுகானுபவநிலையை மனத்தாற் சிந்தித்தல் நிராகார ஆந்தரதேசாலம்பனமெனப்படும்.

இந்த உபநிஷத்தில் 1-வது மந்திரத்தால் ஸன்னியாஸ நிஷ்டையும், 2-வது மந்திரத்தால் அதில் அதிகாரம் பெறுவதற்குவேண்டி நிஷ்காமகர்மநிஷ்டையும், 3-வது மந்திரத்தினுல் அவித்வன்னிந்தையும், 4 முதல் 8 முடியவுள்ள 5 மந்திரங்களால் ப்ரம்ஹாத்மைக்ய க்ஞானநிஷ்டையும் உபதேசிக்கப்பட்டன. அத்தகைய க்ஞான நிஷ்டை அகண்டாகாராந்தக்கரண விருத்தியின்றியமையாததலால் அதற்குவேண்டி 9, 10, 11 ஆகிய 3 மந்திரங்களால் சாஸ்திரத்தில் சொல்லிய கர்மானுஷ்டானத்தை விதிப்படிசெய்து எஞ்ஜியகாலத்தில் ஸகுணபகவதுபாஸனமும் விதிக்கப்பட்டன.

சங்கை—இரண்டாவது மந்திரத்தால் நிஷ்காமகர்மநிஷ்டை விதிக்கப்பட்டிருக்கத் திரும்பவும் இவ்விடத்தில் அதைவிதித்த சுருதியின் கருத்து யாதெனில்?

உத்தரம்—கூறுவாம். முன்னர் விதித்த கர்மநிஷ்டையானது ப்ரம்ஹானுஸந்தானத்துக்கு இன்றியமையாத ஸன்னியாஸநிஷ்டை ஸித்திக்கவேண்டி மட்டும் விதிக்கப்பட்டமையின் அது கேவலகர்மநிஷ்டையாகமட்டுமேதானகும். அதில் பிரவிருத்திப்பவர்க்கு உபாஸனத்தின் ஆவஶ்யகதையோ அஃதின்மையோ விதிக்கப்படவில்லை. இவ்விடத்திலோ கர்மானுஷ்டானத்தை முறைதவறாது செய்து எஞ்ஜியகாலத்தில் ஸகுணபகவதுபாஸனத்தையும் நியமமாகவே முறைதவறாது ப்ரதிதினமும் செய்துவரவேண்டுமென விதிக்கப்படுகிறது. மேலும் முன்னர்சொன்ன நிஷ்காமகர்மநிஷ்டையை ஒருவன் செய்யத்தொடங்கி அதை யனுஷ்டித்து வருங்கால் வைராக்யமேற்பட்டால் அக்கர்மநிஷ்டையை விதிபூர்வமாக விட்டுவிட்டு ஸன்னியாஸாஶ்ரமத்தை மேற்கொண்டு ஆத்மவிசாரநிஷ்டராகமட்டுமிருக்கலாம். இதில் தவறு எதுவும் சொல்லுவதற்கில்லை. இவ்விடத்திலோவெனில் சாஸ்திரீய கர்மங்களை முறைப்படி தவறாது செய்யவேண்டுவது

स्वेन परमात्मना। यथा चन्दनागर्वादेरुदकादिसंबन्धजक्लेदादिजमौपाधिकं दौर्गन्ध्यं तत्स्वरूपनिघर्षणेनाच्छाद्यते स्वेन पारमार्थिकेन गन्धेन। तद्वदेव हि स्वात्मन्यध्यस्तं स्वाभाविकं कर्तृत्वभोक्तृत्वादिलक्षणं जगद्द्वैतरूपं जगत्यां पृथिव्याम्, जगत्यामित्युपलक्षणार्थत्वात्सर्वमेव नामरूपकर्माख्यं विकारजातं परमार्थसत्यात्मभावनया त्यक्तं स्यात्। एवमीश्वरात्मभावनया युक्तस्य पुत्राद्येषणात्रयसन्यास एवाधिकारो न कर्मसु। तेन त्यक्तेन=त्यागेनेत्यर्थः। नहि त्यक्तो मृतः पुत्रो वा भृत्यो वा आत्मसंबन्धिताया अभावादात्मानं पालयति। अतस्त्यागेनेत्ययमेव वेदार्थः। भुञ्जीथाः=पालयेथाः। एवं

பரமாத்மரூபத்தினுல்) மறைக்க (ப்போக்க) த்தக்கதாகவாகிறது. சந்தனம் அகரு (அகில்) முதலியவற்றுக்கு ஜலம் முதலியவற்றின் சேர்க்கையாலுண்டான நனைவு முதலியவற்ருலேற்பட்ட ஔபாதிகமான கெட்ட நாற்றமானது அதனது ஸ்வரூபத்தைச் செதுக்குதல் முதலியவற்ருல் உண்டான சொந்தமான உண்மையான நறுமணத்தினுல் எவ்விதம் மறைக்கப்படுகிறதோ அவ்விதமே சொந்தமான ப்ரத்யகாத்மாவினிடத்தில் அத்யஸிக்கப்பட்டதும் ஸ்வாபாவிகமும் (வெகு ஜன்மப்பழக்கத்தாலேற்பட்டதும்) கர்த்ருத்வ போக்த்ருத்வ ரூபமானதுமான ஜகதியில்=பூமியிலுள்ள த்வைதரூபமான ஜகத்தானது, பரமார்த்த ஸத்யமான ஆத்மபாவனையால் விடப்பட்டதாகவாகிறது. இங்கு ஶ்ருதியில் जगत्याम् (ஜகத்யாம்) என்றதானது உபலக்ஷணமுறையால் நாமரூபகர்மங்களெனப்பெயரிய எல்லாக் காரியஸமூஹத்தையும் கூறுகிறது. இவ்விதம் ஈஶ்வராத்மபாவனையுடன் கூடினவனுக்குப் புத்திராதிகளான ஏஷணாத்ரயத்தின் ஸன்னியாஸத்தில் அதிகாரமேயொழிய கர்மங்களில் அதிகாரமானது கிடையாது. அதனுல் त्यक्तेन (த்யக்தேந) என்றதற்கு தியாகத்தினுல் எனப் பொருளேற்படுகிறது. பரித்யாகம் செய்யப்பட்டோ, இறந்தோ, போனபுத்திரனே, வேலைக்காரனே ஆத்மஸம்பந்தம்பெருதிருப்பனபற்றி அவற்ருல் ஆத்மாவை காக்கானன்றே? ஆனதுபற்றி த்யாகத்தால் என்றேதான் ஶ்ருதியின் பொருளேற்படுகிறது. भुञ्जीथाः (புஞ்ஜீதா:) என்றதற்குப்பாலனஞ்செய்வாயாக என்பது பொருள். இவ்விதம் பரித்யாகஞ் செய்யப்பட்ட ஏஷணையையுடைய நீ ஆசை

त्यक्तैषणस्त्वं, मागृधः=गृधिमाकाङ्क्षां माकार्षीर्धनविषयाम्। कस्यस्विद्धनम्=कस्यचित्परस्य स्वस्य वा धनं माकांक्षीरित्यर्थः। स्विदित्यनर्थको निपातः। अथवा—मागृधः। कस्मात्? कस्यस्विद्धनमित्याक्षेपार्थः, न कस्यचिद्धनमस्ति यद्गृध्येत। आत्मैवेदं सर्वमितीश्वरभावनया सर्वं त्यक्तमत आत्मन एवेदं सर्वम्, आत्मैव च सर्वम्, अतो मिथ्याविषयां गृधिं माकार्षीरित्यर्थः ॥ १ ॥

யைப்படையாதே. அதாவது: தன விஷயமான ஆசையைக் கொள்ளாதே. *कस्य स्विद्धनम् (கஸ்யஸ்வித்தநம்) இனிவரும் சரீரத்தை ஸம்பந்தித்ததாகவோ, இந்தச் சரீரத்தை ஸம்பந்தித்ததாகவோவுள்ள தனத்தை விரும்பாதே என்பது பொருள். स्वित् (ஸ்வித்) என்பது பொருளற்ற சப்தமாகும் அல்லது ஆசைப்படாதே. ஏன்? कस्य स्विद्धनम् (கஸ்யஸ்வித்தநம்) என்பதற்கு ஆக்ஷேபித்தல் பொருளாகும். அதாவது; எது உன்னால் ஆசைப்படக்கூடுமோ அத்தகைய பொருள் ஒருவனுக்குமில்லையன்றோ என்றும். இவையாவும் ஆத்மாவே என ஈஶ்வரபாவனையால் எல்லாம் பரித்யாகம் செய்யப்பட்டது. ஆகவே இவையாவும் ஆத்மாவினிடமிருந்தே உண்டாயிற்று. எல்லாம் ஆத்மாவேயாகும். ஆகவே மித்யாபூதமான விஷயத்தையுடைய ஆசையைச் செய்யாதே என்பது பொருள். (1) (எ—று)

குறிப்பு—இந்த முதலாவது மந்திரத்தின் பூர்வார்த்தத்தினால் (முற்பாதியினால்) தத்துவோபதேசமும், பிற்பாதியின் முதற்பாதத்தினால் ஞ்ஞான பரிபாகமில்லாதவனுக்கு ஸன்னியாஸ விதியும், இரண்டாவது பாதத்தினால் ஸன்னியாஸிக்கு நியமவிதியும் உபதேசிக்கப்பட்டது.

அவதாரிகா பாஷ்யம்—இவ்விதம் ஆத்மவித்துக்கு புத்திராதி

---

*இங்கு பாஷ்யத்தில் कस्यचित्परस्य स्वस्य वा धनम् (கஸ்யசித்பரஸ்ய ஸ்வஸ்யவாதநம்) என்றவிடத்தில் பரஸ்ய என்றதற்கு இனிவரும் சரீர ஸம்பந்தமுள்ளது என்றும், ஸ்வஸ்ய என்றதற்கு இந்தச்சரீர ஸம்பந்தமுள்ளது என்றும் எமது ஆசிரியர் பொருளுபதேசித்திருப்பதையொட்டி இவ்விதமெழுதப்பட்டது.

एवमात्मविद: पुत्राद्येषणात्रयसंन्यासेनात्मज्ञाननिष्ठतयात्मा रक्षितव्य इत्येष वेदार्थ:। अथेतरस्यानात्मज्ञतयात्मग्रहणायाशक्तस्येदमुपदिशति मन्त्र:।

कुर्वन्नेवेह कर्माणि जिजीविषेच्छतं समा: ।
एवं त्वयि नान्यथेतोऽस्ति न कर्म लिप्यते नरे ॥ २ ॥

குர்வந்நேவேஹ கர்மாணி ஜிஜீவிஷேச்சதம் ஸமா: ।
ஏவம் த்வயி நாந்யதேதோऽஸ்தி நகர்ம லிப்யதே நரே ॥ ௨ ॥

कुर्वन्नेवेति। कुर्वन्नेव इह=निर्वर्तयन्नेव कर्माणि=अग्निहोत्रादीनि,जिजीवि

களாகிற ஏஷணாத்ரயத்தின் ஸந்நியாஸத்தினால் ஆத்மக்ஞானநிஷ்டை ஏற்படுதல்வாயிலாக ஆத்மா ரக்ஷிக்கத்தக்கது என்ற இது முதல் மந்திரத்தின் பொருள். பிறகு இந்த இரண்டாவது மந்திரமானது மற்றவன் ஆத்மக்ஞானமற்றவனாகவிருப்பதுபற்றி ஆத்மக்ரஹணத்தையும் பொருட்டு அசக்தனாகவாகிறான். அவ்விதமிருப்பவனுக்குப் பின்வரும் ஸாதனத்தை இரண்டாவது மந்திரம் உபதேசிக்கிறது—

(ப—ரை) [य: (ய:)=எவன்] शतं समा: (ஶதம் ஸமா:)=நூறு வருஷங்கள், जिजीविषेत् (ஜிஜீவிஷேத்)=ஜீவித்திருக்கவிருப்புவனோ [स: (ஸ:)=அவன்] इह (இஹ)=இப்பிறவியில் कर्माणि (கர்மாணி)= கர்மங்களை कुर्वन्नेव (குர்வந்நேவ) = செய்துகொண்டே ஜீவிக்க விரும்பவேண்டும். एवम (ஏவம்)=இம்முறையாக ஜீவிக்கவிரும்புகின்றவனும் नरे (நரே)=நரன்=மனிதன், என்றுமட்டுமான அபிமானமுள்ளவனுமான त्वयि (த்வயி)=உன்னிடத்தில் इत: (இத:)= கர்மாவைச் செய்துகொண்டிருக்கும் முறையைக்காட்டிலும் अन्यथा (அந்யதா)=வேறு முறையானது न (ந)=கிடையாது. [येन प्रकारेण (யேந ப்ரகாரேண)=எம்முறையினால்] कर्म (கர்ம)=கர்மமானது, न लिप्यते (ந லிப்யதே)=லேபத்தை யடையாதோ அதாவது: பந்தத்தையுண்டாக்காதோ என்றும். (2) (எ—று)

பாஷ்யம்.—இங்கு அக்னிஹோத்ராதிகளான கர்மங்களைச் செய்துகொண்டே நூறு எண்களுள்ள வருஷங்கள் ஜீவித்திருக்க விரும்பவேண்டும். அவ்வளவு வரையிலன்றோ புருஷனுக்குப் பரமாயுள் நிரூபிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே எக்காரணம்பற்றி நூறு

षेत् जीवितुमिच्छेत्, शतम्=शतसंख्याकाः, समाः=संवत्सरान्। तावद्धि पुरुषस्य परमायुर्निरूपितम्। तथा च प्राप्तानुवादेन यज्जिजीविषेच्छतं वर्षाणि तत्कुर्वन्नेव कर्माणीत्येतद्विधीयते। एवम्=एवं प्रकारेण, त्वयि=जिजीविषति, नरे=नरमात्राभिमानिनि, इतः=एतस्मादग्निहोत्रादीनि कर्माणि कुर्वतो वर्तमानात्प्रकारात्, अन्यथा=प्रकारान्तरं नास्ति, येन प्रकारेण अशुभं कर्म न लिप्यते, कर्मणा न लिप्यत इत्यर्थः। अतः शास्त्रविहितानि अग्निहोत्रादीनि कर्माणि कुर्वन्नेव जिजीविषेत्। कथं पुनरिदमवगम्यते? पूर्वेण मन्त्रेण सन्न्यासिनो ज्ञाननिष्ठोक्ता। द्वितीयेन तदशक्तस्य कर्मनिष्ठेत्युच्यते। ज्ञानकर्मणोर्विरोधं पर्वतवदकम्प्यं यथोक्तं न स्मरसि किम्?। इहाप्युक्तं "यो हि जिजीविषेत् स कर्म कुर्वन्। ईशावास्यमिदं सर्वं, तेन त्यक्तेन

வருஷங்கள் ஜீவித்திருக்க விரும்புவானே அக்காரணம்பற்றி கர்மங்களைச் செய்துகொண்டே என்ற இது விதிக்கப்படுகிறது. एवम् (ஏவம்) இம்மாதிரியான त्वयि (த்வயி) ஜீவிக்கவிரும்புகின்ற नरे (நரே)=நரமாத்ராபிமானியான உன்னிடத்தில் इतः (இதஃ) அக்னிஹோத்ராதிகளான (நித்ய) கர்மங்களைச்செய்துகொண்டிருக்கும் இம்முறையைக் காட்டிலும், अन्यथा (அந்யதா) வேறு முறையானது, न (ந) இல்லை. அதாவது:—எம்முறையினால் அசுபகர்மமானது லேபத்தை (ஒட்டுதலை) யடையாதோ அம்முறை (வேறு) இல்லையென்றும். கர்மத்தினால் லேபத்தையடைவதில்லை என்பதுபொருள். ஆனது பற்றி சாஸ்திரவிஹிதங்களான அக்னிஹோத்ராதிகளான (நித்ய) கர்மங்களைச்செய்துகொண்டே ஜீவிக்கவிரும்பவேண்டும்.

சங்கை—முன்னுள்ள மந்திரத்தினால் ஸன்னியாஸிக்கு க்ஞான நிஷ்டை சொல்லப்பட்டது. அதில் சக்தியற்றவனுக்கு இரண்டாவது மந்திரத்தினால் கர்மநிஷ்டை சொல்லப்பட்டது என்ற இது எதனாலறியப்படுகிறது எனின் ?

உத்தரம்—சொல்லப் .டுகிறது. மலைபோல அசைக்கவியலாத முன்சொன்ன க்ஞானகர்மவிரோதத்தை ஏன் க்ஞாபகத்தில் வைக்கின்றாயில்லை. இவ்விடத்திலும் எவனொருவன். ஜீவிக்க விரும்புவானோ அவன் கர்மத்தைச் செய்கின்றவனாகவேண்டும் என்றும், இவை

भुञ्जीथाः, मागृधः कस्यस्विद्धनम्" इति च। न जीविते मरणे वा गृधिं कुर्वीत "अरण्यमियादितिच पदम्। ततो न पुनरियात्" इति सन्न्यासशासनात्। उभयोः फलभेदं च वक्ष्यति। "इमौ द्वावेव पन्थानावनुनिष्क्रान्ततरौ भवतः, क्रिया पथश्चैव पुरस्तात्सन्न्यासश्चोत्तरेण" निवृत्तिमार्गेण एषणात्रयस्य त्यागः। तयोस्सन्न्यासपथ एवातिरेचयति। "न्यास एवात्यरेचयत्" इतिच तैत्तिरीयके।

"द्वाविमावथ पन्थानौ यत्र वेदाः प्रतिष्ठिताः।
प्रवृत्तिलक्षणो धर्मो निवृत्तश्च विभावितः॥"

इत्यादि पुत्राय विचार्य निश्चितमुक्तं व्यासेन वेदाचार्येण भगवता। विभागश्चानयोर्दर्शयिष्यामः ॥ २ ॥

யாவும் பரமாத்மக்ஞானத்தினல் மறைக்கத்தக்கது, அதனல் த்தியாகத்தினல் (ஸர்வஸங்கபரித்யாகத்தினல்) ஆத்மாவை ரக்ஷித்துக் கொள்ளுவாயாக. ஒருவனுடைய தனத்திலும் ஆசை கொள்ளாதே என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. ஜீவிதத்திலோ, மரணத்திலோ ஆசை கொள்ளாதே. "அரண்யத்தை (ஆத்மவிசாரத்துக்கு விரோதியான ஜனமற்றவிடத்தை) யடைவாயாக என்பது உபதேசமாகும். அதனின்றும் மறுபடியும் திரும்பிவருதல் தகாது" என ஸன்னியாஸம் விதிக்கப்பட்டுமிருக்கிறது. க்ஞானம், கர்மம் இரண்டுக்கும் பலன் வேறு என்பதைச் சொல்லவும் போகிறது. இவ்விரண்டே மார்க்கங்கள் ஸிருஷ்டிகாலந்தொட்டுத்தொடர்ந்து வருகின்றனவாக வாகின்றன. முதலில் கர்ம மார்க்கமும், பின்னர் ஸன்னியாஸ மார்க்கமுமாம். நிவிருத்தி மார்க்கத்தினல் ஏஷணாத்ரயத்தின் தியாகமேற்படுகிறது. அவ்விரண்டனுள் ஸன்னியாஸமார்க்கமே மேம்பட்டதாகவாகிறது. "ந்யாஸமே (ஸன்னியாஸமே) மேம்பாடுடையதாகவாயிற்று" எனத்தைத்திரீயகத்தில் கூறப்பட்டிருக்கிறது. "எதில் வேதங்கள் நிலைபெறுகின்றனவோ இவ்வழிகள் இரண்டேயாகும். அவற்றுள் ஒன்று ப்ரவிருத்தி லக்ஷண தர்மமென்றும், மற்றென்று நிவிருத்தி லக்ஷண தர்மமென்றும் அறியப்பட்டது" என்றதாதியாய் வேதாசாரியரும் பகவானுமான வியாஸரால் விசார பூர்வகமாகத்

अथेदानीमविद्वन्निन्दार्थोऽयं मन्त्र आरभ्यते ॥

असुर्या नाम ते लोका अन्धेन तमसाऽऽवृताः ।
तांस्ते प्रेत्याभिगच्छन्ति ये केचात्महनो जनाः ॥ ३ ॥

அஸுர்யா நாம தே லோகா அந்தேந தமஸாऽऽவ்ருதா꞉ ।
தாꣳஸ்தே ப்ரேத்யாபிகச்சந்தி யே கேசாத்மஹநோ ஜநா꞉ ॥

असुर्याः=परमात्मभावमद्वयमपेक्ष्य देवादयोऽप्यसुराः, तेषां च स्वभूता लोका असुर्या नाम । नामशब्दोऽनर्थको निपातः। ते लोकाः=कर्म-

---

தனது புத்திரனையும் பொருட்டு நிஶ்சிதமாகவே சொல்லப்பட்டிருக்கிறது. இவ்விரண்டுகளுடையவும் விபாகத்தை (பேதத்தை) ப்பின்னர் காண்பிக்கவும் போகின்றோம். (2) (எ—று)

(அ—கை) முதலாவது மந்திரத்தின் பொருளை விரித்துரைக்க வேண்டி முதன் முதலில் அவித்வானுடைய நிந்தையானது செய்யப்படுகிறது.

(ப—ரை) आत्महनः (ஆத்மஹந꞉)=ஆத்மஹத்தி செய்துகொள்ளும் जनाः (ஜநா꞉)=ஜனங்கள் ये के च (யே கே ச)=எவர்களுண்டோ ते (தே)=அவர்கள் असुर्या नाम (அஸுர்யா நாம)=இந்திரியாதி சரீரங்களில் ஆத்மபுத்தியுள்ளவர்களுக்கென ஏற்பட்டனவும், अन्धेन तमसा (அந்தேந தமஸா)=அஜ்ஞானமாகிற இருளினல் आवृताः (ஆவ்ருதா꞉)=சூழப்பட்டனவும், ते (தே)=பிரஸித்தங்களுமான लोकाः (லோகா꞉)=ஜன்மங்கள் எவையுண்டோ तान् (தாந்)=அப்பிறவிகளை ते (தே)=அவர்கள் प्रेत्य (ப்ரேத்ய)=மரணத்துக்குப் பின்னர் अभिगच्छन्ति (அபிகச்சந்தி)=அடைகின்றனர். (3) (எ—று)

பாஷ்யம்.—பிறகு இதுபொழுது அவித்வானை நிந்திக்கவேண்டி இந்த மந்திரமானது ஆரம்பிக்கப்படுகிறது. இரண்டற்ற பரமாத்மபாவத்தை யபேக்ஷித்து *தேவாதிகளும் அசுரரேயாவர். அவர்க

---

* பரமாத்மஜ்ஞானமில்லாது தேஹாத்யபிமானமுள்ளவர் தேவர்களாயினும் அவர் அஸுரரென்றே சொல்லப்படுவர் என்பது பாஷ்யத்தின் கருத்து.

फलानि लोक्यन्ते दृश्यन्ते भुज्यन्त इति जन्मानि। अन्धेन=अदर्शनात्मकेन अज्ञानेन तमसा आवृता:=आच्छादिता:। तान्=स्थावरान्तान्, प्रेत्य=त्यक्त्वा इमं देहमभिगच्छन्ति यथा कर्म यथाश्रुतम्। येके चात्महन:=आत्मानं घ्नन्तीत्यात्महन:। केते जना:? ये अविद्वांस:। कथं त आत्मानं नित्यं हिंसन्ति। अविद्यादोषेण विद्यमानस्यात्मनस्तिरस्करणात्। विद्यमानस्यात्मनो यत्कार्यं फलमजरामरत्वादिसंवेदनलक्षणं तद्धतस्येव तिरोभूतं भवतीति प्राकृताविद्वांसो जना: आत्महन उच्यन्ते। तेन ह्यात्महननदोषेण संसरन्ति ते ॥ ३ ॥

ளுக்குச் சொந்தமாகவான லோகங்கள் அஸுர்யங்கள் எனப்படும். ஶ்ருதியிலுள்ள नाम (நாம) என்ற சப்தத்துக்குப் பொருள் எதுவுமில்லை. அந்த லோகங்கள் அதாவது:—கர்மபலன்கள் லோகிக்க (பார்க்க புஜிக்க) ப்படுவனவற்றி பிறவிகள் லோகங்கள் எனப்படும். அந்தமான=அதர்சனரூபமான அக்ஞானமாகிற தமஸ்ஸினுல் ஆவிருதர்களாய் அதாவது: மறைக்கப்பட்டவர்களாய் அவைகளை ஸ்தாவராந்தங்களை ப்ரேத்ய=இந்தத் தேஹத்தைவிட்டு கர்மத்துக்குத் தக்கபடியும் உபாஸனத்துக்குத் தக்கபடியும் அடைகின்றனர். येकेचात्महन: (யெகெஆத்மஹந:) ஆத்மாவைக் கொல்லுவதுபற்றி ஆத்மஹநநஞ் செய்பவராவர். அந்த ஜனங்கள் எவர்கள் எனின்? எவர்கள் அவித்வான்களோ அவர்களேயாவர். அவர்கள் நித்யமான ஆத்மாவின் ஹிம்ஸையைச் செய்கின்றனர் என்பது எங்ஙனம் எனின்? அவித்யா தோஷத்தினுல் இருக்கின்றவனுகவேயுள்ள ஆத்மாவை மறைப்பதுபற்றியே என்க. இருக்கின்றவனுகவே உள்ள ஆத்மாவினுடைய அஜரத்தன்மை, அமரத்தன்மை முதலியவற்றை ஸாக்ஷாத்கரித்தல் ரூபமான யாதொரு பலனுகிற காரியமுண்டோ அது ஹதனுக்கு (கொல்லப்பட்டவனுக்கு) ப்போல மறைக்கப்பட்டதாகவாவதுபற்றி ப்ரகிருதிவசப்பட்ட அவித்வான்களாகிற ஜனங்கள் ஆத்மஹநநஞ் செய்கின்றவர்களெனப்படுகின்றனர். அந்த ஆத்மஹனன தோஷத்தாலேயே யன்றோ அவர்கள் ஸம்ஸாரத்தை (ஜனன மரணத்தை) அடைந்தவராகின்றனர். (3) (எ—று)

यस्यात्मनो हननादविद्वांसः संसरन्ति, तद्विपर्ययेण विद्वांसो जना-मुच्यन्तेऽनात्महनः तत्कीदृशमात्मतत्त्वमिति । उच्यते ॥

अनेजदेकं मनसो जवीयो नैनद्देवा आप्नुवन्पूर्वमर्षत् ।
तद्धावतोऽन्यानत्येति तिष्ठत्तस्मिन्नपो मातरिश्वा दधाति ॥

அநேஜதேகம் மநஸோ ஜவீயோ நைநத்தேவா ஆப்நுவந்பூர்வமர்ஷத் । தத்தாவதோऽந்யாநத்யேதி திஷ்டத்தஸ்மிந்நபோ மாதரிஶ்வா ததாதி ॥ ௪ ॥

அவதாரிகா பாஷ்யம்.—எந்த ஆத்மாவினது ஹனனத்தால் அவித்வான்கள் ஸம்ஸாரத்தை (ஜனன மரணத்தை) அடைகின்றனரோ அதற்கு நேர்மாறாக ஆத்மஹனனம் செய்யாத வித்வான்களான ஜனங்கள் முக்தியையடைகின்றனரோ அந்த ஆத்மதத்துவமானது எத்தகையது எனின்? அது அடுத்த மந்திரத்தினால் சொல்லப்படுகிறது—

(ப-ரை) तत् (தத்)=அந்த ஆத்மதத்துவமானது, अनेजत् (அநேஜத்)=அசைவற்றதாகவும் அதாவது:—தனது நிலையினின்றும் வழுவாததாகவும்=எப்பொழுதும் ஒரே ரூபமுள்ளதாகவும் एकम् (ஏகம்)=ஒன்றாகவும், मनसो जवीयः (மநஸோ ஜவீய:)=ஸங்கல்பாதிரூபமுள்ள மனத்தைக்காட்டிலும் மிக்கவேகமாகச் செல்லுவதாகவும், உள்ளது. [यत् (யத்)=யாது காரணத்தால்] पूर्वमर्षत् (பூர்வமர்ஷத்)=வேகமுள்ள மனத்தைக்காட்டிலுங்கூட முன்னர் செல்லுகின்றதோ [तत्(தத்)=அக்காரணம் பற்றி] एनत् (ஏநத்)=இந்த ஆத்மதத்வத்தை देवाः (தேவா:)=இந்திரியங்கள் नाप्नुवन् (நாப்நுவந்)=அடைகின்றனவில்லை. तत् (தத்)=அந்த ஆத்மதத்துவமானது तिष्ठत् (திஷ்டத்)=தான் எவ்வித விகாரமுமற்றதாக விருந்து கொண்டு धावतः (தாவத:)=வேகமாகச் செல்லுகின்ற अन्यान् (அந்யாந்)=மனம் வாக் இந்திரியம் முதலியவற்றை अत्येति (அத்யேதி)=அதிக்கிரமித்துச் செல்லுவது போலவாகிறது. तस्मिन् (தஸ்மிந்)=சைதன்யஸ்வபாவமுள்ள அந்த ஆத்மதத்துவத்தினிடத்தில் அதாவது:—ஸர்வாதிஷ்டான சின்மாத்ர ஆத்மாதீனமாகவே என்றும். मातरि-

अनेजदिति। अनेजत्=न एजत्। एजृ कम्पने। कम्पनम्=चलनम्, स्वावस्था प्रच्युतिः। तद्वर्जितं सर्वदैकरूपमित्यर्थः। तच्चैकं सर्वभूतेषु, मनसः=सङ्कल्पादि लक्षणात्, जवीयः=जववत्तरम्। कथं विरुद्धमुच्यते–'ध्रुवं निश्चलमिदं मनसो जवीयः' इति च। नैष दोषः। निरुपाध्युपाधिमत्त्वेनोपपत्तेः। तत्र निरु-पाधिकेन स्वेन रूपेणोच्यते—अनेजदेकमिति। मनसोऽन्तःकरणस्य

श्वा (மாதரிஶ்வா)=ஸர்வஸமஷ்டி சரீரியான ஹிரண்யகர்ப்பர். अपः (அப:)=பிராணிகளின் சேஷ்டாரூபங்களான கர்மங்களை दधाति (தயாதி)=விபாகம் பண்ணுகிறார் அதாவது:—அவரவர் கர்மங்களை அவரவர்வழுவாது நடத்தும்படி செய்விக்கிறார் என்றும். (4) (எ-று)

பாஷ்யம்.—அனேஜத்=ஏஜனமற்றது. ஏஜ்ரு என்றதாதுவுக்கு கம்பனம்=அசைதல் தனது நிலையினின்றும் நழுவுதல் என்பது பொருள். ஆகவே அநேஜத் என்றதால் அஃதற்றது எப்பொழுதும் ஒரேரூபமாகவுள்ளது என்ற பொருளேற்படுகிறது. அதுவும் எல்லாப்பூதங்களிலும் ஒன்றேயாகும். ஸங்கல்பாதிரூபமான மனத்தைக் காட்டிலும் ஜவீய:=மிக்கவேகமுள்ளதுமாகும்.

சங்கை—"இது த்ருவம்=நிஶ்சலம். (ஆனால்) மனத்தைக் காட்டிலும் வேகமாகச் செல்லக்கூடியது" என முறண்பட்டவுபதேசஞ் செய்யப்படுவது எங்ஙனமெனின்?

உத்தரம்—இந்தத் தோஷமிங்கில்லை. * உபாதியற்றிருத்தல் உபாதியுடன் கூடியிருத்தல் இவற்றின் மூலம் இது பொருந்தக்கூடியதாகவே ஆகிறது. அவ்விரண்டனுள் உபாதிஸம்பந்தமற்ற ஸ்வரூபத்தினால் அனேஜத் என உபதேசிக்கப்படுகிறது. ஸங்கல்ப

---

* उपाधि (உபாதி) என்பதற்கு उप (உப) தனதருகில் வந்த பொருளிடத்தில் आधि (ஆதி) தனது தர்மத்தை ஆதானம் செய்வது (வைப்பது) என்ற வ்யுத்பத்தியாகையால் அவித்தை அந்தக் கரணம் முதலியன தன்னுடன் இணைபிரியாது பிரகாசிக்கின்ற ஆத்மாவினிடத்தில் தனது தர்மமான அஜ்ஞத்வ ஜடதுக்காத்மத்தன்மையையும் கர்த்ருத்வாதிகளையும் ஆரோபித்து விடுவனபற்றி இவை உபாதி என்ற சப்தத்தால் வேதாந்தத்தில் சுருக்கமாக உபதேசிக்கப்படுவனவாகக் கொள்ளவும்.

सङ्कल्पविकल्पलक्षणस्योपाधेरनुवर्तनादिह देहस्थस्य मनसो ब्रह्मलोकादिदूरगमनं सङ्कल्पेन क्षणमात्राद्भवतीत्यतो मनसो जविष्ठत्वं लोके प्रसिद्धम्। तस्मिन्मनसि ब्रह्मलोकादीन् द्रुतं गच्छति सति प्रथमं प्राप्त इवात्मचैतन्यावभासो गृह्यते अतो मनसो जवीय इत्याह। नैनद्देवा:= द्योतनाद्देवाश्चक्षुरादीनीन्द्रियाणि, एनत्=प्रकृतमात्मतत्त्वं, नाप्नुवन्=न प्राप्तवन्त:। तेभ्यो मनो जवीय:, मनोव्यापारव्यवहितत्वात्। आभासमात्रमप्यात्मनो नैव देवानां विषयी भवति। यस्माज्जवनान्मनसोऽपि पूर्वमर्षत्=पूर्वमेव गतम्। व्योमवद्व्यापित्वात्सर्वव्यापि तदात्मतत्त्वं सर्वसंसारधर्मवर्जितं, स्वेन निरुपाधिकेन स्वरूपेणाविक्रियमेव सदुपाधिकृता:

விகல்பரூபமானதும் அந்த:கரணரூபமுமான மனதாகிற உபாதியை அனுவர்த்திப்பதால் (உபாதியுடன் கலந்தது போலத் தோற்றுவ தால்) இப்பிறவியில் தேஹத்திலிருக்கும் மனத்துக்கு ப்ரம்ஹலோ கம் முதலிய தூரதேசகமனமானது ஸங்கல்பத்தினுல் க்ஷணமாத் திரத்துக்குள் ஏற்படுவதுபற்றி மனத்துக்கு வேகமுள்ளதாக இருத் தல் உலகில் பிரஸித்தமாகவே காணப்படுகிறது. அந்தமனதானது ப்ரம்ஹலோகாதிகளைக் குறித்து வேகமாகச் செல்லுங்கால் ஆத்ம சைதன்யத்தின் அவபாஸமானது=பிரகாசமானது இதற்கு முன்ன ரே அங்கு ப்ராப்தமானதுபோல கிரஹிக்கப் படுகிறது. ஆனது பற்றி மனத்தைக் காட்டிலும் வேகமுள்ளது என ஶ்ருதி கூறிற்று. नैनद्देवा: (நைநத்தேவா:) பிரகாசிப்பன பற்றி கண்முதலிய இந்திரி யங்களாகிற தேவர்கள் இந்த ப்ரகிருதமான ஆத்மதத்துவத்தை அடைந்தனவில்லை. கண் முதலியவற்றைக் காட்டிலும் மனது மிக்க வேகமுள்ளது. மனோவியாபாரத்தை யொட்டி இவற்றின் வியாபாரம் ஏற்படுவதாக விருக்கிறது. ஆகவே இந்திரியங்களுக்கு ஆத்மாவினது ஆபாஸமாத்திரங்கூட விஷயமாக வாவதில்லை. யாது காரணம் பற்றி மிக்கவேகமுள்ள மனத்தைக் காட்டிலுங்கூட முன் னராகவே சென்றுவிடுகிறதோ அக்காரணம்பற்றியே என்க. ஆகாச மானது போல எங்கும் நிறைவு பெற்றிருப்பதுபற்றி ஸர்வவியாபி யான அந்த ஆத்மதத்துவமானது ஸர்வஸம்ஸாரதர்மமும் அற்றதாக

सर्वाः संसारविक्रिया अनुभवतीवाविवेकिनां मूढानामनेकमिव च प्रतिदेहं प्रत्यवभासत इत्येतदाह। तद्धावतः=द्रुतं गच्छतः, अन्यान्=आत्मविलक्षणान्मनोवागिन्द्रियप्रभृतीन्, अत्येति=अतीत्य गच्छतीव। इवार्थं स्वयमेव दर्शयति। तिष्ठदिति। स्वयमविक्रियमेव सदित्यर्थः। तस्मिन्=आत्मतत्त्वे सति नित्यचैतन्यस्वभावे, मातरिश्वा=मातरि अन्तरिक्षे श्वयति गच्छतीति मातरिश्वा वायुः; सर्वप्राणभृत्क्रियात्मकः यदाश्रयाणि कार्यकरणजातानि, यस्मिन्नोतानि प्रोतानिच, यत्सूत्रसंज्ञकं सर्वस्य जगतो

வும் உபாதி ஸம்பந்தமற்ற தனது சொரூபத்தினுல் எவ்விதவிகாரமுமே அற்றதாகவு மிருந்து கொண்டு உபாதியினுற் செய்யப்பட்ட எல்லா ஸம்ஸார விக்ரியைகளையும் அனுபவிப்பதுபோலவும் பகுத்தறிவற்ற மூடர்களுக்கு ஒவ்வொரு தேஹந்தோரும் அனேகம் போலவும் தோன்றுகிறது என்பதைச் சுருதி சொல்லுகிறது. அந்த ஆத்மதத்துவமானது धावतः(யாவதః) வேகமாகச்செல்லுகின்ற அன்யங்களை=ஆத்மாவைக் காட்டிலும் வேறுபட்ட மனம் வாக்கு இந்திரியம் முதலியவற்றைக் கடந்து செல்லுவதுபோலவாகிறது. (சுருதியிலிருக்கவேண்டிய) * इव (ஊவ) என்ற சப்தத்தின் பொருளை திஷ்டத் என்றதால் தானுகவே ஸ்ருதி காண்பிக்கிறது. அதாவது: தான் எவ்வித விகாரமுமற்றதாகவே இருந்துகொண்டு என்பது அதன் பொருள். तस्मिन् (தஸ்மிு) நித்யசைதன்ய ஸ்வரூபமான அந்த ஆத்மதத்வமானது இருக்குங்கால் मातरिश्वा (மாதரிஸ்வா) मातरि (மாதரி) ஆகாசத்தில் श्वयति(ஸ்வயதி) செல்லுகிறது ஆனதுபற்றி எல்லா ஜீவர்களுடையவும் கிரியாத்மகமான வாயுவானது மாதிரிஸ்வா என்றதாற்சொல்லப்படும். அதாவது: காரியகரணஸமூஹங்கள் எதையாஸ்ரயித்தனவாய் எதில் ஓதப்ரோதங்களாக விருக்கின்றனவோ ஸூத்ராத்மா என்ப்பெயரிய எது எல்லா ஜகத்தையும் தரிக்கிறதோ

---

* சுருதியில் अत्येति (அத்யேதி) என்றுமட்டுமேதான் காணப்படுகிறது. ஆயினும் அத்யேதீவ என்பதாய் இவ என்ற சப்தத்தையும் சேர்த்துக்கொண்டு பாஷ்யத்தில் உரை செய்யப்பட்டது. இங்கு இவ என்ற சப்தமிருப்பது அவஸ்யமென்பதை ஸ்ருதியே तिष्ठत् (திஷ்டத்) என்றதால் தெரிவிக்கிறது என்பது பாஷ்யத்தின் கருத்து.

विधारयितृ स मातरिश्वा। अपः=कर्माणि प्राणिनां चेष्टालक्षणानि। अग्न्यादित्यपर्जन्यादीनां ज्वलनदहनप्रकाशाभिवर्षणादिलक्षणानि दधाति=विभजतीत्यर्थः। धारयतीतिवा। "भीषास्माद्वातः पवते" इत्यादिश्रुतिभ्यः। सर्वा हि कार्यकरणादिविक्रिया नित्यचैतन्यात्मस्वरूपे सर्वास्पदभूते सत्येव भवन्तीत्यर्थः ॥ ४ ॥

न मन्त्राणां जामितास्तीतिपूर्वमन्त्रोक्तमप्यर्थं पुनराह—

तदेजति तन्नैजति तद्दूरे तद्वन्तिके।
तदन्तरस्य सर्वस्य तदु सर्वस्यास्य बाह्यतः ॥ ५ ॥

ததே³ஜதி தந்நைஜதி தத்³தூ³ரே தத்³வந்திகே ।
தத³ந்தரஸ்ய ஸர்வஸ்ய தது³ ஸர்வஸ்யாஸ்ய பா³ஹ்யத: ॥ ௫ ॥

அந்த வாயுவே மாதரிஶ்வா எனப்படும் என்றும். ப்ராணிகளுடைய சேஷ்டாரூபங்களான கர்மங்கள் அப: என்றதால் சொல்லப்படும். ஆகவே அக்னி ஆதித்யன் பர்ஜன்யம் முதலியவற்றின் முறையே ஜ்வலனதஹநம், ப்ரகாசம், வர்ஷணம் முதலிய ரூபங்களான கர்மங்களை दधाति (த³தா⁴தி) அததற்குத்தக்கபடி (மாதரிஶ்வா) பிரித்துக் கொடுக்கிறது என்பது பொருள். அல்லது தரிக்கச் செய்கிறது என்றுவது பொருள் கொள்ளலாம். "இவரிடமிருந்து பயத்தினுல் காற்று வீசுகிறது" என்றதாதி ஶ்ருதிகளிருக்கின்றன. காரிய கரணுதிகளின் விக்ரியைகள் (சேஷ்டைகள்) யாவும் ஸர்வத்துக்கும் ஆஸ்பதமாக=அதிஷ்டானமாகவான நித்யசைதன்னியாத்ம ஸ்வரூபமானது இருப்பதினுல்தான் (ஆத்ம நிமித்தமாகவேதான்) ஏற்படுகின்றன என்பது இந்தமந்திரத்திலுள்ள தஸ்மின் அபோ மாதரிஶ்வா என்றபாகத்தின் பொருள். (4) (எ—று)

(ப—ரை) तत् (தத்)=ப்ரகிருதமான அந்த ஆத்மதத்துவமானது एजति (ஏஜதி)=சலிக்கிறது. तत् (தத்)=அதுவே नैजति (நைஜதி)=ஸ்வயம் சலிப்பதேயில்லை. அதாவது: ஸ்வயம் சலனமற்றதாகவே இருந்துகொண்டு சலனமுள்ளதுபோலத் தோற்றத்தையடைகிறது என்றும். மேலும், तत् (தத்)=அந்த ஆத்மதத்துவமானது दूरे

तदेजतीति । तत्=आत्मतत्वं यत्प्रकृतं तदेजति=चलति, तदेव च नैजति=स्वतो नैव चलति । स्वतोऽचलमेव सञ्चलतीवेत्यर्थः । किञ्च,

---

(தூரெ)=நூறுகோடி வருஷங்களாலும் அவித்வான்களினல் அடையமுடியாதிருப்பதுபற்றி தூரத்திலிருப்பதுபோல வாகிறது. तत् (தத்)=அந்த ஆத்மதத்துவமானது अन्तिके उ (அந்திகெ உ)= வித்வான்களுக்கு ஆத்மாவாசவிருப்பதால் மிக்க ஸமீபத்திலேயே இருப்பதாகவாகிறது. இவற்ருல் கேவலம் தூரத்திலோ,ஸமீபத்திலோ இயற்கையில் அது இல்லை எனப்பெறப்பட்டது. तत् (தத்)=அந்த ஆத்மதத்துவமானது अस्य सर्वस्य (அஸ்ய ஸர்வஸ்ய)=நாமரூபக்ரியாத்மகமான இந்த எல்லா ப்ரபஞ்சத்துக்கும் अन्तः (அந்த:)=உள்ளிலிருக்கிறது. அதாவது:—ஸர்வாந்தரமாக இருக்கிறது என்றும். तदु (தது)=அந்த ஆத்மதத்துவமே अस्य सर्वस्य (அஸ்ய ஸர்வஸ்ய)= முற்கூறிய இவையாவற்றுக்கும் बाह्यतः (பாஹ்யத:)=வெளியிலிருக்கிறது. அதாவது:—உண்மையில் எங்கும் நீக்கமற நிறைவுபெற்றிருப்பதுபற்றி ஸர்வத்துக்கும் வெளியிலுள்ளதாகவும் ஆகாசம்போல மிக்க ஸூக்ஷ்மமாக இருப்பதுபற்றி ஸர்வப்பிரபஞ்சத்துக்கும் உள்ளிலிருப்பதாகவுமிருக்கிறது என்றும். (5) (எ—று)

பாஷ்யம்.—*மந்திரங்களுக்குச் சோம்பலில்லை ஆனதுபற்றி முந்தினமந்திரத்தினல் சொல்லப்பட்ட பொருளையே திரும்பவும் तदेजति (தத்ஏஜதி) என்றதாற் சொல்லுகிறது. ப்ரகிருதமான யாதொரு ஆத்மதத்துவமுண்டோ அது சலிக்கிறது. அதுவோ சலிப்பதுமில்லை. சொந்தமாகச் சலிப்பதேயில்லை. அதாவது:=ஸ்வயம் அசலமாகவே=சலனமற்றதாகவே, இருந்துகொண்டு சலிப்பது

---

* கூறினதுகூறல் என்ற தோஷமானது, உபதேசிப்பவருக்குச் சோம்பலிருப்பினும், உபதேசிக்கப்படும்பொருள் சுளுவில் ஒருதடவை உபதேசத்தினலேயே மனத்தில் நன்கு தைக்கக் கூடியதாகவிருப்பினும், உபதேசம்பெறுபவர் ஒருதடவை உபதேசத்தினலேயே நன்கு அப்பொருளைக் கிரஹிக்கக்கூடியவராக இருப்பினுந்தான் ஏற்படும். இவ்வாத்மதத்துவவிஷயத்திலோ அவ்விதம் சொல்லுவதற்கில்லையானதுபற்றி, கருணைக்கடலான சுருதியானது இவ்விஷயத்தில் சோம்பல் கொள்ளாது திரும்பத்திரும்ப உபதேசிக்கிறது என்பது கருத்து.

तद्दूरे=वर्षकोटिशतैरप्यविदुषामप्राप्यत्वाद्दूर इव । 'तत् उ अन्तिके' इति छेदः । तद्वन्तिके=समीपे अत्यन्तमेव विदुषाम् आत्मत्वात्, न केवलं दूरेऽन्तिके च । तदन्तः=अभ्यन्तरे, अस्य सर्वस्य । "य आत्मा सर्वान्तरः" इति श्रुतेः। अस्य सर्वस्य=जगतः नामरूपक्रियात्मकस्य तदु=अपि, सर्वस्यास्य बाह्यतः=व्यापकत्वादाकाशवन्निरतिशयसूक्ष्मत्वादन्तः। "प्रज्ञानघन एव" इति च शासनान्निरन्तरं च ॥ ५ ॥

यस्तु सर्वाणि भूतान्यात्मन्येवानुपश्यति ।
सर्वभूतेषु चात्मानं ततो न विजुगुप्सते ॥ ६ ॥

போலத் தோற்றத்தையடைகிறது என்பது பொருள். * மேலும், நூறுகோடி வருஷங்களினாலும் அவித்வான்களுக்கு ப்ராப்யமாக வாகாததால் அது தூரத்திலிருப்பதுபோல்வாகிறது. तद्वन्तिके (தவ ந்திகெ) என்றவிடத்தில் தத், உ, அந்திகே, எனப்பதங்களைப் பிரித்துக்கொள்ளவேண்டும். ஆத்மாவாகவிருப்பதால் வித்வான்களுக்கு முற்றிலுமே ஸமீபத்திலிருப்பதாகவாகிறது. கேவலம் தூரத்திலோ ஸமீபத்திலோ அது இல்லை எனப் பெறப்பட்டது. அது இவை யாவற்றுக்கும் अन्तः (அந்த:) அப்யந்தரத்தில்=உள்ளிலிருக்கிறது. "ஸர்வத்துக்கும் ஆந்தரமான=உள்ளிலிருப்பதான, யாதொரு ஆத்மாவுண்டோ" என ஸ்ருதியுமிருக்கிறது. நாமரூபக்ரியாத்மகமான இந்த எல்லாஜகத்துக்கும் வியாபகமாக=நீக்கமற நிறைவுள்ளதாக, இருப்பதுபற்றி வெளியிலிருப்பதாகவுமாகிறது. ஆகாசம் போல நிரதிசயஸூக்ஷ்மமாக=மிக்கமிக்க நுட்பமாக, இருப்பதுபற்றி இந்த (ஸ்தூலமான) எல்லாஜகத்துக்கும் உள்ளிலிருப்பதாகவுமாகிறது. "ப்ரக்ஞானகன ஏவ" (சைதன்யகனமானதே) எனச் சுருதியிருப்பதால் எவ்விதபேதமற்றதாகவுமாகும். (5) (எ—று)

(அ—கை) விதிவிலக்குகளைக் கடந்த ஜீவன் முக்தஸ்வரூபத்துடனிருத்தலே இதுவரை சொல்லிய ஆத்மக்ஞானத்தின் பலனாகும் என இம்மந்திரத்தாலுபதேசிக்கப்படுகிறது—

---

* சலனமுள்ளபொருளுடன் ஊடுருவிப்ரகாசிப்பதுபற்றி அதுசலிக்கும்கால் இதுவும் சலிப்பதுபோலத் தோற்றுகின்றதேயல்லாது இயற்கையில் இதனிடத்தில் எவ்விதசலனமுமில்லை என்பதுகருத்து.

யஸ்து ஸர்வாணி பூதாந்யாத்மந்யேவாநுபஶ்யதி।
ஸர்வபூதேஷு சாத்மாநம் ததோ ந விஜுகுப்ஸதே॥௬॥

முதலாவது கண்டத்திலுள்ள 8 மந்திரங்களுள் केनेषितम्...... देवो युनक्ति (കേനേഷിതം......ദേവോ യുനക്തി) என்ற முதல் மந்திரத்தினல் மனஸ், ப்ராணன், வாக்கு, சக்ஷுஸ், ஶ்ரோத்ரம் ஆகிய அசேதனங்களான இவை தத்தமக்குரிய விஷயங்களில் வழுவாது செல்லுவதிலிருந்து அவற்றை ப்ரேரிப்பவன் ஒருவனிருக்கவேண்டுமென்பது வெளிப்படை. அவன் உலகில் காணப்படுவதுபோலவே தான் மனம் முதலியவற்றை ப்ரேரணை செய்கின்றனா? அல்லது தனது ஸன்னிதிமாத்திரத்தினல் அவற்றின் ப்ரவிருத்திக்கு நிமித்தமாகின்றனா? அவன் யார்? அவனது ஸ்வரூபமென்னை? அவனை நான் எவ்விதமறிவது? அவனையறிவதால் வரும் பயன் என்னை? என உத்தமாதிகாரியான சிஷ்யன் தனது ஆசிரியரைக்கேட்கிறான். இவ்விதம் கேட்ட போக்யனான சிஷ்யனுக்குப் பதில் சொல்லத் தொடங்கின ஆசிரியர் "அது காதுக்குக் காது, மனதுக்கும் மனது, வாக்குக்கும் வாக்கு, ப்ராணனுக்கும் ப்ராணன், கண்ணுக்கும் கண்ணு" என எவர்கள் அதையறிந்து ஶ்ரோத்ராதிகளில் ஆத்மபாவத்தைப் போக்கிக்கொண்டு தீரர்களாகின்றனரோ அவர்கள் இந்தச் சரீரம்போனதும் முக்தர்களாகவாகின்றனர்" எனவுபதேசிக்கிறார். இவ்விதமுபதேசிக்கும் ஆசிரியரின் கருத்தியாதெனில்? ஶ்ரோத்ராதியான எல்லாவற்றுக்கும் ப்ரகாசகமான ப்ரம்ஹமே உள்ளில் ப்ரத்யகாத்மாவாகப் பிரகாசிப்பதாகவறிபவன் ஸம்ஸாரபந்தத்தினின்றும் விடுபட்டு முக்தனாகவாகிறான் என்பதாம். இவ்விதம் "श्रोत्रस्य ....अमृता भवन्ति" ("ശ്രോത്രസ്യ..........അമൃതാ ഭവന്തി") என்ற இரண்டாவது மந்திரத்தாலுபதேசித்து ப்ரம்ஹமானது சக்ஷுராதிகளான ஸர்வேந்திரியங்களுக்கும் புலப்படக்கூடியதன்று ஆனதுபற்றி உலகிலுள்ள பொருளைப்போல "இது இவ்விதமென" ப் பிரித்துக் காட்டக்கூடிய நிலையில் அந்த ப்ரம்ஹமில்லையாதலால் காரியகாரணரூபமான ஸர்வப்பொருளையும்விட வேறுபட்டது என்று தான் அதை ஒருவாறு அறியமுடியும் என "न तत्र चक्षुर्गच्छति... ...व्याचचक्षिरे" ("ന തത്ര ചക്ഷുർഗച്ഛതി......വ്യാചചക്ഷിരേ") என்ற மூன்றாவது மந்திரத்தாலுபதேசித்து எது வாகாதிகளுக்குப் புலப்படாததோ எதனல் வாகாதிகள் ப்ரகாசப்படுத்தப்பட்டு தத்தமது காரியத்தைச் செய்கின்றனவோ அதையே நீ ப்ரம்ஹமாக அறியவேண்டுமேயன்றி "இது இது" என அறிவுக்கெட்டும் பொருளை ப்ரம்ஹமாகவெண்ணுதல் தகாது என்பதாய் "यद्वाचानभ्युदि-तम्" ("യദ്വാചാനഭ്യുദിതം") 'என்று தொடங்கி "नेदं यदिदमु-

பாஸதே" ("தேஷாம் ததிஹோபாஸதே") என்றதீறுகவுள்ள ஐந்து மந்திரங்களாலுபதேசிக்கிறார். இதிலிருந்து ப்ரம்ஹம் உபாஸ்ய மான ஸகுணமன்றென்றும், ஜ்ஞேயமான நிர்க்குணமென்றும், அது வே ப்ரத்யகாத்மரூபமாக ப்ரகாசிக்கின்றதென்றும், ப்ரத்யக்ப்ரம்ஹ ஸாக்ஷாத்காரந்தான் முக்தி ஹேதுவென்றும் உபதேசிக்கப்பட்ட தாகவேற்படுகிறது. இவ்விதம் முதலாவது கண்டம் முற்றுகிறது. இவ்விதம் ஆசிரியராலுபதேசிக்கப்பட்ட சிஷ்யன் "நானே ப்ரம் ஹம்" என்பதாய் என்னை நான் நன்கு அறிவேன் என எண்ணி விடப்போகிறான் எனவாசங்கித்து ப்ரம்ஹத்தையறியும் முறையும், அவ்விஷயத்தில் வரும் சங்கைகளும், அதற்கு ஸமாதானங்களும், இப்பிறவியிலேயே அதையறிந்து மோக்ஷம் பெறல் வேண்டுமென வும் இந்த இரண்டாவது கண்டத்திலுபதேசிக்கப்படுகிறது. மூன் றுவது கண்டத்தில் இந்திராதி பதவி பெற்றிருப்பவரும் கூட குரூப தேசமின்றி அதையறியமுடியாதவரேயாகிறார் என்று உபதேசித்து நான்காவது கண்டத்தில் சித்தைகாக்ரிய ஹேதுவான ஸகுணப்ரம் ஹோபாஸனமும், முடிவில் அதன் பலனான நிர்க்குண ப்ரம்ஹாத் மைக்ய ஸாக்ஷாத்காரமும் உபதேசிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே இந்தக் கேனோபநிஷத்தானது தெளிவாய் ப்ரம்ஹாத்மைக்ய ஸா க்ஷாத்காரத்தை யுபதேசிப்பதாற்றான் ஔவையாரிடம் ஒருவர் சென்று எந்த உபநிடதார்த்த விசாரத்தால் நான் மோக்ஷமடையக் கூடுமோ அதை எனக்குச் சொல்லவேண்டுமெனக் கேட்டதற்கு "கேட்டதைக் கேனத்தில் தேடு" என ஔவையார் பதில் சொன்ன தாகவும் பெரியார் சொல்லுகின்றனர். ஆகவே இத்தகைய மஹி மை தங்கிய இவ்வுபநிடதத்தையும், அதன் சங்கர பாஷ்யத்தையும் எமது ஆசிரியர் அருளை முன்னிட்டு எனது சிற்றறிவுக்கெட்டிய வளவு தமிழில் பெயர்த்து வெளியிட்டிருக்கிறேன். ஆகவே அத் வைத வித்யா ப்ரியர்களான தமிழர் யாவரும் இப்பெரிய கார்யத்தி லிறங்கி இரவு பகலாய் வேலை செய்தவரும் என்னையாதரிக்க முன் வர வேண்டுமாய்க் கேட்டுக்கொள்ளுகிறேன்.

இங்ஙனம் சங்கரகிங்கரன்,

கடலங்குடி நடேச சாஸ்திரிகள்,

கஸ்தூரிரங்கவிலாஸ், நடேசய்யர் தெரு, புதுமாம்பலம்.

தேனாம்பேட்டை போஸ்டு, சென்னை.

[13–7–1933.]

விஷய அட்டவணை.

பக்கம்.

கேனோபநிஷத்தின் சிறப்பைக் கூறல் ... 2

பாஷ்யகாரரவர்களின் அவதாரிகை. அதில் முமுக்ஷுவாக இருந்து கர்மம், உபாஸனம் இவற்றைக் காமனையின்றி செய்தால், அது சித்தசுத்திக்கு ஸாதனமென்றும், பலத்தில் விருப்பத்துடன் செய்தால் அது ஸ்வர்க்காதிலோக பிராப்திக்கும், மறுபிறப்புக்கும் ஸாதனமென்றும், இயற்கையிலடைந்த சாஸ்திர விருத்தமானப் பிரவிருத்தியானது பசு முதல் ஸ்தாவரமீறுகவுள்ள கீழ் பிறவிக்கு ஸாதனமென்றும் கூறல் ... 3–4

ப்ரத்யகாத்ம ப்ரம்ஹ விக்ஞானத்தால் மட்டுமே அக்ஞானம் நிவிருத்தமாகும் என்பது ... 5

கர்மத்துடன் கூடின க்ஞானம் அக்ஞானத்தை நிவிருத்தி செய்யலாமென்ற ஆக்ஷேபமும், அதன் ஸமாதானமும் 5–6

சிஷ்யன், ஆசார்யன் இவர்களின் ப்ரஸ்னோத்தரரூபமாய் இவ்வுபநிடதம் துவக்குவதின் காரணம் கூறல் ... 7

ஆசிரியரின் உபதேச மூலமேதான் இந்த ஆத்மதத்வம் அறியக்கூடியதாகுமென்பது ... ”

“கேநேஷிதம் பததி” என்ற மந்திரார்த்தம் ... 8

“மன:” என்பதற்கு ‘இஷிதம்’ ‘ப்ரேஷிதம்’ என இரண்டு விசேஷணங்களைக் கொடுத்ததின் பிரயோஜனம் கூறல் 9–10

மனது ஸ்வதந்திரமாகவே தனது விஷயத்தில் பிரவிருத்திக்கலாம் என்ற ஆக்ஷேபமும் அதன் ஸமாதானமும் 11–12

“ஸ்ரோத்ரஸ்ய ஸ்ரோத்ரம்” என்ற மந்திரார்த்தம் ... 13

“காதுக்குக் காதாகவும், கண்ணுக்குக் கண்ணாகவுமிருப்பது ப்ரம்ஹம்” என்று கூறியதின் கருத்து ... 14–15

ஸ்ரோத்ராதிகளில் ஆத்மபுத்தி இதனால் மறுக்கப்படுகின்றதென்பது ... 16

மந்திரத்தில் “வாசோ ஹ வாசம்” என்றவிடத்திலுள்ள “வாசம்” என்பதை ப்ரதமாவிபக்த்யந்தமாக மாற்ற வேண்டுமென்பதை ஸ்தாபித்தல் ... 17

ப்ரம்ஹம் ப்ராணனுக்குப் பிராணனாகவாகிறதென்பது ... 18

கண் முதலிய கரணஸமூஹ ப்ரேரகமான ப்ரம்ஹத்தையறிந்து மோக்ஷமடைகிறான் என்பது ... 19

	பக்கம்.
"ந தத்ர சக்ஷுர்கச்சதி" என்ற மந்திரார்த்தம் ...	21
ப்ரம்ஹம் சக்ஷுராதிகரணங்களுக்குவிஷயமாகக்கூடிய தல்லவென்பது ...	21–22
"அந்யதேவ தத் விதிதாத்" என்ற மந்திரத்தின் அர்த்தம்...	23
விதிதம், அவிதிதம் இவ்விரண்டைக் காட்டிலும் ப்ரம ஹம் வெறுபட்டதென்பது ...	24
இவ்விதம் கூறியதால் 'ப்ரத்யக் ப்ரம்ஹம்' என்ற வாக் யார்த்தமேற்படுகின்றதென்பது ...	25
ப்ரம்ஹம் ஆசார்யோபதேச பரம்பரையினுலேயே அறி யத்தக்கது என்பது ...	26
"யத்வாசா" என்றமந்திரத்தின் அவதாரிகை. அதில் ஜீவ ப்ரம்ஹங்களுக்கு பேதம் தானிருக்கவேண்டும் என்று சங்கித்தல் ...	"
"யத்வாசா அநப்யுதிதம்" என்ற மந்திரார்த்தம் ...	27
ஸ்போடாத்மக சப்தம் வாக் என்றதால் சொல்லப்படு கிறது என்பது ...	28
அந்தச் சப்தத்தினுல் ப்ரம்ஹம் சொல்லக்கூடியதல்ல வென்பது ...	29
ப்ரத்யகாத்மஸ்வரூபமே ப்ரம்ஹமென்பது ...	30
அபூர்வவிதி, நியமவிதி, பரிஸங்க்யாவிதி இவற்றைக் கூறல்	31–32
"யன்மநஸா ந மனுதே" என்ற மந்திரார்த்தம் ...	33
"யச்சக்ஷுஷா" என்ற மந்திரார்த்தம் ...	34
"யச்ஸ்ரோத்ரேன" என்ற மந்திரார்த்தம் ...	53
"யத்ப்ராணேந ந ப்ராணிதி" என்ற மந்திரார்த்தம் ...	36

இரண்டாவது கண்டம்.

"யதிமந்யஸே" என்ற மந்திரத்தின் அவதாரிகை. அதில் நான் ப்ரம்ஹம் என அறிவேன் என்று சிஷ்யன் எண்ணுவானேல் அது மித்யையான ப்ரம்ஹவிக் ஞானமே என்று கூறல் ...	38
"யதிமந்யஸே" என்ற மந்திரார்த்தம் ...	40
"யதிமந்யஸே" (ப்ரம்ஹத்தை நன்கு அறிவேன் என எண்ணுவாயேல்) என ஆசங்கையுடன் ஶ்ருதிகூறி யதின் கருத்தை விளக்கல் ...	40–41
ப்ரம்ஹத்துக்கு நாமம், ரூபம் என்ற உபாதிகளால் செய் யப்பட்ட ரூபங்கள் பல உளவேயன்றி உண்மை யில் எவ்விதரூபமுமில்லை என்பது ...	42

பக்கம்.

விஜ்ஞாதிவிசேஷணங்களினல் ப்ரம்ஹம் நிரூபிக்கப் படுவதால் ப்ரம்ஹம் விஜ்ஞாதிகளினல் ரூபமுள்ளதாக வரும் என்ற ஆக்ஷேபமும் ஸமாதானமும் ... 42-43
"நாஹ மந்யே" என்ற மந்திரார்த்தம் ... 45
"யஸ்யாமதம் தஸ்யமதம்" என்ற மந்திரார்த்தம் ... 48
"ப்ரதிபோதவிதிதம் மதம்" என்ற மந்திரார்த்தம் ... 51
ப்ரம்ஹம் ப்ரத்யகாத்மாவாக அறியப்படுமானல் அதுவே ஸம்யக்தர்சனமாகும் என்பது ... 52
ப்ரம்ஹம் போதக்ரியைக்குக்கர்த்தாவாகவாகிறது என்று கூறுபவர்களின் மதத்தை நிரூபித்துக் கண்டித்தல் ... 53
ஆத்மாவானவன் ஸமவாயம் என்ற ஸம்பந்தத்தினல் க்ஞாதிகாரணனகிறான் என்று கூறும் தார்க்கிகர்களின் மதத்தைக் கண்டித்தல் ... 54-55
"ப்ரதிபோதவிதிதம்" என்பதற்கு ஸ்வஸம்வேத்யம் என்பது அர்த்தமெனக் கூறுகிறவர்களின் மதத்தைக் கண்டித்தல் ... 56
நிமித்தமின்றி உண்டாகும்போதம் ப்ரதிபோத என்ற சப்தத்தினல் சொல்லப்படும் என்பவர்களின் மதத்தைக் கண்டித்தல் ... 58
"இஹசேதவேதீத்" என்ற மந்திரார்த்தம் ... 60-61

மூன்றாவது கண்டம்.

"ப்ரம்ஹஹதேவேப்ய:" என்றதாதியால் கூறப்படும் கதாபாகத்துக்கு ப்ரம்ஹவித்யாஸம்பந்தத்தை விளக்கும் பாஷ்யமும், அதன் உரையும் ... 62-63
"ப்ரம்ஹ ஹ தேவேப்ய:" என்ற மந்திரார்த்தம் ... 64
"தத்தைஷாம் விஜக்ஞௌ" என்ற மந்திரார்த்தம் ... 65-66
"தேக்னிமப்ருவன்" என்றதாதி 3-வது மந்திரம் முதல் 6-வது மந்திரம் முடியவுள்ளபாகத்தின் அர்த்தம் ... 67, 69
"அத வாயும்" என்றதாதி 7-வது மந்திரம் முதல் 10-வது மந்திரம் முடியவுள்ள பாகங்களுக்கு அர்த்தம் ... 70-71
"அதேந்த்ரமப்ருவன்" என்றதாதி 11-வது மந்திரத்துக்கும், "ஸ தஸ்மிந்நேவாகாசே" என்றதாதி 12-வது மந்திரத்துக்கும் அர்த்தம் ... 72-74

நான்காவது கண்டம்.

"ஸா ப்ரம்ஹேதி ஹோ வாச" என்ற முதல் மந்திரார்த்தம் 75
"தஸ்மாத்வா ஏதே" என்றதாதி 2-வது மந்திரார்த்தம் ... 76
"தஸ்மாத்வா இந்த்ரோதிதராம்" என்றதாதி 3-வது மந்திரார்த்தம் ... 77

பக்கம்.

"தஸ்யைஷ ஆதேச:" என்றதாதி 4-வது மந்திரார்த்தம் ... 78
ஒருதடவை ஏற்பட்ட மின்னலின் ப்ரகாசத்தை ப்ரம்ஹத்துக்கு உபமானமாய் கூறலாம் என்று அதிதைவதமான உபமானத்தைக் காண்பித்தல் ... 79
"அதாத்யாத்மம்" என்றதாதி 5-வது மந்திரார்த்தம் ... 80
ப்ரம்ஹத்துக்கு அத்யாத்மமான உபமானத்தைக் கூறல் ... 81
"தத்த தத்வனமித்யுபாஸிதவ்யம்" என்றதாதி 6-வது மந்திரார்த்தம் ... 82
ப்ரம்ஹத்தை தத்வனமாக (எல்லாப் பிராணிகளாலும் நன்கு பஜிக்கத்தகுந்ததாக) எவன் உபாஸிக்கிறுனே அவனை எல்லாப் பிராணிகளும், பிரியப்படுகின்றனவென்பது ... 83
"உபநிஷதம்போப்ரூஹி" என்றதாதி 7-வது மந்திரார்த்தம் ,,
பரமாத்மவிஷயமான உபநிஷத்தை முன்னரே கேட்டறிந்த சிஷ்யன் மறுபடியும் இந்த 7-வது மந்திரத்தால் 'உபநிஷத்தைச் சொல்லும்' என்று கேட்பதின் கருத்தென்னை என்பதை விரிவாயுபதேசித்தல் ... 84–87
"தஸ்யை தபோதம:" என்றதாதி 8-வது மந்திரார்த்தம் ... 88
ஆத்மக்ஞானத்தையடைவதற்கு தவம், தமம், கர்மங்கள் ஆகிய இவை முதலியன ஸாதனமாகின்றன என்பதை விளக்கல் ... 88–89
ஸத்யசப்தார்த்த நிருபணமும், அதற்கு அஸ்வமேதாதி யாகங்களைக் காட்டிலும் சிறப்பும் ... 90
"யோவா ஏதாம்" என்றதாதி 9வது மந்திரத்தின் அர்த்தம். 91
மந்திரத்திலுள்ள "ஸ்வர்க்கே லோகே" என்றதாதி பதங்களுக்கு விரிவுரையையும், பயனையும் கூறல் ... 92

பதபாஷ்யத்தின் விஷய அட்டவணை முற்றிற்று.

கேனோபநிஷத் வாக்யபாஷ்யம்.

முதல் கண்டம்.

"கேனேஷிதம்" என்றதாதி உபநிஷத்தை ஆரம்பித்ததற்கு ஸங்கதியைக் கூறல் ... 93
கர்மத்தைப் பற்றி உபதேசிக்குமிடத்தில் இந்த ஆத்மதத்வம் ஏன் உபதேசிக்கப்படவில்லை என்றகேள்வியும், கர்மத்துக்கும், ஆத்மதத்வத்துக்கும் விரோதமிருப்பதால் கர்மப்ரகரணத்தில் ஆத்மதத்வம் உபதேசிக்கப்படவில்லை என்ற பதிலும் ... 94

பக்கம்.

கர்மங்கள் பந்தஹேதுக்களாயிருப்பன பற்றி விடத்தக்கனவாயின் அவற்றின் உபதேசாரம்பம் பயனற்றதேயாகும் என்ற கேள்வியும், நிஷ்காமனுக்கு சித்தசுத்திக்கு ஸாதனமாவதால் அவற்றின் உபதேசம் ஸபலமேயாகும் என்ற ஸமாதானமும் ... 95

ஆத்மக்ஞானத்தை யடைந்தபிறகோவெனில் அவனைக் குறித்து கர்மங்கள் ஆரம்பிக்கப்படவில்லை என்பது... 96–97

நித்யமான ஆத்மவஸ்துவுக்கு கர்மத்தினுலுண்டாகக் கூடிய உத்பத்யாதியான ஸம்ஸ்காரங்களையடைதல் ஸம்பவிக்காதென்பதை விரிவாயுபதேசித்தல் ... 97–98

"கேநேஷிதம்" என்ற முதல் மந்திரத்தின் பாஷ்யம் ...99–100

"ஶ்ரோத்ரஸ்ய ஶ்ரோத்ரம்" என்ற மந்திர பாஷ்யம் ... 100

ஆத்மாவுக்கு ஶ்ரோத்திரம் முதலிய இந்திரிய ப்ரேரகத்வத்தை ஸ்தாபித்தல் ... 101

"ந தத்ர சக்ஷு:" என்ற மந்திர பாஷ்யம் ... 104

"அன்யதேவ தத்விதிதாத்" என்ற மந்திர பாஷ்யம் ... 106

விதிதம் அவிதிதம் இவற்றைக்காட்டிலும் ப்ரம்ஹம் வேறுபட்டதென்பதை ஸ்தாபித்தல் ... 107

ஆத்மாவுக்கு வேறு விக்ஞானுபேக்ஷை கிடையாதென்ருல் லௌகிகமான அனுபவத்துக்கு விரோதமும், சாஸ்திர விரோதமும் வரும் என்ற ஆக்ஷேபமும் ஸமாதானமும் ..108–110

"தத்வமஸி" என்றதாதிகளால் ஆத்மபோதோபதேசம் செய்ததின் கருத்து ... 111

ஆத்மாவுக்கு விதிதம் அவிதிதம் இவற்றைக்காட்டிலும் வேற்றுமையை வேறு முறையினுல் விளக்கல் ... 112

"யத்வாசா" என்ற 5-வது மந்திரம் முதல் 9-வது மந்திரம் முடியவுள்ள மந்திரங்களின் பாஷ்யம் ..113–115

இரண்டாவது கண்டம்.

"யதி மந்யஸே ஸுவேதேதி" "நாஹமந்யே" என்ற மந்திரங்களின் பாஷ்யம் ..116–121

"யஸ்யாமதம்" என்ற மந்திரத்தின் பாஷ்யம் ... 121

அவைதிகமான க்ஞானம் மித்யை என்பதை ஸ்தாபித்தல்... 122

"அவிக்ஞாதம் விஜானதாம்" என்றதாதி பாகத்தை ஹேதூபதேசபரமாக வியாக்கியானம் செய்தல் ... 123

பக்கம்.

"ப்ரதிபோதவிதிதம்" என்ற மந்திரத்தின் பாஷ்யம் ... 124

ஒவ்வொரு புத்திவிருத்திக்கும் ப்ரகாசத்தைத் தரும் ப்ரத்யகாத்மத் தன்மையினால் எது அறியப்பட்டதோ அது ப்ரம்ஹம் என்றும், அத்தகைய க்ஞானமே ஸம்யக்ஞானம் என்றும் ஸ்தாபித்தல் ... 125

மோக்ஷமானது ப்ராப்தி பூர்வகமன்று, பின்னையோவெனில் ஸ்வஸ்வரூபாவஸ்தானரூபம் என்று ஸ்தாபித்தல் 126

முற்கூறிய மோக்ஷத்தில் வித்யைக்கு உபயோகம் கூறல் ... 127

"இஹ சேதவேதீத்" என்ற மந்திரபாஷ்யம் ...128–129

மூன்றாவது கண்டம்.

"ப்ரம்ஹ ஹ தேவேப்ய:" என்ற மந்திரத்தின் பாஷ்யம்... 130

ப்ரம்ஹ ஹ என்ற தாதியால் சொல்லப்படும் கதா பாகத்துக்கு உபநிஷத்தில் உபயோகம் கூறல் ... 131

அனுமான ப்ரமாணத்தால் ஈஸ்வரன் ஒருவனிருக்கிறானென்பதை ஸ்தாபித்தல் ... 132

ஜகத்தில் காணப்படும் போக வைசித்திரியமானது ஈஸ்வரனை எதிர்பாராது கர்மமூலமே உண்டாகலாமென்ற ஆக்ஷேபமும், ஸமாதானமும் 133

கர்மத்தைச் செய்தவனே பலகாலத்தில் அக்கர்மத்தைப் பலன்கொடுக்கும்படி தூண்டுகிறான் என்ற ஆக்ஷேபமும் ஸமாதானமும் ... 134

கர்மமானது பூதாஸ்ரயமாக இருந்துகொண்டு பலனைத் தருகின்றதென்ற ஆக்ஷேபமும் ஸமாதானமும் ... 135

சாஸ்திர ப்ராமாண்யத்தை யனுஸரித்து ஈஸ்வரனை எதிர்பாராது கர்மத்தினிடமிருந்தே பலனுண்டாகின்றதென்ற ஆக்ஷேபமும், ஸமாதானமும் ... 136

ஈஸ்வரனே எல்லா ஜீவர்களுக்கும் ஆத்மாவாகிறான் என்பது 137

"ஈஸ்வரனில்லை"! என்று சாஸ்திரத்தில் மறுக்கப்படாததாலும் ஈஸ்வரஸித்தி ஏற்படுகின்றதென்பது ... 138

பதார்த்தங்களின் இயற்கையான ஸ்வபாவத்தை நூற்றுக்கணக்கான சாஸ்திரங்களாலும் மாற்றமுடியாதாகையால் நஷ்டமான கர்மமும் சாஸ்திர ப்ராமாண்யத்தையொட்டி பலனைத்தருகின்றதென்ற கல்பனை பொருந்ாதென்பது ... 139

பக்கம்.

ஜீவேஸ்வரர்களுக்கு அபேதத்தை ஸாதித்தல் ... 140

ஞானம், சக்தி, கர்மம் முதலியவற்றால் ஜீவேஸ்வரர்களுக்கு பேதமேதான் கொள்ளவேண்டும் என்ற ஆக்ஷேபமும் ஸமாதானமும் ..141–143

ஜீவேஸ்வராபேதமிருந்தால் பந்தமோக்ஷவ்யவஹாரத்துக்கு நிமித்தம் என்னை என்ற கேள்விக்குப் பதில் கூறல் 144

ஈஸ்வரன் ஒருவனுக்கே ஒன்றுக்கொன்று முரண்பாடுள்ள லக்ஷணமிருப்பதாக கூறுவதும், சுகதுக்காதிகளின் சேர்க்கையும் பொருந்தாதென்ற ஆக்ஷேபமும் ஸமாதானமும் ..145–146

ஜீவேஸ்வராபேத ஸாதனத்துக்கு உபஸம்ஹாரம் ... 147

"தத்தைஷாம்" என்ற இரண்டாவது மந்திர பாஷ்யம் ... 148

"தேக்நிமப்ருவன்" என்றதாதி 3-வது மந்திரம் முதல் 11-வது மந்திரம்முடியவுள்ள மந்திரங்களின் பாஷ்யம்... 149

"ஸ தஸ்மிந்நாகாசே" என்ற 12-வது மந்திர பாஷ்யம் ... 150

நான்காவது கண்டம்.

"ஸா ப்ரம்ஹேதி ஹோ வாச" என்றதாதி மந்திர பாஷ்யம் 151

"தஸ்யைஷ ஆதேச:" என்ற மந்திர பாஷ்யம் ... 152

அதிதைவதோபாஸன விதி ... ,,

"அதாத்யாத்மம்" என்ற மந்திர பாஷ்யமும், அத்யாத்மோபாஸனவிதியும் ... 153

"தத்த தத்வனம்" என்ற மந்திர பாஷ்யமும், அத்யாத்மோபாஸனத்தில் குணவிதியும் ... 154

"உபநிஷதம் போப்ரூஹி" என்ற மந்திர பாஷ்யம் ... 155

"தஸ்யை தபோ தம:" என்ற மந்திர பாஷ்யம் ... ,,

"யோ வா ஏதாமேவம்" என்ற மந்திர பாஷ்யம் ... 156

விஷய அட்டவணை முற்றிற்று.

ॐ तत् सत् ॥

॥ केनोपनिषत् ॥

सर्वोपप्लवरहितः प्रज्ञानघनः प्रत्यगर्थो ब्रह्मैवाहमस्मि ॥

𑌸𑌰𑍍𑌵𑍋𑌪𑌪𑍍𑌲𑌵𑌰𑌹𑌿𑌤𑌃 𑌪𑍍𑌰𑌜𑍍𑌞𑌾𑌨𑌘𑌨𑌃 𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌗𑌰𑍍𑌥𑍋 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑍈𑌵𑌾𑌹𑌮𑌸𑍍𑌮𑌿 ॥

प्रथमः खण्डः ॥

ओं, सहनाववतु। सह नौ भुनक्तु। सहवीर्यं करवावहै। तेजस्वि-नावधीतमस्तु मा विद्विषावहै। ओं शान्तिः, शान्तिः, शान्तिः॥

आप्यायन्तु ममाङ्गानि वाक्प्राणश्चक्षुः श्रोत्रमथो बलमिन्द्रियाणि च सर्वाणि सर्वं ब्रह्मौपनिषदं माहं ब्रह्म निराकुर्यां मामा ब्रह्म निराकरोदनिराकरणमस्त्वनिराकरणं मेऽस्तु तदात्मनि निरते य उपनिषत्सु धर्मास्ते मयि सन्तु ते मयि सन्तु। ओं शान्तिः, शान्तिः, शान्तिः ॥

கேநோபநிஷத் பாஷ்யம்.

கண்டம் 1.

அவதாரிகை.—வேதாந்த விசாரத்திலீடுபட்ட ஒருவர் "अनन्त शास्त्रं बहुवेदितव्यं स्वल्पश्च कालो बहवश्च विघ्नाः" ("𑌅𑌨𑌨𑍍𑌤𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌂 𑌬𑌹𑍁𑌵𑍇𑌦𑌿𑌤𑌵𑍍𑌯𑌂 𑌸𑍍𑌵𑌲𑍍𑌪𑌶𑍍𑌚 𑌕𑌾𑌲𑍋 𑌬𑌹𑌵𑌶𑍍𑌚 𑌵𑌿𑌘𑍍𑌨𑌾𑌃") (சாஸ்திரமோ அனந்தமானது, அறியவேண்டுவதோ வெகுவாக இருக்கிறது. அதற்குவேண்டிய ஆயுள் காலமோ அற்பமாகவிருக்கிறது. இவ்வற்பகாலத்திலும் இதையறிய முயர்ச்சிப்பவர்க்கு இடையூறே

"केनेषितम्" इत्याद्योपनिषत्परब्रह्मविषया वक्तव्येति नवमस्याध्यायस्यारंभः। प्रागेतस्मात्कर्माण्यशेषतः परिसमापितानि, समस्तकर्माश्रयभूतस्य च प्राणस्योपासनान्युक्तानि, कर्माङ्गसामविषयाणि च। अनन्तरं

அளவுகடந்ததாகவிருக்கிறது) என்றேங்கி என்செய்வதென்றறியாது தயங்கி ஒரு ஸித்தபுருஷரை முறைப்படி அணுகி இந்நிலையிலுள்ளவன் வேதாந்தங்களுள் எதைவிசாரித்தறிந்தால் தத்வஸாக்ஷாத்காரமுண்டாகுமோ அதையுபதேசிக்கவேண்டுமென வேண்டினர். அது கேட்டதும் அப்பெரியார் तत्त्वमसि (தத்வமஸி) முதலிய மஹாவாக்யோபதேசம்பெறுவதாலேயே நீகோரிய தத்வஸாக்ஷாத்காரத்தைச் சுளுவிலடைந்துவிடலாமென உபதேசிக்கவெண்ணங்கொண்டவராயினும் கேட்பவரின் மனோநிலையையறிந்து "கேட்டதைக் கேநத்தில் தேடு" எனவுபதேசித்தனர். அதுகேட்டதும் இவரும் கேநோபநிடதத்தை ஸத்குரு மூலம் விசாரித்தறிந்து தான் கோறிய பலனையடைந்தார் எனச் சொல்லுவதுண்டு. ஆகவே இந்த உபநிடதமானது ஏனையவுபநிடதங்கள் போலல்லாது தத்வஸாக்ஷாத்காரமுறையை அங்கை நெல்லிக்கனிபோல் விளக்குகின்றதென இதனின்றும் பெறப்படுகிறது. ஆகவே இவ்வளவருமைதங்கிய இதையும், அதன் பாஷ்யத்தையும் நாமறிந்தவரை தமிழில் பெயர்க்கிறோம். இது நான்கு கண்டங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றது. அவற்றுள் முதல் கண்டத்தில் 9 மந்திரங்களும், 2-வது கண்டத்தில் 5 மந்திரங்களும், 3-வது கண்டத்தில் 12 மந்திரங்களும், 4-வது கண்டத்தில் 9 மந்திரங்களும் அடங்கியிருக்கின்றன. அவற்றுள் முதலாவது கண்டத்தின் முதலாவது மந்திரத்தின் அவதாரிகா பாஷ்யம் பின்வருமாறு—

அவதாரிகா பாஷ்யம்.—கேநேஷிதம் என்றதாதி பரப்ரம்ஹவிஷயமான உபநிஷத்தை யுபதேசிக்கவேண்டி ஒன்பதாவது அத்தியாயமாரம்பிக்கப்படுகிறது. இதற்கு முந்தியுள்ள 8 அத்தியாயங்களில் மீதமின்றி கர்மங்கள் முடிக்கப்பட்டன. எல்லாக்கர்மங்களுக்கும் ஆஶ்ரயபூதனான ப்ராணனுடைய ஸ்வதந்திர உபாஸனங்களும், கர்மாங்கமான ஸாமத்தை விஷயமாகக்கொண்ட (கர்மாங்காவபத்தங்களான) உபாஸனங்களும் உபதேசிக்கப்பட்டன. அதன் பின்ன

च गागत्रसामविषयं दर्शनं वंशान्तमुक्तं कार्यम्। सर्वमेतद्यथोक्तं कर्म च ज्ञानं च सम्यनुष्ठितं निष्कामस्य मुमुक्षोः सत्वशुद्ध्यर्थं भवति। सकामस्य तु ज्ञानरहितस्य केवलानि श्रौतानि स्मार्तानि च कर्माणि दक्षिणमार्गप्रतिपत्तये पुनरावृत्तये च भवन्ति। स्वाभाविक्यात्वशास्त्रीयया प्रवृत्त्या पश्वादिस्थावरान्ताऽधोगतिः स्यात्। "अथैतयोः पथोर्नकतरेणचन तानीमानि क्षुद्राण्यसकृदावर्तीनि भूतानि भवन्ति। जायस्व म्रियस्वेत्येतत्तृतीयं स्थानम्" इति श्रुतेः। "प्रजा ह तिस्रोऽत्यायमीयुः" इति मन्त्रवर्णात्। विशुद्ध-

---

ரும் காயத்ரம் என்ற ஸாமத்தைப்பற்றிய உபாஸனமுபதேசிக்கப்பட்டதுடன், அவ்வுபாஸனம் எந்தக்குரு சிஷ்ய பரம்பரையாக வருகிறதோ அந்த குரு சிஷ்யவம்சமு முபதேசிக்கப்பட்டது. இது வரை உள்ளபடி உபதேசிக்கப்பட்டதும் (புருஷனால்) செய்யக்கூடியதுமான கர்மம் க்ஞானம் (உபாஸனம்) என்ற இவையாவும் நன்கு அனுஷ்டிக்கப்படுமாயின் நிஷ்காமனான முமுக்ஷுவுக்கு சித்த சுத்தியைத் தருவதாகவாகிறது. உபாஸனஞ் செய்யாதவனும் பல காமனையுள்ளவனுமானவனுக்கு உபாஸனவிநிர்முக்தங்களும் சுருதியிலும் ஸ்மிருதியிலுமுபதேசிக்கப்பட்டனவுமான கர்மங்கள் தக்ஷிணாயன மார்க்கத்தையடைவிக்கக் கூடியனவாகவும் திரும்பவும் ஜன்மத்தைத் தருவனவாகவுமாகின்றன. ராகத்வேஷாதிகள் காரணமாக ஏற்படுகிறதும் சாஸ்திர ஸம்மதியற்றதுமான ப்ரவிருத்தியினால் பசுதொடங்கி மரமீறாகவுள்ள அதோகதியானது (கீழான பிறவியானது) ஏற்படுகிறது. "பின்னர் கர்மம் க்ஞானம் என்ற இவ்விரு வழிகளில் ஒன்றினாலும் செல்லாதவர் க்ஷுத்ரங்களும் அடிக்கடி பிறப்பிறப்பையடையக்கூடியனவுமான அந்த இந்தப் பூதங்களாக (பிராணிகளாக) பிறக்கின்றனர். பிறப்பதும் இறப்பதுமாகவுள்ள இந்தப்பிறவி மூன்றாவதாகும்" என ஶ்ருதியிருக்கிறது "மூன்று விதங்களான (கர்ப்பப்பையினின்றுமுண்டானவும், முட்டையினின்றுமுண்டானவும், பூமியினின்றும் முளைத்தனவுமான) பிராணிகள் அத்யாயத்தை=தேவயான பிதிருயாணமென்ற இரண்டுமார்க்கங்களுமல்லாத வேறு கஷ்டமான கதியை அடைகின்றன" என மந்திர வர்ணமுமிருக்கிறது. சுத்தமான சித்தமுள்ளவனும், வெளியிலுள்

सत्त्वस्य तु निष्कामस्यैव बाह्यादनित्यात्साध्यसाधनसंबन्धादिहकृतात्पूर्वकृताद्वा संस्कारविशेषोद्भवाद्विरक्तस्य प्रत्यगात्मविषया जिज्ञासा प्रवर्तते। तदेतद्वस्तु प्रश्नप्रतिवचनलक्षणया श्रुत्या प्रदर्श्यते केनेषितमित्याद्यया। काठके चोक्तम्—"पराञ्चि खानि व्यतृणत्स्वयंभूस्तस्मात्पराङ्पश्यति नान्तरात्मन्। कश्चिद्धीरः प्रत्यगात्मानमैक्षदावृत्तचक्षुरमृतत्वमिच्छन्" इत्यादि। "परीक्ष्य लोकान्कर्मचितान्ब्राह्मणो निर्वेदमायान्नास्त्यकृतः कृतेन। तद्विज्ञानार्थं स गुरुमेवाभिगच्छेत्समित्पाणिः श्रोत्रियं ब्रह्मनिष्ठम्।" इत्याद्याथर्वणे च।

एवं विरक्तस्य प्रत्यगात्मविषयं विज्ञानं श्रोतुं मन्तुं विज्ञातुं च साम-

---

ளதும் ஆனதுபற்றியே அநித்யமுமான ஸாத்யஸாதன ஸம்பந்தத்தினின்றும் ஆசையொழிந்தவனும் இப்பிறவியில் செய்யப்பட்டதாகவோ முப்பிறவிகளிற் செய்யப்பட்டதாகவோ உள்ள ஸம்ஸ்கார விசேஷத்தின் ஆவிர்ப்பாவத்தால் வைராக்கியத்தையடைந்தவனுமாக உள்ளவனுக்கே ப்ரத்யகாத்மவிஷயமான ஜிக்ஞாஸையேற்படுகிறது. அந்த இந்தப்பொருளானது ப்ரஸ்னப்ரதிவசனரூபமானதும் கேநேஷிதம் என்றதாதியானதுமான ஸ்ருதியினாலுபதேசிக்கப்படுகிறது. அவ்விதமே காடகத்திலும் "ஸ்வயம்பூவானவர் (ஈஸ்வரன்) இந்திரியங்களை வெளிநோக்குள்ளனவாகச்செய்து ஹிம்ஸித்து (கெடுத்து) விட்டார். ஆனதுபற்றியேதான் (ஜீவன்) வெளிநோக்குகின்றானேயொழிய அந்தராத்மாவை (ப்ரத்யகாத்மாவை) நோக்குவதில்லை. வெளியினின்றும் திருப்பின அறிவுள்ளவனும் அமிருதத்வத்தில் விருப்பமுள்ளவனும், தீரனும் (புத்தியைத்தன்வசமாக்கினவனும்) ஆன ஒருவன் ப்ரத்யகாத்மாவைக்காண்கிறான்' என்றதாதியாற் சொல்லப்பட்டிருக்கிறது. "ப்ராம்ஹணன் கர்மாவினால்கிடைத்த லோகங்களை பரீக்ஷித்தறிந்து கிருதத்தினால்=கர்மத்தினால், அகிருதமான=நித்யமான மோக்ஷமானது கிட்டாது என வைராக்கியத்தையடையவேண்டும்" (ப்ரம்ஹத்தையறிய ஆவல்கொண்ட) "அவன் ஸமித்தைக்கையிற் கொண்டு அதை (ப்ரம்ஹத்தை) யறிவதற்குவேண்டி ஸ்ரோத்ரியரும் ப்ரம்ஹநிஷ்டருமான குருவையே அடையவேண்டும்" என்றதாதியால் கடோபநிடதத்திலுஞ் சொல்லப்பட்டிருக்கிறது. இவ்விதம்

र्थमुपपद्यते नान्यथा। एतस्माच्च प्रत्यगात्मब्रह्मविज्ञानात्संसारबीजमज्ञानं कामकर्म प्रवृत्तिकारणमशेषतो निवर्तते। तत्र "को मोहः कः शोक एकत्वमनुपश्यतः" इति मन्त्रवर्णात्, "तरति शोकमात्मवित्" "भिद्यते हृदयग्रन्थिश्छिद्यन्ते सर्वसंशयाः। क्षीयन्ते चास्य कर्माणि तस्मिन्दृष्टे परावरे" इत्यादि श्रुतिभ्यश्च। कर्मसहितादपि ज्ञानादेतत्सिद्ध्यतीतिचेन्न। वाजसनेयके तस्यान्यकारणत्ववचनात्। "जाया मे स्यात्" इति प्रस्तुत्य "पुत्रेणायं लोको जय्यो नान्येन कर्मणा, कर्मणा पितृलोको विद्यया देवलोकः"

வைராக்கியத்தையடைந்தவனுக்கு ப்ரத்யகாத்மவிஷயமான விக்ஞானத்தை ஶ்ரவணஞ்செய்வதற்கும் மனனஞ்செய்வதற்கும், அனுபவிப்பதற்கும் ஸாமர்த்யமுண்டாகுமேயொழிய வேறுமுறையிலில்லை. இத்தகைய ப்ரத்யகாத்மவிஷயமான விக்ஞானத்தினல் (அபரோக்ஷ ஸாக்ஷாத்காரத்தினல்) தான் ஸம்ஸாரத்துக்குக்காரணமானதும் காமம் கர்மம் இவற்றின் ப்ரவிருத்திக்குக் காரணமானதுமான அக்ஞானமானது முற்றிலும் விலகுகிறது. "ஏகத்வத்தை ஸாக்ஷாத்கரிப்பவர்க்கு அந்நிலையில் மோஹமேது சோகமேது" என மந்த்ரவர்ணமிருக்கிறது. "ஆத்மாவையறிந்தவர் சோகத்தை (சோக பகுளமான ஸம்ஸாரத்தை) க் கடக்கிருர்" என்றும், "பராவரமான அந்த ப்ரம்ஹமானது பார்க்கப்பட்டதும் இவரது கர்மங்கள் தேய்ந்துவிடுகின்றன. ஸர்வஸம்சயங்களும் சிதறிப்போகின்றன, ஹிருதயக்ரந்தியும் (மூலாக்ஞானமும்) நாசத்தையடைகிறது" என்றுமாதிய ஶ்ருதிகளுமிருக்கின்றன.

கர்மத்துடன் கூடின க்ஞானத்தினின்றுங்கூட இது ஸித்திக்கலாம் என்கிறோம் எனின்? அது பொருந்தாது. வாஜஸநேயகத்தில் அதை (கர்மத்துடன் கூடின க்ஞானத்தை) வேறொன்றுக்குக் காரணமாகக் கூறும் வசனமிருப்பதே அதன் காரணமாகும். அதாவது: (ப்ரம்ஹசாரியான நிலையிலிருப்பவன்) "எனக்கு ஜாயை (பத்னி, ஏற்படவேண்டும்" எனவெண்ணினன் என்று தொடங்கி "புத்திரனல் இந்த லோகம் ஜயிக்க (அடைய) த்தக்கதேயொழிய வேறு கர்மத்தாலன்று. கர்மத்தால் பிதிருலோகமும் வித்யையினல் தேவலோகமும் அடையத்தக்கது" என்பதாய் ஆத்மாவைக் காட்டிலும்

इत्यात्मनोऽन्यस्य लोकत्रयस्य कारणत्वमुक्तं वाजसनेयके। तत्रैव च पारिव्राज्यविधाने हेतुरुक्तः—"किं प्रजया करिष्यामो येषां नोऽयमात्माऽयं लोकः" इति। तत्रायं हेत्वर्थः—प्रजा कर्मतत्संयुक्तविद्याभिः मनुष्यपितृदेवलोकत्रयसाधनैरनात्मलोकप्रतिपत्तिकारणैः किं करिष्यामः। नचास्माकं लोकत्रयमनित्यं साधनसाध्यमिष्टं, येषामस्माकं स्वाभाविकोऽजोऽजरोऽमृतोऽभयो न वर्धते कर्मणा नो कनीयान्नित्यश्च लोक इष्टः। स च नित्यत्वान्नाविद्यानिवृत्तिव्यतिरेकेणाऽन्यसाधननिष्पाद्यः। तस्मात्प्रत्यगात्मब्रह्म विज्ञानपूर्वकः सर्वैषणासन्न्यास एव कर्तव्य इति। कर्मसहभावित्वविरोधाच्च प्रत्यगात्मब्रह्मविज्ञानस्य। नहि उपात्तकारकफलभेदविज्ञानेन कर्मणा

வேறான லோகத்ரயத்தைக் குறித்து காரணத்வம் அதற்கு வாஜஸநேயகத்திற் சொல்லப்பட்டிருக்கிறது. அதேவிடத்தில் எந்தநமக்கு இதுவே ஆத்மாவோ இதுவே லோகமோ அந்த நாம் ப்ரஜையினால் என்ன செய்யப்போகிறோம்" என்பதாய் பாரிவ்ராஜ்யத்தில் (ஸன்யாஸத்தில்) காரணமானது சொல்லப்பட்டிருக்கிறது. அங்கு சொல்லிய காரணபோதகஶ்ருதியின் பொருள் பின்வருமாறு—மனுஷ்யலோகம்,பிதிருலோகம்,தேவலோகம் என்ற மூன்றுக்கும் ஸாதனமானவைகளும் அனாத்மலோகப்ராப்திக்குக்காரணமானவைகளுமான ப்ரஜை, கர்மம், இவற்றுடன் கூடின வித்யை(உபாஸனம்)இவைகளால் யாது செய்யப்போகிறோம். நமக்குஸாதனத்தாலுண்டாகக்கூடியதும் அநித்யமுமான லோகத்ரயமானது இஷ்டமானதல்லவே. எந்தநமக்கு இயற்கையிலமைந்துள்ளதும் பிறப்பற்றதும் ஜரை (மூப்பு) அற்றதும் மரணமற்றதும் பயமற்றதும் கர்மத்தினால் விருத்தியை (வளர்ச்சியை) யடையாததும், குறையாததும் நித்யமுமான லோகமன்றோ இஷ்டமானது. அதுவும் நித்யமானதுபற்றி அவித்யா நிவிருத்தியைத் தவிர்த்து வேறு ஸாதனத்தினாலுண்டாகக் கூடியதுமன்று. ஆகவே ப்ரத்யகாத்மரூபமான ப்ரம்ஹவிக்ஞானத்தை முன்னிட்டு அல்லது எதிர்பார்த்து ஸர்வஏஷணைகளின் ஸன்னியாஸந்தான் செய்யவேண்டுவதாகவாகிறது என்றும். ப்ரத்யகாத்ம ரூபமான ப்ரம்ஹத்தின் விக்ஞானமானது கர்மத்துடன் கூடியிருப்பதென்பது முறண்படுவதாகவுமிருக்கிறது. காரணமாகவபேக்ஷிக்கப்பட்ட காரகம் (கர்மத்

प्रत्यस्तमितसर्वभेददर्शनस्य प्रत्यगात्मब्रह्मविषयस्य सहभावित्वमुपपद्यते।
वस्तु प्राधान्ये सत्यपुरुषतन्त्रत्वाद्ब्रह्मविज्ञानस्य। तस्माद्दृष्टादृष्टेभ्यो बाह्य-
साधनसाध्येभ्यो विरक्तस्य प्रत्यगात्मविषया ब्रह्मजिज्ञासेयं केनेषितमित्या
दिश्रुत्या प्रदर्श्यते॥ शिष्याचार्यप्रश्नप्रतिवचनरूपेण कथनं तु सूक्ष्मवस्तु-
विषयत्वात्सुखप्रतिपत्तिकारणं भवति। केवलतर्कागम्यत्वं च दर्शितं भव-
ति। "नैषा तर्केण मतिरापनेया" इति श्रुतेश्च। "आचार्यवान्पुरुषो वेद,
आचार्याद्धैव विद्या विदिता साधिष्ठं प्रापत्" इति "तद्विद्धि प्रणिपातेन'
इत्यादिश्रुतिस्मृतिनियमाच्च। कश्चिद्गुरुं ब्रह्मनिष्ठं विधिवदुपेत्य प्रत्यगात्म-
विषयादन्यत्र शरणमपश्यन्नभयं नित्यं शिवमचलमिच्छन्पप्रच्छेति कल्प्यते–

துக்குப் போதியன) பயன் இவற்றின் பேதக்ஞானத்தையுடைய
கர்மத்துடன் அழிக்கப்பட்ட எல்லா பேதச்ஞானத்தையுமுடைய
ப்ரத்யகாத்மரூபமான ப்ரஹ்மத்தை விஷயமாகக்கொண்ட ச்ஞானத்
துக்கு சேர்ந்திருத்தல் (கர்மம் ப்ரஹ்மச்ஞானம் இரண்டுக்கும் ஒரே
இடத்திலிருத்தல்) பொருந்தமாட்டாதன்றோ. ப்ரஹ்ம விச்ஞான
மானது வஸ்துவை (ப்ரஹ்மத்தை) ப்ரதானமாகக் கொண்டிருப்ப
துடன் புருஷனது ப்ரயத்தினங்களை யபேக்ஷிக்காததாகவுமிருக்கி
றது. ஆனதுபற்றி திருஷ்டாதிருஷ்ட ரூபங்களானதும் வெளியி
லுள்ள ஸாதனத்தினால் ஸாத்யமானதுகளுமானவற்றிலிருந்து வை
ராக்கியத்தையடைந்தவர்க்கு ப்ரத்யகாத்மாவைவிஷயமாகக்கொண்ட
இந்த ப்ரஹ்ம ஜிச்ஞாஸையானது "கேநேஷிதம்" என்றதாதி ஶ்ரு
தியினால் காண்பிக்கப்படுகிறது. சிஷ்யனுடைய கேள்வியும் ஆசாரி
யனுடைய ப்ரதிவசனரூபமுமாகச் சொன்னதோவெனில் ஸூக்ஷ்ம
மான பொருளைப்பற்றியதாகவிருப்பதால் சுகமாக அறிதற்குக்காரண
மாகவாகும் என்பது பற்றியாம். இதனின்றும் கேவல (தனித்த)
யுக்திக்கு விஷயமாகக்கூடியதன்று என்பதும் காட்டப்பட்டதாக
வாகிறது. "இந்த ப்ரத்யகாத்ம ப்ரஹ்ம விஷயமான அறிவானது
தார்க்கத்தினால் (தனித்த யுக்தியினால்) அடையக்கூடியதன்று" என
ஶ்ருதியுமிருக்கிறது. "சிறந்த ஆசிரியரையடைந்த புருஷன் (அதை)
அறிகிறான்" "ஆசாரியனிடமிருந்து அறியப்பட்ட வித்யையே பலந்
தரும் தன்மையையடைந்திருக்கிறது" என்றும், "அதை குருவினி

केनेषितं पतति प्रेषितं मनः। केन प्राणः प्रथमः प्रैति युक्तः। केनेषितां वाचमिमां वदन्ति चक्षुः श्रोत्रं क उ देवो युनक्ति ॥ १ ॥

கேநேஷிதம் பததி ப்ரேஷிதம் மந:। கேந ப்ராண: ப்ரதம: ப்ரைதி யுக்த:। கேநேஷிதாம் வாசமிமாம் வதந்தி சக்ஷு: ஶ்ரோத்ரம் க உ தேவோ யுநக்தி ॥ க ॥

டம் வணக்கத்தாலும் ஸம்ஶயமறிந்து கேட்டலாலும் போதியபணிவி டையாலும் அறியமுயலுவாயாக" என்றுமாய ஶ்ருதிகளும் ஸ்மிருதி களும் வரையறை ஏற்படுத்தியுமிருக்கின்றன. ஒருசிஷ்யன் ப்ரம்ஹ நிஷ்டரான குருவை முறைப்படியடைந்து ப்ரத்யகாத்ம விஷயத்தா லன்று வேறிடத்தில் ரக்ஷணத்தைக்காணுதவனாய் அபயமும் (பய ஹேதுவான இரண்டாவது பொருளற்றதும்) நித்யமும் சிவமும் அசைவற்றதுமான பொருளை விரும்பிக்கொண்டு கேட்கத்தொடங்கி னுன் எனக் கேநேஷிதம் என்றதால் கல்பிக்கப்படுகிறது—

(ப—ரை) **केन** (கேந)=எந்தக் கர்த்தாவினுல் **इषितम्** (இஷிதம்)=அபிப்பேதமாக இருந்துகொண்டு அதாவது: எவரது இச்சா மாத்திரத்தை முன்னிட்டு என்றும். **प्रेषितम्** (ப்ரேஷிதம்)=அனுப் பப்பட்டதாய்க்கொண்டு **मनः** (மந:)=மனதானது **पतति** (பததி)= தனது விஷயத்தைக் குறித்துச் செல்லுகிறது. **केन** (கேந)=எவ ரால் **युक्तः** (யுக்த:)=ஏவப்பட்டதாய் **प्रथमः प्राणः** (ப்ரதம: ப்ராண:)=எல்லா இந்திரியங்களுக்கும் முதன்மையான ப்ராணன் **प्रैति** (ப்ரைதி)=தனது வியாபாரத்தைக் குறித்துச் செல்லுகிறது. **केन** (கேந)=எவரால் **इषिताम्** (இஷிதாம்)=இஷ்டப்பட்ட (எவரது இச் சாமாத்திரத்தால் ப்ரேரிக்கப்பட்ட) **इमां वाचम्** (இமாம் வாசம்)=இந்த வார்த்தையை **वदन्ति** (வதந்தி)=லௌகிகர்கள் பேசுகின்றனர். **क उ देवः** (க உ தேவ:)=எந்தத் தேவர் **चक्षुः** (சக்ஷு:)=கண்ணேயும், **श्रोत्रम्** (ஶ்ரோத்ரம்)=ஶ்ரோத்திரத்தையும **युनक्ति** (யுநக்தி)=தனது விஷயத்தில் ஏவுகிருர். (1) (எ—று)

குறிப்பு—அசேதனங்களான மன ஆதி இந்திரியங்கள் தத் தமது விஷயங்களைக் குறித்து முறைபிறழாது செல்லுவதால் அவற்

केनेषितमित्यादि। केन कर्त्रा, इषितम्=इष्टमभिप्रेतं सन्मनः पतति=गच्छति, स्वविषयं प्रतीति संबध्यते। इषेराभीक्ष्ण्यार्थस्य गत्यर्थस्य चेहासंभवादिच्छार्थस्यैवैतद्रूपमिति गम्यते। इषितमितीट्प्रयोगस्तु छान्दसः। तस्यैव प्रपूर्वस्य नियोगार्थे प्रेषितमित्येतत्। तत्र प्रेषितमित्येवोक्ते प्रेषयितृप्रेषणविशेषविषयाकांक्षा स्यात्, केन प्रेषयितृविशेषेण, कीदृशं

றையனுப்புபவர் ஒருவர் இருக்கவேண்டும் என்பது தானே பெறப்படுகிறது. ஆயினும் எவரது இச்சாமாத்திரத்தால் அவை செல்லுகின்றனவோ அவர் யார்? அவரது ஸ்வரூபமென்னை? அதையுபதேசிக்கவேண்டுமென சிஷ்யன் குருவைக் கேட்கிறான் என்பது முதல் மந்திரத்தின் கருத்து. (எ—று)

பாஷ்யம்.—கேநேஷிதம் என்றவிடத்தில். கேந=எந்தக் கர்த்தாவினால் இஷிதம்=இஷ்டமாக=அபிப்ரேதமாக விரும்பப்பட்டதாக இருந்துகொண்டு மனதானது தனது விஷயத்தைக்குறித்து செல்லுகிறது என ஸம்பந்தப்படுத்தப்படுகிறது. इषु (இஷு) என்றதாதுவுக்கு ஆபீக்ஷ்ண்யம்=அடிக்கடி என்றும், கதியென்றும், இச்சை என்றும் மூன்று பொருள்களுண்டு. அவற்றுள் ஆபீக்ஷ்ண்யம், கதி என்ற இரண்டு பொருளும் இவ்விடத்தில் பொருந்தாதாகையால் இச்சையென்ற பொருளுள்ளதின் ரூபமாகவே இது (இந்த இஷிதமென்பது) அறியப்படுகிறது. அங்ஙனமாயின் (இச்சையென்றபொருளுள்ள தாதுவின் ரூபமாயின்) இஷ்டம் என்றே அதன் ரூபமிருக்கவேண்டும். அவ்விதமில்லாது இஷிதம் என்பதாய் इट् (இட்) என்ற ஆகமம் வைத்து ப்ரயோகித்ததோ வைதிகப்ரயோகமுறையையொட்டியதாகும். அந்த இஷுவென்ற தாதுவுக்கே प्र (ப்ர) என்பதைப் பூர்வமாக (முன்னதாக) க்கொண்டால் நியோகம் ஏவுதல் என்ற பொருளில் प्रेषितम् (ப்ரேஷிதம்) ப்ரேஷிதம் என்ற ரூபமேற்படுகிறது. இஷிதம் ப்ரேஷிதம் என்ற அவ்விரண்டனுள் ப்ரேஷிதம் என்பதுமட்டுமே சொல்லப்படுமாயின் அனுப்புபவர், அவர் செய்யும் *ப்ரேஷணம் இத்தகைய விசேஷத்தைப்பற்றிய ஆகாங்க்ஷை ஏற்படும். அதாவது:—ப்ரேஷணம் செய்பவர் எத்தகையவர் எவ

---

* மனத்தையனுப்ப அவர் செய்யும் முறையாது? என்பதாய்.

घा प्रेषणमिति। इषितमिति तु विशेषणे सति तदुभयं निवर्तते, कस्ये-
च्छामात्रेण प्रेषितमित्यर्थविशेषनिर्धारणात्। यद्येषोऽर्थोऽभिप्रेतः स्यात्केने-
षितमित्येतावतैव सिद्धत्वात्प्रेषितमिति न वक्तव्यम्। अपिच। शब्दाधिक्या
दर्थाधिक्यं युक्तमितीच्छया कर्मणा वाचा वा केन प्रेषितमित्यर्थविशेषोऽव-
गन्तुं युक्तः। न। प्रश्नसामर्थ्यात्। देहादिसङ्घातादनित्यात्कर्मकार्याद्विरक्तो-
ऽतोऽन्यत्कूटस्थं नित्यं वस्तु बुभुत्समानः पृच्छतीति सामर्थ्यादुपपद्यते।

விதம் ப்ரேஷணம் செய்கிறார் என்பதாம். இஷிதம் என்பதாய் அடைமொழி கொடுத்தாலோ அவ்விரண்டும் நிவிருத்தியையடைகிறது. எவரது இச்சாமாத்திரத்தினுல் இது அனுப்பப்பட்டது என்ற விசேஷமான பொருள் உறுதியாகக் கிடைப்பதே அதன் காரணமாகும்.

சங்கை—இப்பொருள் ஶ்ருதியினுல் கருதப்படுமாயின் கேநேஷிதம் என்ற இவ்வளவினுலேயே அது கிடைத்துவிடுமானதால் "ப்ரேஷிதம்" எனச் சொல்லவேண்டுவதில்லை. மேலும் சப்தம் அதிகமாகவாகுங்கால் பொருளில் ஆதிக்யம் கொள்ளுவதுதான் பொருத்தமானது என்பதுபற்றி இச்சையினுலா? கர்மத்தினுலா? வாக்கினுலா? எதனுல் அனுப்பப்பட்டது என்ற அர்த்தவிசேஷம் அறிந்து கொள்ளக்கூடியதாகவாகிறது எனின்?

உத்தரம்—கேள்விகேட்ட ஸாமர்த்தியத்தையொட்டி அவ்விதஞ்சொல்லுவது பொருந்தாது. கர்மத்தின் காரியமானதும் அநித்யமானதுமான தேஹாதி ஸங்காதத்தினின்னும் வைராக்கியத்தை யடைந்தவனும், முற்கூறிய தேஹாதிகளைக்காட்டிலும் வேறுபட்டதும் *கூடஸ்தமும் நித்யமுமான பொருளையறிய விருப்பங்கொண்

---

* கூடத்தில் இருப்பது கூடஸ்தமெனப்படும். கூடம் என்பதற்கு பொய்யென்றும், தட்டான் தங்கவேலைசெய்யும் பட்டரையென்றும் பொருள். ஆகவே பொய்யான மாயை அதன் காரியமான ப்ரபஞ்சம் இவற்றுடன் கலந்து தோன்றுவது என்றும், பட்டரையானது தன்னுடன் சேர்ந்த பொன் முதலியவற்றுக்கு பற்பல ரூபத்தைத்தான் கொடுப்பினும் தான் அத்தகைய மாறுதல் எதுவுமற்றிருப்பதுபோல ஸர்வாதிஷ்டான சின்மாத்ரமாகத்தானிருந்து தன்னில் அத்யஸ்தமான பொருளுக்குப் பற்

तरथेच्छावाक्कर्मभिर्देहादिसङ्घातस्य प्रेरयितृत्वं प्रसिद्धमिति प्रश्नोऽनर्थक एव स्यात्। एवमपि प्रेषितशब्दस्यार्थो न प्रदर्शित एव। न। संशयवतोऽयं प्रश्न इति प्रेषितशब्दस्यार्थविशेष उपपद्यते। किं यथाप्रसिद्धमेव कार्यकरण-सङ्घातस्य प्रेषयितृत्वं, किं वा सङ्घातव्यतिरिक्तस्य स्वतन्त्रस्येच्छामात्रेणैव मन आदिप्रेषयितृत्वमित्यस्यार्थस्य प्रदर्शनार्थं केनेषितं पतति प्रेषितं मन इति विशेषणद्वयमुपपद्यते। ननु स्वतन्त्रं मनः स्वविषये स्वयं पततीति प्रसिद्धं, तत्र कथं प्रश्न उपपद्यत इति। उच्यते। यदि स्वतन्त्रं मनः प्रवृत्ति-

---

டவனுமாய் கேட்கிறுன் எனக்கேள்விகேட்கும் ஸாமர்த்தியத்தினின்றும் (முறையினின்றும்) ஏற்படுகிறது. அவ்விதமில்லாவிடில் இச்சை வாக்கு கர்மம் இவற்ருல் தேஹாதி ஸங்காதத்துக்கு ப்ரேஷயிதிருத்வமானது ப்ரஸித்தமாகக் காணப்படுவதால் கேள்விகேட்டது பயனற்றதாகவே ஆகிவிடும்.

சங்கை—இவ்விதமாயினுங்கூட "ப்ரேஷிதம்" என்ற சப்தத்துக்கு அர்த்த விசேஷமானது காட்டப்படாததாகவே இருக்கிறது எனின் ?

உத்தரம்—அவ்விதமில்லை. இது ஸம்சயம் கொண்டவனுடைய கேள்வியானதுபற்றி ப்ரேஷித சப்தத்துக்கு அர்த்தவிசேஷமானது பொருத்தமுள்ளதாகவே ஆகிறது. காரியகாணஸங்காத (ஸமூஹ)த்தின் ப்ரேஷயிதிருத்வமானது உலகில் எவ்விதம் ப்ரஸித்தமாகவிருக்கிறதோ அவ்விதமே தானு? அல்லது ஸங்காதத்தைவிட வேறுபட்டவனும் ஸ்வதந்திரனுமானவனுக்கு இச்சையினுல்மட்டும் மன ஆதிகளின் ப்ரேஷயிதிருத்வமேற்படுகிறதா? என்ற இந்த அர்த்தத்தைக் காட்டவேண்டி "கேநேஷிதம் பததி ப்ரேஷிதம் மன:" என்ற இரண்டு விசேஷணங்கள் பொருத்தமுள்ளனவாகவாகின்றன.

சங்கை—ஸ்வதந்திரமான மனதானது தனக்குரிய விஷயத்தில் தானே ப்ரவேசிக்கிறது என்பது பிரஸித்தமாக இருக்கிறது. அவ்விஷயத்தில் கேள்வி பொருந்துவது எங்ஙனமெனின் ?

பல தோற்றத்தைத் தருகிறதேயொழிய தான் எவ்விதமாறுதலுமற்றிருக்கிறது என்றும் பொருள் கொள்க.

निवृत्तिविषये स्यात्तर्हि सर्वस्याऽनिष्टचिन्तनं न स्यात्। अनर्थं च जानन्सङ्कल्पयति अत्युग्रदुःखे च कार्ये वार्यमाणमपि प्रवर्तत एव मनः। तस्माद्युक्त एव केनेषितमित्यादिप्रश्नः। केन प्राणो युक्तः=नियुक्तः प्रेरितस्सन्प्रैति गच्छति स्वव्यापारं प्रति। प्रथम इति प्राणविशेषणं स्यात्तत्पूर्वकत्वात्सर्वेन्द्रिय प्रवृत्तीनाम्। केनेषितां वाचमिमां शब्दलक्षणां वदन्ति लौकिकाः। तथा चक्षुः श्रोत्रं च स्वे स्वे विषये क उ देवो द्योतनवान्युनक्ति=नियुङ्क्ते प्रेरयति ॥ १ ॥

एवं पृष्टवते योग्यायाह गुरुः शृणु त्वं यत्पृच्छसि मन आदिकरणजातस्य को देवः स्वविषयं प्रति प्रेरयिता कथं वा प्रेरयतीति।

உத்தரம்—சொல்லப்படுகிறது. மனதானது ப்ரவிருத்தி நிவிருத்தி விஷயத்தில் ஸ்வதந்திரமாக ஆகுமானால் அப்பொழுது எல்லோருக்கும் அநர்த்தத்தைப்பற்றிய எண்ணமே ஏற்படமாட்டாது. அநர்த்தமென்றறிந்தும் கூட அதை ஸங்கல்பிக்கிறான். அதிகம் கொடுமையான துக்கமுள்ளகாரியத்தில் தடுக்கப்படினுங்கூட மனது பிரவிருத்திக்கவே செய்கிறது. ஆகவே "கேநேஷிதம்" என்றதாதி ப்ரஶ்னம் பொருத்தமுள்ளதாகவே ஆகிறது. எவரால் ப்ராணன் யுக்தமாக=நியுக்தமாக=ப்ரேஷணஞ் செய்யப்பட்டதாய்க் கொண்டு தனது வேலையைக் குறித்துச் செல்லுகிறது. இங்கு ஶ்ருதியில் प्रथमः (ப்ரதம:) என்பது ப்ராணனுக்கு விசேஷணமாக (அடைமொழியாக) வரும். எல்லா இந்திரியங்களுடைய ப்ரவிருத்திகளும் அதை (ப்ராணனை) முன்னிட்டுண்டாவதே அதன் காரணமாகும். லோகத்திலுள்ளவர்கள் எவரால் ப்ரேஷணை செய்யப்பட்ட சப்த ரூபமான இந்த வார்த்தையைச் சொல்லுகின்றனர். அவ்விதமே ப்ரகாசமுள்ள எவர் சக்ஷுஸ்ஸையும் ஶ்ரோத்திரத்தையும் தத்தமது விஷயத்தில் யோஜிப்பிக்கிறார்=நியோகிக்கிறார்=ப்ரேஷணஞ் செய்கிறார். (1) (எ—று)

அவதாரிகா பாஷ்யம்.—இவ்விதங்கேட்ட யோக்யனான சிஷ்யனை நோக்கி மனம் முதலிய கரண ஸமூஹத்தைத் தனது விஷயத்தைக் குறித்து ப்ரேஷணஞ் செய்யும் தேவன் யார்? எவ்விதம் ப்ரேஷ

श्रोत्रस्य श्रोत्रं मनसो मनो यद्वाचो ह वाचं स उ प्रा-
णस्य प्राणश्चक्षुषश्चक्षुः। अति मुच्य धीराः प्रेत्यास्माल्लोका-
दमृता भवन्ति ॥ २ ॥

ஶ்ரோத்ரஸ்ய ஶ்ரோத்ரம் மநஸோ மநோ யத்³வாசோ
ஹ வாசம் ஸ உ ப்ராணஸ்ய ப்ராணஶ்சக்ஷுஷஶ்சக்ஷு:। அதி
முச்ய தீ⁴ரா: ப்ரேத்யாஸ்மால்லோகாத³ம்ருதா ப⁴வந்தி ॥ ௨ ॥

ணஞ் செய்கிறார்? என எதை நீ கேட்டனையோ அவ்விஷயத்தை என்னிடமிருந்து கேட்டறிந்து கொள்வாயாக—

(ப-ரை) यत् (யத்)=யாது காரணத்தால் श्रोत्रस्य (ஶ்ரோத்ரஸ்ய)=சப்த ப்ரகாசகமான ஸ்ரோத்ரமென்ற இந்திரியத்துக்கு ப்ரம்ஹம் श्रोत्रम् (ஶ்ரோத்ரம்)=ஸ்ரோத்ரமோ, (ப்ரகாசகமோ) यत् (யத்)=யாதுகாரணத்தால் मनसः (மநஸ:)=ஸங்கல்பம் நிஸ்சயம் முதலியவற்றில் ஸாமர்த்தியமுள்ள அந்தக்கரணத்துக்கு, मनः (மந:)=ப்ரகாசகமோ, यत् (யத்)=யாது காரணத்தால் वाचः (வாச:)=வாக் என்ற இந்திரியத்துக்கு ப்ரம்ஹம் वाचम् (வாசம்)=வாக்கோ, (ப்ரகாசகமோ) यत् (யத்)=யாதுகாரணத்தால் प्राणस्य (ப்ராணஸ்ய)=ப்ராணனெனப்பெயரிய விருத்திக்கு ப்ரம்ஹம் प्राणः (ப்ராண:)=ப்ராணனே (ப்ரகாசகமோ) यत् (யத்)=யாது காரணத்தால் चक्षुषः (சக்ஷுஷ:)=ரூபப்ரகாசகமான இந்திரியத்துக்கு ப்ரம்ஹம் चक्षुः (சக்ஷு:)=ப்ரகாசகமோ [अतः (அத:)=அக்காரணத்தால் ப்ரம்ஹத்தை ஆத்மாவென विदित्वा (விதி³த்வா)=அறிந்து] अतिमुच्य (அதிமுச்ய)=முற்கூறிய ஸ்ரோத்ராதிகளில் ஆத்மபுத்தியை விலக்கிக்கொண்டு धीराः (தீ⁴ரா:)=கூர்மையான புத்தியுள்ளவர்கள் अस्माल्लोकात् (அஸ்மால்லோகாத்)=புத்திர மித்திர களத்திர பந்துக்களிடத்தில் நான் என்றும் என்னுடையது என்றுமான அபிமானத்தினின்றும் அல்லது ப்ராரப்தாயத்தமான இந்தத் தேஹம் போனதும் என்று பொருள். अमृताः (அம்ருதா:)=முக்தர்களாக भवन्ति (ப⁴வந்தி)=ஆகின்றனர்.

பாஷ்யம்.—ஸ்ரோத்ரத்துக்கு ஸ்ரோத்ரமானது—இதனால் கேட்பதுபற்றி சப்தத்தின் ஸ்ரவணத்தை (க்கேட்டலை) க்குறித்து

श्रोत्रस्य श्रोत्रम्—शृणोत्यनेनेति श्रोत्रं शब्दस्य श्रवणं प्रति करणं शब्दाभिव्यञ्जकं श्रोत्रमिन्द्रियं, तस्य श्रोत्रं स यस्त्वया पृष्टः 'चक्षुः श्रोत्रं क उ देवो युनक्ति' इति। असावेवं विशिष्टः श्रोत्रादीनि नियुङ्क्त इति वक्तव्ये नन्वेतदननुरूपं प्रतिवचनं श्रोत्रस्य श्रोत्रमिति। नैष दोषः। तस्यान्यथा विशेषानवगमात्। यदि हि श्रोत्रादिव्यापारव्यतिरिक्तेन स्वव्यापारेण विशिष्टः श्रोत्रादिनियोक्तावगम्येत दात्रादिप्रयोक्तृवत्तदेदमननुरूपं प्रतिवचनं स्यात्। न त्विह श्रोत्रादीनां प्रयोक्ता स्वव्यापारविशिष्टो लवित्रादिवदधिगम्यते। श्रोत्रादीनामेव तु संहतानां व्यापारेणालोचनसंकल्पाध्यवसायलक्षणेन

ஶ்ரோத்ரமானது கரணமாகவாகிறது. அதாவது:— சப்தத்தை ப்ரகாசப்படுத்துவது ஶ்ரோத்ரமென்ற இந்திரியமென்றேற்பட்டது. அதற்கு ஶ்ரோத்ரமானவர் அவர் "சக்ஷுஸ்ஸையும் ஶ்ரோத்ரத்தையும் எந்தத் தேவன் ப்ரகாசப்படுத்துகிறார்" என எவர் உன்னால் கேட்கப்பட்டாரோ என்றும்.

சங்கை—இவர் இத்தகையதுடன் கூடினவராய் ஶ்ரோத்ராதிகளை ப்ரேரணை செய்கிறார் எனச் சொல்லவேண்டுவது அவஶ்யமாகவிருக்க (அதைவிடுத்து) ஶ்ரோத்ரத்துக்கு=ஶ்ரோத்திரமென்ற இந்திரியத்துக்கு, ஶ்ரோத்ரமாகிறார் என்ற ப்ரதிவசனமானது=பதிலானது பொருத்தமற்றதாக வாகுமல்லவா எனின்?

உத்தரம்—இது தோஷமாகாது. ஏன்? அதற்கு வேறுவிதமான விசேஷமெதுவுமிருப்பதாக அறியப்படாமையே அதன் காரணமாகும். ஶ்ரோத்ராதிகளின் வியாபாரத்தைவிட வேறான தனது சொந்த வியாபாரத்துடன் கூடினவராக கத்தி முதலியவற்றை ப்ரயோகிப்பவர் போன்று ஶ்ரோத்ராதிகளை ப்ரேரணை செய்பவர் அறியப்படுவாராயின் அப்பொழுது இந்த ப்ரதிவசனமானது=பதிலானது, பொருத்தமற்றதாக வாகலாம்தான். இவ்விடத்திலோ ஶ்ரோத்ராதிகளை ப்ரேரிப்பவரோ கத்தி முதலியன கொண்டு வெட்டுபவர் போன்று தனித்த சொந்த வியாபாரத்துடன் கூடினவராக அறியப்படவில்லை. ஸங்காதங்களான (கூட்டமாகச் சேர்ந்த) ஶ்ரோத்ராதிகளின் ஆலோசனம் ஸங்கல்பம் நிஶ்சயம் இவை ரூபமானதும்

फलावसानलिङ्गेनावगम्यते अस्ति हि श्रोत्रादिभिरसंहतः, यत्प्रयोजन-प्रयुक्तः श्रोत्रादिकलापो गृहादिवदिति संहतानां परार्थत्वादवगम्यते श्रोत्रा-दीनां प्रयोक्ता। तस्मादनुरूपमेवेदं प्रतिवचनं श्रोत्रस्य श्रोत्रमित्यादि। कः पुनरत्र पदार्थः श्रोत्रस्य श्रोत्रमित्यादेः। नह्यत्र श्रोत्रस्य श्रोत्रान्तरेणार्थः, यथा प्रकाशस्य प्रकाशान्तरेण। नैष दोषः। अयमत्र पदार्थः। श्रोत्रं तावत्स्व-विषयव्यञ्जनसमर्थं दृष्टम्। तच्च स्वविषयव्यञ्जनसामर्थ्यं श्रोत्रस्य चैतन्ये ह्यात्मज्योतिषि नित्येऽसंहते सर्वान्तरे सति भवति नासतीति। अतः श्रोत्रस्य श्रोत्रमित्याद्युपपद्यते। तथाच श्रुत्यन्तराणि—"आत्मनैवायं ज्योति

முடிவிலுள்ள பலனல் கண்டுபிடிக்கக் கூடியதுமான வியாபாரத்தினல் 'ஶ்ரோத்ராதி கரண ஸமூஹமானது வீடு முதலியன போன்று எத்தகைய ப்ரயோஜனத்தை யுத்தேசித்துச் சேர்ந்தனவோ அத்தகைய ஶ்ரோத்ராதிக் கூட்டத்திற் சேராதவனுக ஒருவன் இருக்கிறுன் என்பதாய் மட்டும் அறியப்படுகிறது. கூட்டங்கள் பிறரதுப் பிரயோஜனத்துக்கு வேண்டியேற்படுவனபற்றி ஶ்ரோத்ராதிகளை ப்ரேரணை செய்பவன் (ஒருவருண்டென) அறியப்படுகிறுர். ஆகவே "ஶ்ரோத்ரஸ்ய ஶ்ரோத்ரம்" என்ற இந்த ப்ரதிவசனம் பொருத்தமுள்ளதாகவே ஆகிறது.

சங்கை—இங்குள்ள "ஶ்ரோத்ரஸ்ய ஶ்ரோத்ரம்" என்றதாதிகளின் பொருள்தான் யாது? ஒரு ஒளிக்கு மற்றெரு ஒளியினல் போல இங்குள்ள ஶ்ரோத்திரத்துக்கு வேறு ஶ்ரோத்திரத்தினல் பயனென்றுமில்லையன்றே எனின் ?

உத்தரம்—இந்தத் தோஷமிங்கில்லை. இங்குள்ள ஶ்ரோத்ராதி பதங்களின் பொருள் இதுவாம். அதாவது:—ஶ்ரோத்ரமோ தனது விஷயத்தை ப்ரகாசப்படுத்தும் ஸாமர்த்தியமுள்ளதாகக் காணப்பட்டது. ஶ்ரோத்திரத்துக்குள்ள தனது விஷயத்தை ப்ரகாசப்படுத்தும் அந்த ஸாமர்த்தியமும் நித்யமும் கூட்டத்திற் சேராததும், ஸர்வத்துக்கும் ஆந்தரமானதும் சைதன்யரூபமானதுமான ஆத்மஜ்யோதிஸ்ஸானது இருப்பதால் ஏற்படுகிறதேயொழிய இல்லாவிடில் ஏற்படுவதில்லை என்பதுபற்றி "ஶ்ரோத்திரத்துக்கு ஶ்ரோத்ரம்" என்ற

षास्ते" "तस्य भासा सर्वमिदं विभाति" "येन सूर्यस्तपति तेजसेद्धः" इत्यादीनि। "यदादित्यगतं तेजो जगद्भासयतेऽखिलम्।" "क्षेत्रं क्षेत्री तथा कृत्स्नं प्रकाशयति भारत।" इत्यादि गीतासु। काठके च-"नित्योऽनित्यानां चेतनश्चेतनानाम्" इति।

श्रोत्राद्येव सर्वस्यात्मभूतं चेतनमिति प्रसिद्धं, तदिह निवर्त्यते। अस्ति किमपि विद्वद्बुद्धिगम्यं सर्वान्तरतमं कूटस्थमजमजरममृतमभयं श्रोत्रादेरपि श्रोत्रादि तत्सामर्थ्यनिमित्तमिति प्रतिवचनं शब्दार्थश्चोपपद्यत एव। तथा मनसोऽन्तःकरणस्य मनः। नह्यन्तःकरणमन्तरेण चैतन्यज्योतिषा

தாதிகள் பொருத்தமுள்ளதாக வாகிவிடுகின்றன என்றும். அவ் விதமே "இவன் ஆத்மாவாகிற ஜ்யோதிஸ்ஸினாலேயே இருக்கிறான்" "அவரது (ஸ்வரூப) காந்தியினால் இவையாவும் பிரகாசிக்கிறது" "ஸூரியன் எந்தத் தேஜஸ்ஸினால் ப்ரகாசிப்பிக்கப்பட்டு விளங்குகி றானோ" என்றதாதிகளான வேறு ஸ்ருதிகளுமிருக்கின்றன. "ஸூரி யனையடைந்த எந்தத் தேஜஸ்ஸானது எல்லா ஜகத்தையும் ப்ரகாசப் படுத்துகிறதோ" என்றும், "ஹே பாரத! க்ஷேத்ரியான ஆத்மா அவ் விதமே க்ஷேத்திரம் முழுவதையும் ப்ரகாசப்படுத்துகிறான்" என் றும் பகவத்கீதாதிகளில் சொல்லப்பட்டுமிருக்கிறது. "அநித்யமான வைகளுக்குள் நித்யனும் சேதனமாகத் தோற்றுகின்றவைகளுள் சேதனனுமாகும்" என்க் காடகத்திலுஞ் சொல்லப்பட்டிருக்கிறது. ஸ்ரோத்ரம் முதலியதே ஸர்வத்துக்கும் ஆத்மாவாகவானது என்றும் சேதனமென்றும் உலகில் பொதுப்படையான ப்ரஸித்தியிருக்கி றது. அந்தப் பிரஸித்தியானது இங்கு மறுக்கப்படுகிறது. வித்வ தனுபவத்தால் காணக்கூடியதும், ஸர்வத்துக்கும் ஆந்தரதமமும், கூடஸ்தமும், அஜரமும், அமிருதமும், அபயமும், அஜமும், ஸ்ரோத் ராதிகளுக்கும் ஸ்ரோத்ராதியும், அவற்றின் ஸாமர்த்தியத்துக்கு நிமித் தமாகவுள்ளதுமானவொன்று இருக்கிறது என ப்ரதிவசனமும் சப் தத்தின் அர்த்தமும் பொருத்தமுள்ளதாகவே ஆகிறது. அதுபோலவே மனஸ்ஸூக்கு=அந்தக்கரணத்துக்கு மனஸ்ஸாக ப்ரம்ஹமாகிறது. அந்தக்கரணமானது சைதன்யஜ்யோதிஸ்ஸினாலல்லாது வேறொன் றினால் ப்ரகாசப்படுத்தப்பட்டதாய்க்கொண்டு தனது விஷயமான

दीपितं स्वविषयसंकल्पाध्यवसायादिसमर्थं स्यात्। तस्मान्मनसोऽपि मन इति। इह बुद्धिमनसी एकीकृत्य निर्देशो मनस इति। यद्वाचो ह वाचम् यच्छब्दो यस्मादर्थे श्रोत्रादिभिः सर्वैस्संबध्यते। यस्माच्छ्रोत्रस्य श्रोत्रम्, यस्मान्मनसो मन इत्येवम्। वाचो ह वाचमिति द्वितीया प्रथमात्वेन विपरिणम्यते। प्राणस्य प्राण इति दर्शनात्। वाचो हवाचमित्येतदनुरोधेन प्राणस्य प्राणमिति कस्मात् द्वितीयैव न क्रियते। न। बहूनामनुरोधस्य युक्तत्वाद्वाचमित्यस्य वागित्येतावद्वक्तव्यं स उ प्राणस्य प्राण इति शब्दद्वयानु-

---

ஸங்கல்பம் நிஸ்சயம் முதலியவற்றில் ஸமர்த்தமாகவாகாதன்றோ. ஆனதுபற்றி மனஸ்ஸுக்கும் மனஸ்ஸாகிறது என்க. இவ்விடத்தில் புத்தி மனஸ் இரண்டையும் ஒன்றாக்கி மன: என்பதாய்ச்சொல்லப்பட்டது. "यत् वाचो ह वाचम्" ("யத் வாசோ ஹ வாசம்") என்றவிடத்திலுள்ள यत(யத்) என்றசப்தமானது यस्मात्(யஸ்மாத்) யாதுகாரணத்தால் என்றபொருளுள்ளதாய் ஸ்ரோத்ராதிகள் எல்லாவற்றுடனும் சேர்க்கையை யடைகிறது. அதாவது:—யாது காரணத்தால் ஸ்ரோத்திரத்துக்கு ஸ்ரோத்திரமோ, யாதுகாரணத்தால் மனஸ்ஸுக்கு மனஸ்ஸோ என்றிவ்விதமென்றும். वाचो ह वाचम् (வாசோ ஹ வாசம்) என்றவிடத்தில் वाचम् (வாசம்) என்ற இரண்டாம் வேற்றுமையுள்ளதை முதல் வேற்றுமையுள்ளதாக [वाक् (வாக்) என்பதாக மாற்றிக்கொள்ளப்படுகிறது. 'ப்ராணனுக்கு ப்ராணன்' என்றவிடத்தில் ப்ராண: என்பதாய் முதல் வேற்றுமை காணப்படுவதே அதன் காரணமாகும். "वाचो ह वाचम्" ("வாசோ ஹ வாசம்") என்ற இதையனுஸரித்து प्राणस्य प्राणः (ப்ராணஸ்ய ப்ராண:) என்றவிடத்திலுள்ள प्राणः (ப்ராண:) என்பதை प्राणम् (ப்ராணம்) என்பதாய் இரண்டாவது வேற்றுமையுள்ளதாக ஏன் மாற்றிக்கொள்ளப்படக்கூடாது எனின்? அது கூடாது. வெகுவாகவுள்ளதை அனுஸரிப்பது பொருத்தமாகவாவதே அதன் காரணமாகும். वाचम् (வாசம்) என்ற இதற்கு वाक् (வாக்) என்ற இவ்வளவே மாற்றவேண்டுவதாகவாகிறது. स उ प्राणस्य प्राणः (ஸ உ ப்ராணஸ்ய ப்ராண:) என்றவிடத்திலுள்ள सः (ஸ:) என்றும், प्राणः (ப்ராண:) என்றுமான இரண்டு சப்தங்களை யனுஸரித்ததாக

रोधेन । एवं हि, बहूनामनुरोधः युक्तः कृतस्स्यात् । पृष्टं च वस्तु प्रथमयैव निर्देष्टुं युक्तम् । स यस्त्वया पृष्टः प्राणस्य प्राणाख्यवृत्तिविशेषस्य प्राणस्तत्कृतं हि प्राणस्य प्राणनसामर्थ्यम् । नह्यात्मनानधिष्ठितस्य प्राणनमुपपद्यते । “को ह्येवान्यात्कः प्राण्याद्यदेष आकाश आनन्दो न स्यात्” “ऊर्ध्वं प्राणमुन्नयत्यपानं प्रत्यंगस्यति” इत्यादि श्रुतिभ्यः। इहापि च वक्ष्यते—“येन प्राणः प्रणीयते तदेव ब्रह्म त्वं विद्धि” इति । श्रोत्रादीन्द्रियप्रस्तावे घ्राणप्राणस्य ननु युक्तं ग्रहणम् । सत्यमेवम् । प्राणग्रहणेनैव तु घ्राणस्य ग्रहणं कृतम् । एवं मन्यते श्रुतिः। सर्वस्यैव करणकलापस्य यदर्थप्रयुक्ता प्रवृत्ति

அது ஆவ்தே அதன் காரணமாகும். இவ்விதம் சொன்னாலன்றோ ந்யாயத்துக்குப் பொருந்திய வெகுவாகவுள்ளவற்றின் அநுஸரணம் செய்யப்பட்டதாகவாகும்.

மேலும் கேட்கப்பட்ட பொருளை முதல் வேற்றுமையுள்ள சப்தத்தினாலேயே குறிப்பிடுவதுதான் பொருத்தமாகவாகிறது. அதாவது:—எது உன்னால் கேட்கப்பட்டதோ அது ப்ராணனுக்கு=ப்ராணனெனப் பெயரிய விருத்திக்கு, ப்ராணனாகவாகும். ப்ராணனுக்கு ப்ராணனஞ்செய்யும்=(ஜீவிக்கச் செய்யும்) ஸாமர்த்தியம் அதனாலன்றோ செய்யப்பட்டதாகவாகிறது. ஆத்மாவினால் அதிஷ்டிதமாகவில்லாதவற்றுக்கு ப்ராணனமென்பது ஸம்பவிக்கமாட்டாதன்றோ. “யாதொரு இந்த ஆகாசமென்ற ஆனந்தமுண்டோ அது இல்லாதிருக்குமானால் எவன் ஜீவிப்பான் எவன் மூச்சுவிடுவான்” என்றும், “ப்ராணனை உயரில் கொண்டுபோகிறது, அபானத்தைக் கீழில் தள்ளுகிறது” என்றுமாதிய ஶ்ருதிகளுமிருக்கின்றன. இவ்விடத்திலுமே “எதனால் ப்ராணன் நடத்தப்படுகிறதோ அதையே ப்ரம்ஹமாக நீ அறிந்துகொள்” எனச் சொல்லப்படவும் போகிறது. ஶ்ரோத்ராதிகளான இந்திரியங்களைச்சொல்லத்தொடங்கியவிடத்தில் க்ராண ப்ராணனை=முக்கிய ப்ராணனைக் கிரஹிப்பது பொருந்துமோ? எனின். இதுவுண்மைதான். ப்ராணனைக் கிரஹித்ததினாலேயே முக்கிய ப்ராணனுடைய கிரஹணமும் செய்யப்பட்டதாகவே ஆகிவிடுகிறது, ஶ்ருதியானது இவ்விதம் எண்ணுகிறது. அதாவது: எல்லாக்கரண ஸமூஹத்தினுடையவும் ப்ரவிருத்தியானது எதன்

तत्त्वमिति प्रकरणार्थो विवक्षितः। तथा चक्षुषः चक्षुः=रूपप्रकाशकस्य चक्षुषो यद्रूपग्रहणसामर्थ्यं तदात्मचैतन्याधिष्ठितस्यैव। अतश्चक्षुषः चक्षुः। प्रष्टुः पृष्टस्यार्थस्य ज्ञातुमिष्टत्वाच्छ्रोत्रादेः श्रोत्रादिलक्षणं यथोक्तं ब्रह्म ज्ञात्वा इत्यध्याहियते। अमृता भवन्तीति फलश्रुतेश्च। ज्ञानाद्ध्यमृतत्वं प्राप्यते। ज्ञात्वा अतिमुच्य इति सामर्थ्याच्छ्रोत्रादिकरणकलापमुज्झित्वा, श्रोत्रादौ ह्यात्मभावं कृत्वा तदुपाधिः सन् तदात्मना जायते म्रियते, संसरति च। अतः श्रोत्रादेः श्रोत्रादिलक्षणं ब्रह्मात्मेति विदित्वा,अतिमुच्य= श्रोत्राद्यात्मभावं परित्यज्य, ये श्रोत्राद्यात्मभावं परित्यजन्ति ते धीराः=

ப்ரயோஜனத்துக்குவேண்டியேற்படுகிறதோ அது ப்ரம்ஹமாகும் என்பதாய் இந்த ப்ரகரணத்தின் பொருள் சொல்ல விரும்பப்பட்டது என்றும். அவ்விதமே चक्षुषश्चक्षुः (சக்ஷுஷஶ்சக்ஷு:) ரூபத்தை ப்ரகாசப்படுத்துகின்ற சக்ஷுஸ்ஸுக்கு ரூபத்தைக் கிரஹிக்கும் ஸாமர்த்தியம் யாதுண்டோ அது ஆத்மசைதன்யத்தினால் அதிஷ்டிதமாக உள்ளதுக்கேதான் ஸம்பவிக்கும். ஆகவேதான் சக்ஷுஸ்ஸுக்கு சக்ஷுஸ்ஸாகவாகிறது. ப்ரஶ்னம் செய்பவர்க்கு தான்கேட்ட பொருளையறிய விருப்பமிருக்குமாதலால் 'ஶ்ரோத்ராதிகளுக்கு ஶ்ரோத்ராதிரூபமாக இதுவரை சொல்லிய ப்ரம்ஹத்தையறிந்து' எனப் புதிதாய்ச் சேர்த்துக்கொள்ளப்படுகிறது. "अमृता भवन्ति" ("அம்ருதா பவந்தி") முக்தர்களாகவாகின்றனர் எனப் பலன் கூறும் ஶ்ருதியிருப்பதும் மற்றொரு காரணமாகும். க்ஞானத்தாலன்றோ அமிருதத்வம் அடையப்படுகின்றது. அறிந்து என்றும், அதிமுச்ய (விட்டு) என்றும் சொன்ன ஸாமர்த்தியத்தினால் ஶ்ரோத்ராதி கரணஸமூஹத்தை விடுத்து (என்றேற்பட்டது) ஶ்ரோத்ராதிகளில் ஆத்மபுத்தியைச் செய்தன்றோ அவற்றை உபாதியாகக் கொண்டு அவ்வுருவமாகப் பிறக்கவும், மரிக்கவும், ஸம்ஸரிக்கவும் செய்கிறான். ஆனதுபற்றி ஶ்ரோத்ராதிகளுக்கு ஶ்ரோத்ராதிரூபமான ப்ரம்ஹத்தை ஆத்மாவென அறிந்து अतिमुच्य (அதிமுச்ய) ஶ்ரோத்ராதிகளில் ஏற்பட்ட ஆத்மபுத்தியைவிடுத்து என்பது பொருள். எவர்கள் ஶ்ரோத்ராதிகளில் ஆத்மபுத்தியை விடுகின்றனரோ அவர்கள் தீரர்கள் (புத்தியுள்ளவர்கள்) ஆவர். சிறந்தபுத்தி

धीमन्तः। नहि विशिष्टधीमत्त्वमन्तरेण श्रोत्राद्यात्मभावः शक्यः परित्यक्तुम्। प्रेत्य=व्यावृत्त्य, अस्माल्लोकात्=पुत्रमित्रकलत्रबंधुषु मम हंभावसंव्यवहारलक्षणात्, त्यक्तसर्वैषणा भूत्वेत्यर्थः। अमृताः=अमरणधर्माणो भवन्ति। "न कर्मणा न प्रजया धनेन त्यागेनैके अमृतत्वमानशुः" "पराञ्चि खानि व्यतृणत्......आवृत्तचक्षुरमृतत्वमिच्छन्" "यदा सर्वे प्रमुच्यन्ते... अत्र ब्रह्म समश्नुते" इत्यादिश्रुतिभ्यः। अथवा—अतिमुच्येत्यनेनैवैषणात्यागस्य सिद्धत्वादस्माल्लोकात्प्रेत्य अस्माच्छरीरात्प्रेत्य मृत्वेत्यर्थः ॥ २ ॥

यस्माच्छोत्रादेरपि श्रोत्राद्यात्मभूतं ब्रह्म अतः—

யுள்ளவனுக இருந்தாலன்றி ஸ்ரோத்ராதிகளில் ஆத்ம புத்தியானது விடமுடியாதன்றோ. "अस्माल्लोकात्" ((அஸ்மால்லோகாத்) புத்திர மித்திர களத்திர பந்துக்களிடத்து நான் என்னுடையது என்ற வியவஹார ரூபமான இந்த வுலகிலிருந்து प्रेत्य (ப்ரேத்ய) திரும்பி, எல்லா ஏஷணைகளையும் விட்டவர்களாகவாகி என்பது பொருள். அமிருதர்களாக=மரண தர்மமற்றவர்களாக் ஆகின்றனர். "சில முக்கியாதிகாரிகள் தியாக (ஸன்யாஸ) த்தாலேயே அமிருதத்வத்தை அடைந்தனரேயொழிய கர்மத்தாலில்லை, ப்ரஜையினுலில்லை, தனத்தினுலில்லை" என்றும், "இந்திரியங்களை வெளிநோக்குள்ளனவாகச் செய்து ஹிம்ஸித்தார்" "அமிருதத்வத்தை விரும்புகின்றவன் சக்ஷுஸ்ஸை விஷயத்தினின்றும் திருப்பினவனுகவேண்டும்" என்றும், "எதுபோழ்து எல்லாம் விடுபடுகின்றனவோ" என்றும், "இவ்விடத்திலேயே ப்ரஹ்மத்தையடைகிறான்" என்றுமான ஸ்ருதிகளுமிருக்கின்றன. அல்லது அதிமுச்ய=விடுத்து, என்றதினுலேயே ஏஷணுத்யாகமானது சித்தமாகவாகிவிடுவதால் இந்த லோகத்தினின்றும் ப்ரேத்ய=என்றதற்கு இந்தச் சரீரத்தினின்றும் மரித்தபின்னர் என்று பொருள். (ப்ராரப்தகர்மாயத்தமான இந்தச் சரீரம் போனதும் முக்தராகவாகிவிடுகின்றனர் என்றேற்படுகிறது.) (2) (எ—று)

(அ—கை) யாதுகாரணத்தால் ஸ்ரோத்ராதிகளுக்கு ஸ்ரோத்ராதியாயும், ஆத்மாவாகவானதாயும் ப்ரஹ்மமிருக்கிறதோ அக்காரணம் பற்றி அது வாகாதிகளுக்கு விஷயமாவதில்லை எனவுபதேசிக்கப்படுகிறது—

न तत्र चक्षुर्गच्छति न वाग्गच्छति नो मनः ।
न विद्मो न विजानीमो यथैतदनुशिष्यात् ॥ ३ ॥

ந தத்ர சக்ஷுர்கச்சதி ந வாக்கச்சதி நோ மந: ।
ந வித்மோ ந விஜாநீமோ யதைததநுஶிஷ்யாத் ॥ ௩ ॥

न तत्र=तस्मिन् ब्रह्मणि चक्षुर्गच्छति, स्वात्मनि गमनासंभवात् । तथा-न वाग्गच्छति । वाचा हि शब्द उच्चार्यमाणोऽभिधेयं प्रकाशयति यदा, तदाभिधेयं प्रति वाग्गच्छतीत्युच्यते । तस्य च शब्दस्य, तन्निर्वर्तकस्य च करणस्य आत्मा ब्रह्म । अतो न वाग्गच्छति । यथाग्निर्दाहकः प्रकाशकश्चापि

(ப—ரை) तत्र (தத்ர)=அந்த ப்ரஹ்மத்தினிடத்தில் चक्षुः (சக்ஷு:)=கண்ணானது, न गच्छति (ந கச்சதி)=செல்லுவதில்லை. वाक् (வாக்)=வாகிந்த்ரியமானது न गच्छति (ந கச்சதி)=செல்லுவதில்லை. मनः (மந:)=மனஸ்ஸும், नो (நோ)=செல்லுவதில்லை. ஆகவே न विद्मः (ந வித்ம:)=ப்ரஹ்மம் இத்தகையதென அறிகின்றோமில்லை. ஆனதுபற்றியே एतत् (ஏதத்)=இந்த ப்ரஹ்மத்தை यथा (யதா)=எவ்விதம் अनुशिष्यात् (அநுஶிஷ்யாத்)=சிஷ்யனுக்கு உபதேசிக்கக் கூடுமோ அம்முறையை न विजानीमः (ந விஜாநீம:)=அறிகின்றோமில்லை. (௩) (எ—று)

பாஷ்யம்.—யாதுகாரணத்தால் ஶ்ரோத்ராதிகளுக்கு ஶ்ரோத்ராதியாயும் ஆத்மாவாகவானதாயும் ப்ரஹ்மமிருக்கின்றதோ அக்காரணத்தால் அந்த ப்ரஹ்மத்தினிடத்தில் கண் செல்லுவதில்லை. அவற்றுக்குச் சொந்த ஆத்மாவினிடத்தில் கதி ஸம்பவிக்கமுடியாதிருப்பதே அதன் காரணமாகும். அவ்விதமே வாக்கும் செல்லுவதில்லை. வாக்கினாலுச்சரிக்கப்படும் சப்தமானது அபிதேயத்தை=தனக்குரிய விஷயத்தை, எப்பொழுது ப்ரகாசப்படுத்துகிறதோ அப்பொழுது அபிதேயத்தை=தனக்குரிய விஷயத்தைக் குறித்து வாக்கானது போகிறது எனச் சொல்லப்படுகிறது. அந்தச் சப்தத்துக்கும் அதையுண்டுபண்ணும் காரணத்துக்கும் ஆத்மாவாக ப்ரஹ்மமிருக்கிறது. ஆனதுபற்றி வாக்கு செல்லுவதில்லை. அக்னியானது பொசுக்குவதாயும் ப்ரகாசகமாயுமிருப்பினுங்கூட தனது ஆத்

स्वमात्मानं प्रकाशयति दहति वा तद्वत्। नो मनः=मनश्चान्यस्य सङ्कल्पयितृ अध्यवसातृ च सदात्मानं सङ्कल्पयति अध्यवस्यति च। तस्यापि ब्रह्मात्मेति। इन्द्रियमनोभ्यां हि वस्तुनो विज्ञानं, तदगोचरत्वान्न विद्मस्तद्ब्रह्मेदृशमिति। अतो न विजानीमो यथा=येन प्रकारेणैतद्ब्रह्मानुशिष्यात्=उपदिशेच्छिष्यायेत्यभिप्रायः। यद्धि करणगोचरं तदन्यस्मा उपदेष्टुं शक्यं जातिगुणक्रियाविशेषणैः। न तज्जात्यादिविशेषणवद्ब्रह्म। तस्माद्विषमं शिष्यानुपदेशेन प्रत्याययितुं इति उपदेशे तदर्थग्रहणे च यत्नातिशयकर्तव्यतां दर्शयति न विद्मः इत्यादि ॥ ३ ॥

மாவை ப்ரகாசப்படுத்தவோ பொசுக்கவோ எவ்விதம் முடிவதில்லையோ அவ்விதமே இங்கும் காண்க. नो मनः (நோ மந:) மனஸ்ஸானது பிறவற்றை ஸங்கல்பிப்பதாகவும், நிஸ்சயிப்பதாகவும் இருந்துக்கொண்டு தனது ஆத்மவிஷயமான ஸங்கல்பத்தையோ நிஸ்சயத்தையோ செய்யமுடியாததன்றோ. அந்த மனஸ்ஸுக்கும் ப்ரம்ஹம் ஆத்மாவாக இருப்பதாலென்க. இந்திரியம் மனஸ் இவற்றாலன்றோ வஸ்துவைப்பற்றிய அறிவேற்படுகிறது. அவற்றுக்கு விஷயமாகவாகாததால் அந்த ப்ரம்ஹம் இத்தகையதென அறிகின்றோமில்லை. ஆகவே எம்முறையாக இந்த ப்ரம்ஹத்தைச் சிஷ்யனுக்கு உபதேசிக்கக்கூடுமோ அம்முறையை அறிகின்றோமில்லை என்பது கருத்து. எது கரணங்களுக்குப் புலனாகக் கூடியதோ அதுவன்றோ *ஜாதி குணம், க்ரியை முதலிய விசேஷணங்களுடன் பிறருக்கு உபதேசிக்கக்கூடியதாகவாகும். ப்ரம்ஹமானது அத்தகைய ஜாதி முதலிய விசேஷமுள்ளதன்று. ஆகவே சிஷ்யர்களை வுபதேசமூலம் அறிவுறுத்தல் என்பது விஷமமானதே=முடியாததே ஆகும். உபதேச விஷயத்திலும் அதன் பொருளைக் கிரஹிப்பதிலும் பெருமுயற்சி செய்யவேண்டுமென்பதை "न विद्मः" ("ந வித்ம:") என்றதாதியாலுபதேசிக்கிறது. (3) (எ—று)

---

* இவன் ப்ராம்ஹணன் என்பது ஜாதியை முன்னிட்டவுபதேசமாகவும், இவன் கருப்பன் என்பது குணத்தை முன்னிட்டவுபதேசமாகவும், இவன் சமையல்காரன் என்பது க்ரியையை முன்னிட்டவுபதேசமாகவும், இவன் ராஜபுருஷன் என்பது ஸம்பந்த விசேஷத்தை முன்னிட்டவுபதேசமாகவும் ஆகும்.

अत्यन्तमेवोपदेशप्रकारप्रत्याख्याने प्राप्ते तदपवादोऽयमुच्यते। सत्य मेवं प्रत्यक्षादिभिः प्रमाणैः न परः प्रत्याययितुं शक्यः, आगमेन तु शक्यत एव प्रत्याययितुमिति तदुपदेशार्थमागममाह—

अन्यदेव तद्विदितादथो अविदितादधि।
इति शुश्रुम पूर्वेषां ये नस्तद्व्याचचक्षिरे ॥ ४ ॥

𑌅𑌨𑍍𑌯𑌦𑍇𑌵 𑌤𑌦𑍍𑌵𑌿𑌦𑌿𑌤𑌾𑌦𑌥𑍋 𑌅𑌵𑌿𑌦𑌿𑌤𑌾𑌦𑌧𑌿 ।
𑌇𑌤𑌿 𑌶𑍁𑌶𑍍𑌰𑍁𑌮 𑌪𑍂𑌰𑍍𑌵𑍇𑌷𑌾𑌂 𑌯𑍇 𑌨𑌸𑍍𑌤𑌦𑍍𑌵𑍍𑌯𑌾𑌚𑌚𑌕𑍍𑌷𑌿𑌰𑍇 ॥ ௪ ॥

அவதாரிகா பாஷ்யம்.—முற்றிலும் உபதேசஞ்செய்யும் முறையின் மறுப்பு ப்ராப்த்தமாகவே அதற்குவேண்டி இந்த மறுப்பு சொல்லப்படுகிறது. ப்ரத்யக்ஷாதிகளான ப்ரமாணங்களால் பரமாத்மா இவ்விதமென அறிவுறுத்தக் கூடியவரல்லர் என்பது உண்மைதானுயினும் ஆகமங்களால் (சாஸ்திரங்களால்) அறிவுறுத்தக் கூடியவராகவே ஆகிறார். அவரையுபதேசிக்கவேண்டி "அன்யதேவதத்விதிதாத் அதோ அவிதிதாத் அதி" என்ற சாஸ்திரத்தைச் சொல்லுகிறது.

(ப—ரை) ஆயினும் तत् (தத்)=அந்த ப்ரம்ஹமானது विदितात् (விதிதாத்)=ப்ரத்யக்ஷானுமான சப்தங்களால் அறியப்பட்ட பொருளைக்காட்டிலும் (வேதனகார அந்தக்கரணவிருத்திக்கு விஷயமான பொருளைக்காட்டிலும்) अन्यदेव (அந்யதேவ)=வேறுபட்டதேயாகும். अविदितादथो (அவிதிதாததோ)=அறியப்பட்டதற்கு மாறானவற்றைக் காட்டிலும் அதாவது: ஸ்தூலப்பொருளுக்குக் காரணமான அவ்யாகிருதத்தைக் காட்டிலும் என்றும் अधि (அதி)=மேலாக அதாவது: வேறாக இருக்கிறது. इति (இதி)=இவ்விதம், ये (யே)=எவர் नः (நः)=எங்களுக்கு तत् (தத்)=அந்த ப்ரம்ஹத்தை व्याचचक्षिरे (வ்யாசசக்ஷிரே)=தெளிவாயுபதேசித்தனரோ [तेषाम् (தேஷாம்)=அந்தகைய] पूर्वेषाम् (பூர்வேஷாம்)=ஞ்ஞானவான்களுட்சிறந்த ஆசிரியர்களுடைய [वचनम् (வசநம்)=உபதேசத்தை] शुश्रुम (ஶுஶ்ரும)=கேட்டுளோம். ஆசாரியோபதேச பரம்பரையையொட்டி இதையறிந்து கொள்ளவேண்டுமேயல்லாது வேறு எம்முறையாலுமறியவியலாது என்பது கருத்து. (4) (எ—று)

अन्यदेव तद्विदितादथो अविदितादधि इति। अन्यदेव=पृथगेव, यत्=यत्प्रकृतं श्रोत्रादीनां श्रोत्रादीत्युक्तमविषयं च तेषाम्। तद्विदितादन्यदेव हि। विदितं नाम यद्विदिक्रिययातिशयेनाप्तं तद् विदिक्रियाकर्मभूतं क्व चित्किञ्चित्कस्यचिद्विदितं स्यादिति सर्वमेव व्याकृतं तद् विदितमेव। तस्मादन्यदित्यर्थः। अविदितमज्ञातं तर्हीति प्राप्त आह—अथो अविदितात्=विदितविपरीतादव्याकृतादविद्यालक्षणाद्व्याकृतबीजात्। अधीत्युपर्यर्थे लक्षणया ऽन्यदित्यर्थः। यद्धि यस्मादध्युपरि भवति तत्तस्मादन्यदिति प्रसिद्धं, यद्विदितं तदल्पं मर्त्यं दुःखात्मकं चेति हेयम्। तस्माद्विदितादन्यद्ब्रह्मेत्युक्ते त्वहे-

---

பாஷ்யம் — ஶ்ரோத்ராதிகளுக்கு ஶ்ரோத்ராதி என்றும் அவற்றுக்கு விஷயமாகவாகாதது என்றும் எது தொடங்கப்பட்டதோ அது வேறாகவேயாகும். அது விதிதத்தை (அறியப்பட்டதை)க் காட்டிலும் வேறுபட்டதேயாகும். விதிதமா (அறியப்பட்டதா)வது=எது வேதனம்=அறிவு என்ற மானஸ க்ரியையினால் மிக்க நோக்குடன் அடையப்பட்டதோ அதுவே விதிதம்=அறியப்பட்டது என்றும். அந்த ப்ரம்ஹமானது அதைக்காட்டிலும் (முற்கூறிய விதிதத்தைக்காட்டிலும்) வேறுபட்டது என்பது பொருள். அங்ஙனமாயின் அவிதிதம்=அறியப்படாதது என ப்ராப்த்தமாகவே ஶ்ருதி சொல்லுகிறது: अथो अविदितात् (அயோ அவிதிதாத்) விதிதத்துக்கு=அறியப்பட்டதுக்கு மாறுபட்டதை அவ்யாக்ருதத்தை=அவித்யா ஸ்வரூபமானதும் வியாக்ருதங்களுக்குக் காரணமானதுமானவற்றைக் காட்டிலும் अधि (அதி) வேறுபட்டது இங்குள்ள अधि (அதி) என்பதற்கு=மேலானது என்பது பொருள். ஆயினும் லக்ஷணைமுறையால் வேறுபட்டது என்ற பொருளுள்ளதாகவாகிறது. எது எதைக்காட்டிலும் अधि (அதி) மேலானதாக இருக்குமோ அது அதைக்காட்டிலும் வேறுபட்டது என்பது ப்ரஸித்தமானதே. எது விதிதமோ=வேதனம் என்ற மானஸக்ரியைக்கு விஷயமானதோ, அது அற்பமாகவும்=பரிச்சின்னமாகவும், மார்த்யமாகவும்=அழிவையடையக்கூடியதாகவும், துக்கஸ்வரூபமுள்ளதாகவும் ஆவதுபற்றி ஹேயமாக=விடக்கூடியதாகவாகும். அத்தகைய விதிதத்தைக்காட்டிலும் வேறானது ப்ரம்ஹம் என்று சொல்லப்பட்டாலோ அஹே

यत्वमुक्तं स्यात् । तथाऽविदितादधीत्युक्तेऽनुपादेयत्वमुक्तं स्यात् । कार्यार्थं हि कारणमन्यदन्येनोपादीयते । अतश्च न वेदितुरन्यस्मै प्रयोजनायान्यदुपादेयं भवतीत्येवं विदिताविदिताभ्यामन्यदिति हेयोपादेयप्रतिषेधेन स्वात्मनोऽन्यब्रह्मविषया जिज्ञासा शिष्यस्य निवर्तिता स्यात् । न ह्यन्यस्य स्वात्मनो विदिताविदिताभ्यामन्यत्वं वस्तुनः संभवतीत्यात्मा ब्रह्मेत्येष वाक्यार्थः । 'अयमात्मा ब्रह्म' 'य आत्माऽपहतपाप्मा' 'यत्साक्षादपरोक्षाद्ब्रह्म' 'य आत्मा सर्वान्तरः' इत्यादिश्रुत्यंतरेभ्यश्च । इत्येवं सर्वात्मनः सर्वविशेषरहितस्य चिन्मात्रज्योतिषो ब्रह्मत्वप्रतिपादकस्य वाक्यार्थस्याचार्योपदेश-

---

யத்வமான து=விடக்கூடியதன்று என்பதானது சொல்லப்பட்டதாகவாகிறது. அவ்விதமே "அவிதிதாததி" என்று சொல்லப்பட்டதும் அநுபாதேயத்வமான து=எடுக்கக்கூடியதன்று என்பதானது சொல்லப்பட்டதாகவாகிறது. காரியத்துக்கு வேண்டியன்றோ அதைக் காட்டிலும் வேறுபட்ட காரணமானது (இவ்விரண்டைக் காட்டிலும்) வேறொருவனால் எடுக்கப்படுகிறது. ஆகவே வேதிதாவை (அறிபவனை)க்காட்டிலும் வேறுபட்ட ப்ரயோஜனத்தையும் பொருட்டு வேறுபட்ட பொருள் உபாதேயமாக (எடுக்கக் கூடியதாக) ஆகிறது என்றும். இவ்விதம் விதிதம் அவிதிதம் இவற்றைக் காட்டிலும் வேறுபட்டது என்பதாய் ஹேய உபாதேயத் தன்மையை மறுத்ததனால் தனது ஆத்மாவைக்காட்டிலும் அன்னியமானவற்றில் ப்ரம்ஹ விஷயமான ஜிஜ்ஞாஸையானது போக்கப்பட்டதாகவாகி விடுகிறது. தனது ஆத்மாவைக்காட்டிலும் வேறுபட்ட பொருளுக்கு விதிதா விதிதங்களைக்காட்டிலும் வேறுபட்டிருத்தல் ஸம்பவிக்கமாட்டாதானதுபற்றி ஆத்மாவே ப்ரம்ஹம் என்ற இந்த வாக்கியார்த்தம் ஏற்படுகிறது. "இந்த ஆத்மா ப்ரம்ஹம்" என்றும், "பாபஸம்பந்தமற்ற யாதொரு ஆத்மாவுண்டோ" என்றும், "ஸாக்ஷாத்தாயும் (கௌணமாக இல்லாததாயும்) அபரோக்ஷாத் (மறைந்துநிற்காததாயும்) உள்ள யாதொரு ப்ரம்ஹமுண்டோ" என்றும், "யாதொரு ஆத்மா ஸர்வாந்தரனே" என்றுமான சுருதிகளுமிருக்கின்றன. இவ்விதம் ஸர்வாத்மாவும், எத்தகைய விசேஷமுமற்றதுமான சைதன்யமாத்திரமான ஜ்யோதிஸ்ஸுக்கு ப்ரம்ஹத்தன்மையை விளக்

परंपरया प्राप्तत्वमाह—इति शुश्रुमेत्यादि। ब्रह्म चैवमाचार्योपदेशपरंपरयै-वाधिगन्तव्यं न तर्कतः प्रवचनमेधावहुश्रुततपोयज्ञादिभ्यश्चेत्येवं शुश्रुम श्रुतवन्तो वयं पूर्वेषामाचार्याणां वचनम्। य आचार्या नोऽस्मभ्यं तद्ब्रह्म व्याचचक्षिरे व्याख्यातवन्तो विस्पष्टं कथितवन्तस्तेषामित्यर्थः॥ ४॥

'अन्यदेव तद्विदितादथो अविदितादधि' इत्यनेन वाक्येनात्मा ब्रह्मेति प्रतिपादिते श्रोतुराशङ्का जाता तत्कथन्त्वात्मा ब्रह्म। आत्मा हि नामाधि-कृतः कर्मण्युपासने च संसारी कर्मोपासनं वा साधनमनुष्ठाय ब्रह्मादि-देवान्स्वर्गं वा प्राप्तुमिच्छति। तत्तस्मादन्य उपास्यो विष्णुरीश्वर इन्द्रश्च प्राणो वा ब्रह्म भवितुमर्हति न त्वात्मा। लोकप्रत्ययविरोधात्। यथान्ये

குகின்ற வாக்கியார்த்தமானது ஆசாரியோபதேச பரம்பரையால் ப்ராப்தமாகிறது என்பதை "என்று கேட்டோம்" என்றதாதியால் சுருதி சொல்லுகிறது. ப்ரம்ஹம் இவ்விதம் ஆசாரியோபதேச பரம் பரையினுலேயே அறியக்கூடியதேயொழிய (கேவல) யுக்தியினுலோ, ப்ரவசனம், மேதை, வெகுசாஸ்திரச்ஞானம், தபஸ், யக்ஞம் முதலிய வைகளினுலோ அறியக்கூடியதன்று என எந்த ஆசிரியர்கள் எங் களுக்கு அந்தப்ரம்ஹத்தை மிக்கத்தெளிவாக வுபதேசித்தனரோ அந்த முன்னருள்ள ஆசிரியர்களின் வசனத்தை நாம் கேட்டோம். என்று பொருள். (5) (எ—று)

அவதாரிகா பாஷ்யம்.—"अन्यदेव तद्विदितादथो अविदितादधि" ("அந்யதேவ தத்விதிதாதயோ அவிதிதாதயி") என்ற இந்த வாக்கி யத்தினுல் ஆத்மாப்ரம்ஹம் எனவுபதேசிக்கப்பட்டதும் ஆத்மாவா னது ப்ரம்ஹமாக எவ்விதமாகக் கூடும் எனஸ்ரோதாவுக்கு (சிஷ்ய னுக்கு) ஆசங்கை உண்டாகிறது. ஆத்மாவென்பவனே கர்மாவி லும் உபாஸனத்திலும் அதிகாரம் பெற்றவனுகவும், ஸம்ஸாரியாக வும், கர்மம் உபாஸனம் இவையாகிற ஸாதனத்தை அனுஷ்டித்து ப்ரம்ஹாதிதேவர்களேயோ ஸ்வர்க்கத்தையோ அடையவிரும்புகி ருன். ஆகவே அவனைக்காட்டிலும் வேருகவே உள்ள விஷ்ணுவோ, ஈஸ்வரனே, இந்திரனே, ப்ராணனே, உபாஸ்யமான ப்ரம்ஹமாக வாகுமேயொழிய ஆத்மா ப்ரம்ஹமாக வாகமாட்டாது. லோகானு

तार्किका ईश्वरादन्य आत्मेत्याचक्षते, तथा कर्मिणः अमुं यजामुं यज इत्यान्या एव देवता उपासते। तस्माद्युक्तं यद्विदितमुपास्यं तद्ब्रह्म भवेत्ततोऽन्य उपासक इति। तामेतामाशङ्कां शिष्यलिङ्गेनोपलक्ष्य तद्वाक्याद्वाह—

यद्वाचाऽनभ्युदितं येन वागभ्युद्यते।
तदेव ब्रह्म त्वं विद्धि नेदं यदिदमुपासते ॥ ५ ॥

யத்³வாசாऽநப்⁴யுதி³தம் யேந வாக³ப்⁴யுத்³யதே ।
ததே³வ ப்³ரஹ்ம த்வம் வித்³தி⁴ நேத³ம் யதி³த³முபாஸதே ॥ ௫ ॥

मैवं शङ्किष्ठाः। यच्चैतन्यमात्रसत्ताकम्। वाचा—वागिति जिह्वा-मूलादिष्वष्टसु स्थानेषु विषक्तमाग्नेयं वर्णानामभिव्यञ्जकं करणम्। वर्णाश्च-

---

பவத்துக்கு முரண்படுவதே அதன் காரணமாகும். மற்றதார்க்கிகர்கள் ஆத்மாவை ஈஶ்வரனைக் காட்டிலும் வேறானவனாகவே எவ்விதம் சொல்லுகின்றனரோ, அவ்விதமே கர்மிகளும் "இவரை யஜிப்பாயாக, இவரையஜிப்பாயாக" என்பதாய் வேறாகவே யுள்ளதேவதைகளை உபாஸிக்கின்றனர். ஆகவே எது விதிதமோ அது உபாஸ்யமான ப்ரப்ஹமாகவாகும் என்பது பொருத்தமானது. உபாஸகன் அதைக் காட்டிலும் வேறுபட்டவனாவான் என்பதாய அந்த இந்த ஆசங்கையை ஶிஷ்யனுடைய முகக்குறியால் அறிந்து அல்லது அவனது வார்த்தையினாலாவது அறிந்து ஆசிரியருபதேசிக்கிறார்—

(ப—ரை) यत् (யத்)=சைதன்யமாத்ர ஸ்வரூபமான எது वाचा (வாசா)=பதஸமூஹத்தினால் अनभ्युदितम् (அநப்⁴யுதி³தம்)=ப்ரகாசப்படுத்தப்படாததோ, येन (யேந)=எந்தப்ரம்ஹத்தினால் वाक् (வாக்)=கரணத்துடன் கூடின சப்தமானது अभ्युद्यते (அப்⁴யுத்³யதே)=ப்ரகாசப்படுத்தப்படுமோ तदेव (ததே³வ)=அதையே ब्रह्म (ப்³ரஹ்ம)=ப்ரம்ஹமாக त्वम् (த்வம்)=நீ विद्धि (வித்³தி⁴)=அறிவாயாக. यत् (யத்)=எதை इदम् (இத³ம்)=இது என்பதாய் உபாதிபேதத்துடன் கூடியதாக उपासते (உபாஸதே)=உபாஸிக்கின்றனரோ इदम् (இத³ம்)=இது न (ந)=ப்ரம்ஹமன்று. (4) (எ—று)

பாஷ்யம்.—இவ்விதமாசங்கை கொள்ளாதே. சைதன்னியமாத்திரமான ஸ்திதியையுடைய எது வாக்கினால் (சொல்லப்படாததோ)

र्थसङ्केतपरिच्छिन्ना एतावन्त एवङ्क्रमप्रयुक्ता इत्येवं तदभिव्यङ्ग्यश्शब्दः पदं वाक् इत्युच्यते। "अकारो वै सर्वा वाक्, सैषा (स्य) स्पर्शान्तस्थो-

---

இங்குள்ள வாக் என்றதனால் *நாக்கின் அடிமுதலிய எட்டுஸ்தானங்களில் ஸ்பந்தத்தையடைந்ததும், அக்னியைத் தேவதையாகவுடையதும், வர்ணங்களைப் பிரகாசப்படுத்துவதுமாக கரணமிருக்கிறது. எழுத்துக்களும் பொருளைப்பற்றிய ஸங்கேதத்தையொட்டி (1)பரிச்சின்னங்களாகவும் (அதாவது: இம்முறைப்படிப் பிரயோகிக்கக்கூடியனவென்றும் இத்தனை எழுத்துக்கள் சேர்ந்தனவென்றுமாம்) இருக்கின்றன. இத்தனையும் சேர்ந்த எழுத்துக்களினால் (2)ப்ரகாசப்படுத்தப்படும் சப்தமானது பதம் என்றும், வாக் என்றும் சொல்லப்படும். ஆகவே முற்கூறிய கரணம் அதனால் பிரகாசப்படுத்தப்படும் வர்ணம் ஆக இரண்டும் சொல்லப்பட்டதாகக்கொள்ளவேண்டும். अ(அ) "அ என்ற எழுத்தை முக்கியமாகவுடைய ओम्(ஓம்) ஓம் என்ற ப்ரணவத்தினால் உபலக்ஷணை முறையாற் காண்பிக்கப்பட்ட ஸ்போடமெ

---

*अष्टौ स्थानानि वर्णानामुरः कण्ठश्शिरस्तथा। जिह्वामूलञ्च दन्ताश्च नासिकोष्ठौ च तालु च॥ (அஷ்டௌ ஸ்தாநாநி வர்ணாநாமுர: கண்ட²ஶ்ஶிரஸ்ததா². ஜிஹ்வாமூலஞ்ச த³ந்தாஶ்ச நாஸிகோஷ்டௌ² ச தாலு ச॥)=வர்ணங்கள் (எழுத்துக்கள்) மார்பு, கண்டம், சிரஸ், ஜிஹ்வா (நாக்கின்) மூலம்—அடி, பற்கள், மூக்கு, உதடு-தாலு முதலிய எட்டு இடங்களினின்றும் உண்டாவதாக சிக்ஷையென்றநூல் சொல்லுகின்றது.

(1) அந்தந்தப்பொருளைக் கூறுவதற்குத்தக்கபடி கூட்டியும் குறைத்தும் சொல்லப்படுவனவாகவும் என்று பொருள்.

(2) பாஷ்யத்தில் "तदभिव्यङ्ग्यश्शब्दः" ("தத³பி⁴வ்யங்க்³யஶ்ஶப்³த³:") என்றதனால் गौः (கௌ:) என்றவிடத்தில் க், ஔ, :, க என்றும், ஔ என்றும், : என்றும், சொல்லப்பட்டவுடன் இம்மூன்று எழுத்துக்களும் அழிந்துவிடினும் இம்மூன்றும் சேர்ந்து ஒன்று என்பதாய் இவற்றினால் "கௌ:" என்ற அழியாத சப்தமறியப்படுவதாயும். அதுவே ஸ்போடம் என்றும், வியாகரண சாஸ்திரத்தில் சொல்லியிருப்பதையொட்டி ஸ்போடம் என்ற சப்தம் சொல்லப்பட்டதாகக் கொள்ளவும். மற்றும் இதுவிஷயமான விசேஷத்தை நமது ஸூத்திர பாஷ்ய தமிழ் மொழிபெயர்ப்பில் 1-வது அத்யாயம் 375-வது முதலுள்ள பக்கங்களில் காண்க.

ष्मभिव्यज्यमाना दह्वी नानारूपा भवति" इति श्रुतेः। मितममितं स्वरः सत्यानृत एव विकारः यस्याः, तया वाचा पदत्वेन परिच्छिन्नया करणगुणवत्या अनभ्युदितम्=अप्रकाशितमनभ्युक्तम्, येन=ब्रह्मणा विवक्षितेऽर्थे सकरणा वागभ्युद्यते=चैतन्यज्योतिषा प्रकाश्यते प्रयुज्यत इत्येतत्। "यद्वाचो ह वाक्" इत्युक्तम्। "वदन् वाक्," "यो वाचमन्तरो यमयति"

னப்பெயரிய சித்சக்தியானது ஸர்வ வாக்ரூபமாகவிருக்கிறது. அந்த இந்த ஸ்போடசித்சக்தியானது ஸ்பர்சங்களாலும்=क (க) க என்ற எழுத்து தொடங்கி म (ம) ம என்ற எழுத்தீறாகவுள்ள 25 அக்ஷரங்களாலும், அந்தஸ்தங்களாலும்=य र ल व (ய ர ல வ) ய ர ல வ என்ற 4 அக்ஷரங்களாலும், ஊஷ்மாக்களாலும்=श ष स ह (ஶ ஷ ஸ ஹ) ஶ ஷ ஸ ஹ என்ற 4 அக்ஷரங்களாலும், ப்ரகாசப்படுத்தப் படுவதாய்க்கொண்டு வெகுவாகவும் பலரூபமுள்ளதாகவும் ஆகிறது" என ஶ்ருதியிருக்கிறது. ஆகவே மிதம்=பாதத்தின் முடிவில் நியதமான (கணக்கிடப்பட்ட) அக்ஷரங்களையுடைய ருக்முதலியனவென்ன, அமிதம்=கணக்கிடப்படாத எழுத்துக்களடங்கிய பாதத்தின் முடிவையுடைய யஜுராதி என்ன, ஸ்வரம்=கானத்தை ப்ரதானமாக்கொண்ட ஸாமம் என்ன, ஸத்யம்=கண்ணுற் காணப்பட்டபடிக்கான பொருளைப்பற்றி உலகிற்சொல்லப்படும் சப்தத்திலுள்ள அக்ஷரங்களென்ன, அந்ருதம்=அதற்கு நேர்மாறான பொருளைப்பற்றிச் சொல்லும் சப்தத்திலுள்ள அக்ஷரங்களென்ன, இவையாவும் எந்த ஸ்போடசக்தியினுடைய காரியமோ பதத்வத்தினால் பரிச்சின்னமானதும், கரணம்=வாகிந்திரியமென்ன, குணம்=உபஸர்ஜனமென்ன இவையுள்ளதுமான அந்த வாக்கினால் अनभ्युदितम् (அநப்யுதிதம்) சொல்லப்படாததும், येन (யேந) எந்த ப்ரம்ஹத்தினால் கரணத்துடன் கூடின வாக்கானது சொல்ல விரும்பப்பட்ட பொருளில் अभ्युद्यते (அப்யுத்யதே) சைதன்ய ஜ்யோதிஸ்ஸினால் ப்ரகாசப்படுத்தப் படுகிறதோ அதாவது: ப்ரயோகிக்கப்படுகிறதோ என்றும், "எது வாக்குக்கும் வாக்கோ" என்று முன்னர் சொல்லப்பட்டிருக்கிறது. 'பேசுகின்றவனாகவிருந்துகொண்டு வாக் எனப்படுகிறான்" என்றும், "எவர் வாக்கை உள்நின்று நியமனம் செய்கின்றாரோ" என்றதாதி

इत्यादिच वाजसनेयके। "या वाक्पुरुषेषु सा घोषेषु प्रतिष्ठिता। कश्चित्तां वेद ब्राह्मण:" इति प्रश्नमुत्पाद्य प्रतिवचनमुक्तम् "सा वाग्यया स्वप्ने भाषते" इति। सा हि वक्तुर्वक्ति: नित्या वाक् चैतन्यज्योतिस्स्वरूपा। "नहि वक्तुर्वक्तेर्विपरिलोपो विद्यते" इतिश्रुते:। तदेवात्मस्वरूपं, ब्रह्म= निरतिशयं भूमाख्यं बृहत्त्वाद्ब्रह्मेति विद्धि=विजानीहि त्वम्, यै: वागाद्युपाधिभि: "वाचो ह वाक्, चक्षुषश्चक्षु:, श्रोत्रस्य श्रोत्रं मनसो मन:" "कर्ता भोक्ता विज्ञाता नियन्ता प्रशासिता' "विज्ञानमानन्दं ब्रह्म" इत्येवमादयस्संव्यवहारा असंव्यवहार्ये निर्विशेषे परे साम्ये ब्रह्मणि प्रवर्तन्ते, तान्व्युदस्यात्मानमेव निर्विशेषं ब்रह्म विद्धि इति एवशब्दार्थ:।

யும், வாஜஸநேயகோபநிடதத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. "புருஷர் (சேதனர்) களிடத்தில் யாதொரு வாக்சக்தியுண்டோ அது கோஷங்களில்=எழுத்துக்களில் நிலையையடைந்திருக்கிறதென அதை அறியும் ப்ராம்ஹணன் யார்" என்ற கேள்வியை உண்டாக்கி அதற்குப் பதில் சொல்லுமிடத்து "எதனால் ஸ்வப்பனத்தில் பேசுகிறானோ அதுதான் வாக்காகும்" எனச் சொல்லப்பட்டிருக்கிறது. சைதன்னியஜ்யோதிஸ்ஸ்வரூபமான அந்த நித்யமான வாக்கன்றோ வக்தாவினது வக்தியாக (வசனரூபமான அந்தக்கரணவிருத்திக்கு ப்ரகாசகமாக) வாகும் "வக்தாவினது வக்திக்கு (வசனரூப அந்தக்கரணவிருத்தி ப்ரகாசக சைதன்னியத்துக்கு) நாசமானது கிடையாது" என ஶ்ருதியுமிருக்கிறது. அதையே=ஆத்மஸ்வரூபத்தையே,ப்ரம்ஹமாக=ஒப்புயர்வற்றதும் எங்கும் நீக்கமறநிறைந்துள்ளதுமாக இருப்பதுபற்றி பூமா எனப்பெயரிய ப்ரம்ஹமாக நீ அறிந்துகொள்ளுவாயாக. வாகாதிகளான எந்த வுபாதிகளால் வாக்குக்கு வாக்கென்றும், கண்ணுக்குக் கண்ணென்றும், காதுக்குக் காதென்றும், மனஸ்ஸுக்கு மனஸ்ஸென்றும், கர்த்தா, போக்தா, விக்ஞாதா, நியந்தா, ப்ரஶாஸிதா, விக்ஞானம் ஆனந்தம் ப்ரம்ஹ என்றதாதிகளுமான வியவஹாரங்கள் எவ்வித வியவஹாரத்தையும் கடந்ததும், நிர்விசேஷமும், எல்லாவற்றிலும் ஸமமாகவுள்ளதுமான பரப்ரம்ஹத்தினிடத்தில் ஏற்படுகின்றனவோ அந்த வியவஹாரங்களைப் போக்கி ப்ரத்யகாத்மாவையே நிர்விசேஷமான ப்ரம்ஹமாக அறிந்து

नेदं ब्रह्म यदिदमिति उपाधिभेदविशिष्टमनात्मेश्वरादि, उपासते=ध्यायन्ति। तदेव ब्रह्म त्वं विद्धि इत्युक्तेऽपि नेदं ब्रह्मेत्यनात्मन अब्रह्मत्वं पुनरुच्यते नियमार्थम्। अन्यब्रह्मबुद्धिपरिसङ्ख्यानार्थं वा ॥ ५ ॥

கொள்ளுவாயாக என்பது (ஶ்ருதியில் तदेव (தஶேவ) என்றவிடத்திலுள்ள) ஏவ என்ற சப்தத்தின் பொருளாகும். எதை இதமென்பதாக=உபாதிமூலமேற்பட்ட பேதத்துடன் கூடினதும், ஆனது பற்றி ப்ரத்யகாத்மாவாக இல்லாததமான ஈஸ்வராதியாக, உபாஸிக்கின்றனரோ=தியானிக்கின்றனரோ, இது ப்ரம்ஹமாகவாகாது. "அதையே ப்ரம்ஹமாக நீ அறிந்துகொள்ளு" எனவுபதேசிக்கப்பட்டிருப்பினுங்கூட "இது ப்ரம்ஹமன்று" என்றதால் ப்ரத்யகாத்மாவாகவில்லாததற்கு ப்ரம்ஹத்தன்மையானது கிடையாதென (1)நியமத்துக்கு வேண்டியோ, வேறிடத்தில் ப்ராப்தமான ப்ரம்ஹ புத்தியை விலக்கவேண்டியோ திருப்பவும் உபதேசிக்கப்படுகிறது. (5)

---

(1) பாஷ்யத்தில் "நியமார்த்தம் என்றதால் நியம விதியும் "அந்ய ப்ரம்ஹ புத்தி பரிஸங்க்யாநார்த்தம் வா" என்றதால் பரிஸங்க்யா விதியும் சொல்லப்பட்டிருக்கிறது. அதாவது:—அபூர்வவிதி என்றும், நியம விதி என்றும், பரிஸங்க்யா விதி என்றம் விதிகள் மூன்று விதங்களாகும். அவற்றள் வேறு ப்ரமாணத்தால் முற்றிலும் ப்ராப்த்தமாகவாகாத பொருளை விதிப்பது அபூர்வவிதி எனப்படும். அதாவது: "வ்ரீஹீன் ப்ரோக்ஷதி" (நெல்லை ப்ரோக்ஷணம் செய்தல் வேண்டும்.) என்றவிடத்தில் விதிக்கப்படும் வ்ரீஹி ப்ரோக்ஷணமானது ப்ரோக்ஷணத்தை விதிக்கும் இந்தச் சாஸ்திரத்தைத் தவிர்த்து வேறு எந்த ப்ரமாணத்திலும் ப்ராப்த்தமாகவாகாததால் இது அபூர்வவிதியாகும். இவ்விதமே "அக்னிஹோத்ரம் ஜுஹுயாத்" (அக்னிஹோத்ர ஹோமத்தைச் செய்தல்வேண்டும்) என்பதும் அபூர்வ விதியாகும். இவ்விடத்தில் அக்னிஹோத்ர ஹோமமானது அதை விதிக்கும் இந்த வசனத்தைத் தவிர்த்து வேறு எந்த ப்ரமாணத்தாலும் ப்ராப்த்தமாகவாகாததால் இதுவும் அபூர்வவிதியே யாகும். ஒரு பக்ஷத்தில் ப்ராப்த்தமானவற்றுக்கு அப்ராப்தமான வேறு பக்ஷத்தையும் சேர்ப்பிக்கும் விதி நியமவிதி எனப்படும். அதாவது: "ஸமே யஜேத" என்பதாம். "தர்சபூர்ணமாஸாப்யாம் யஜேத" (தர்சபூர்ணமாஸங்கள் என்ற யாகங்களால் இஷ்டத்தைப் பாவிக்கவேண்டும்) என்பதாய் யாகமானது செய்யவேண்டுவதாக விதிக்கப்பட்டது. அந்த யாகமானது யாதானு

மொரு தேசமின்றிச் செய்யவியலாதானதுபற்றி அவ்விதியினின்றும் தேசமும் ப்ராப்த்தமாகிறது. அந்தத் தேசமானது ஸமமானதாகவும் (மேடுபள்ளமற்றதாகவும்) விஷமமாகவும் (மேடுபள்ளமுள்ளதாகவும்) ஆகலாம். யாகஞ் செய்பவன் எதுபோழ்து ஸமமான தேசத்தில் யாகஞ்செய்யவிரும்புவானோ அதுபோழ்து "ஸமே யஜேத" (ஸமமானவிடத்தில் யாகஞ் செய்தல் வேண்டும்) என்ற வசனமானது உதாஸீனமாக (தான் தனது பொருளை விதிக்காததாக) இருக்கும். எதுபோழ்து விஷமமான தேசத்தில் யாகஞ்செய்ய விரும்புவானோ அதுபோழ்து "ஸமமானவிடத்தில் யாகஞ் செய்தல் வேண்டும்" என்பதாய் தனது பொருளை விதிக்கும். விஷமதேசத்தில் யாகஞ்செய்யுங்கால் தனது பொருள் அப்ராப்த்தமாகவாகிவிடுவதால் இவ்விதி அப்பொழுது அவச்யமாகவாகிவிடுகிறது. விஷமதேசத்தின் நிவிருத்தியோ சொல்லாமலே ஏற்பட்டுவிடுகிறது. அதாவது:—சாஸ்திரத்தினால் விதிக்கப்பட்ட தேசத்தினாலேயேதான் யாகநிஷ்பத்தியேற்படுமேயொழிய சாஸ்திரம் விதிக்காத தேசத்தில் செய்தலால் சாஸ்திரஞ் சொன்னபடி யாகமானது அனுஷ்டிக்கப்பட்டதாகவாகாது என்றும். "கிழக்குமுகமாக இருந்துகொண்டு அன்னங்களைப் புஜிக்க வேண்டும்" என்பதும் இந்த நியமவிதியில் உதாஹரணமாகவாகலாம். அனேகவிடங்களில் ப்ராப்தமான ஒன்றுக்கு வேறு இடத்தினின்றும் நிவிருத்தி ஏற்படவேண்டி ஓரிடத்தில் திரும்பவும் விதித்தல் பரிஸங்க்யா விதியாகும். அதாவது:—"இமாமக்ருப்ணந் ரசநாம்ருதஸ்ய" ருதஸ்ய (உண்மையான பலனையுடைய யாகத்தினது இமாம் ரசநாம்—இந்தக்கயிற்றை அக்ருப்ணந்—தேவர்கள் எடுத்தனர்) எனச் சயனயாகப்ரகரணத்தில் படிக்கப்படும் இந்தமந்திரமானது பொதுவாய் கழுதையைக் கட்டுவதாகவோ, குதிரையைக் கட்டுவதாகவோவுள்ள கயிற்றை எடுப்பதைப்போதிக்கக் கூடியதாகவாகிறது. இதனின்றும் கழுதையைக் கட்டும் கயிற்றை எடுத்தலிலும் குதிரையைக் கட்டும் கயிற்றை எடுத்தலிலும் இம்மந்திரம் ப்ராப்த்தமாகும். அவ்விதம் ப்ராப்த்தமாகவே இமாமக்ருப்ணந் ரசநாம்ருதஸ்யேத்யச்வாபிதாநீமாதத்தே "இமாமக்ருப்ணந்ரசநாம்ருதஸ்ய" என்ற மந்திரத்தைச்சொல்லிக்கொண்டு அச்வத்தைக் கட்டும் கயிற்றையெடுக்கவேண்டுமென்ன விதிக்கப்படுகிறது. இவ்விடத்தில் அச்வத்தைக் கட்டும் கயிறு எனச்சொன்னதானது கர்த்தபத்தை (கழுதையைக்) கட்டும் கயிற்றினின்றும் நிவிருத்தி செய்வதால் இதுபரிஸங்க்யாவிதியாக—(நித்ய ப்ராப்த்தங்களான இரண்டனுள் ஒன்றைவிலக்குவதாக)வாகிறது என்றும். அதுபோல இவ்விடத்தில் உபாஸ்திக்கு அனுத்தமமானது சுருதியினால் ப்ராப்த

यन्मनसा न मनुते येनाहुर्मनो मतम् ।
तदेव ब्रह्म त्वं विद्धि नेदं यदिदमुपासते ॥ ६ ॥

யந்மநஸா ந மநுதே யேநாஹுர்மநோ மதம் ।
ததேவ ப்ரஹ்ம த்வம் வித்தி நேதம் யதிதமுபாஸதே ॥ ௬ ॥

यन्मनसा न मनुते । मन इत्यन्तःकरणं बुद्धिमनसोरेकत्वेन गृह्यते । मनुते अनेनेति मनः सर्वकरणसाधारणं सर्वविषयव्यापकत्वात् । "काम-

---

(ப—ரை) यत् (யத்)=எதை मनसा (மநஸா) = மனத்தினல் न मनुते (ந மநுதே)=எண்ணுவதில்லையோ, येन (யேந)=எதனல் मनः (மந:)=மனதானது मतम् (மதம்)=விஷயமாக்க (ப்ரகாசப் படுத்தப்) பட்டதென आहुः (ஆஹு:)=சொல்லுகின்றனரோ तदेव (ததேவ)=அதையே ब्रह्म (ப்ரஹ்ம)=ப்ரம்ஹமாக त्वम् (த்வம்)=நீ विद्धि (வித்தி)=அறிந்துகொள்வாயாக यत् (யத்)=எதை इदम् (இதம்)=இது என்பதாய் உபாதி பேதத்துடன் கூடினதாக उपासते (உபாஸதே)= உபாஸிக்கின்றனரோ इदम् (இதம்)=இது न (ந)=ப்ரம்ஹமன்று.

பாஷ்யம்.—यन्मनसा न मनुते (யந்மநஸா ந மநுதே) புத்தி மனஸ் இரண்டையும் ஒன்ருக்கி மனஸ் என்றதால் அந்தக்கரணம் கிரஹிக்கப்படுகிறது. இதனல் மனனம் செய்கிருன் என்ற வ்யுத் பத்தியால் மனஸ் என்பது எல்லாக் கரணங்களுக்கும் பொதுவாகவு மாகிறது. எல்லா விஷயங்களிலும் வியாபகமாக இருப்பதும்

தமாகவாகிறது லோகத்தினுல் அப்ராப்த்தமாகவாகிறது. இங்கு ச்ருதியா னது லோகத்தினுல் அப்ராப்தமான அனுத்மத்வத்தை "நேதம்" என்ற தால் பூர்த்தி செய்வதால் இது நியமவிதியாகவாகலாம். அல்லது ப்ரத்ய க்ஷாதிப்ரமாணங்களால் ப்ரத்யகாத்மாவுக்கு அப்ரம்ஹத்வமானது ப்ராப்த்த மாகவாகிறது. ப்ரத்யகாத்மாவாக இல்லாத ஈச்வராதிகளுக்கு ப்ரம்ஹத் வமானது ப்ராப்த்தமாகவு மாகிறது "ப்ரத்யகாத்மாவாக இல்லாதது எதுவோ அதர்க்கு ப்ரம்ஹத்வம் கிடையாது" என்று கூறினதும் ப்ரத்ய காத்மாவாகவுள்ளதுக்கு அப்ரம்ஹத்வநிஷேதம் ப்ராப்தமாகிறது. அதா வது: ப்ரத்யகாத்மாவாகவுள்ளது ப்ரம்ஹம் என்பதுதானே கிடைத்து விடுகிறது. ஆகவே இதைப் பரிஸங்க்யா விதியாகவும் கொள்ளலாம் என் றேற்பட்டது. (எ—று)

स्सङ्कल्पो विचिकित्सा श्रद्धाऽश्रद्धा धृतिरधृतिर्ह्रीर्धीर्भीरित्येतत्सर्वं मन एव" इतिश्रुतेः कामादिवृत्तिमन्मनः । तेन मनसा यत्=चैतन्यज्योतिः मनसोऽवभासकं न मनुते न सङ्कल्पयति, नापि निश्चिनोति मनसोऽवभासकत्वेन नियन्तृत्वात् । सर्वविषयं प्रति प्रत्यगेवेति स्वात्मनि न प्रवर्ततेऽन्तःकरणम् । अन्तःस्थेन हि चैतन्यज्योतिषा अवभासितस्य मनसः मननसामर्थ्यम्, तेन सवृत्तिकं मनः येन=ब्रह्मणा, मतम्=विषयीकृतम् व्याप्तमाहुः=कथयन्ति ब्रह्मविदः । तस्मात्तदेव मनसः आत्मानं प्रत्यक्चेतयितारं ब्रह्म विद्धि । नेदमित्यादिपूर्ववत् ॥ ६ ॥

यच्चक्षुषा न पश्यति येन चक्षूंषि पश्यति ।
तदेव ब्रह्म त्वं विद्धि नेदं यदिदमुपासते ॥ ७ ॥

யச்சக்ஷுஷா ந பஶ்யதி யேந சக்ஷூம்ஷி பஶ்யதி ।
ததேவ ப்ரஹ்ம த்வம் வித்தி நேதம் யதிதமுபாஸதே ॥ எ ॥

அதன் காரணமாகும். "காமம், ஸங்கல்பம், ஸம்சயம், ஶ்ரத்தை, அஶ்ரத்தை, தைரியம், அதைரியம், வெட்கம், புத்தி, பயம் என்ற இவையாவும் மனதே' என ஶ்ருதியுமிருக்கிறது. காமம் முதலிய விருத்திகளுள்ளது மனது. அந்த மனத்தினுல் மனத்துக்கு அவபாஸகமான(ப்ரகாசகமான)யாதொரு சைதன்னியஜ்யோதிஸ்ஸுண்டோ (அதை) மனனம் செய்வதில்லை=ஸங்கல்பிப்பதுமில்லை நிஶ்சயிப்பதுமில்லை. மனஸ்ஸுக்கு ப்ரகாசகமாக வாவதிலிருந்து நியந்தாவாக (ப்ரஹ்மம்) இருப்பதே அதன் காரணமாகும். எல்லாவிஷயத்தையும் குறித்து ப்ரத்யக்காகவே இருப்பதிலிருந்து அந்தக்கரணமானது தனது ஆத்மாவினிடத்தில் ப்ரவிருத்திப்பதில்லை. தன்னுள்ளிலிருக்கின்ற சைதன்னியஜ்யோதிஸ்ஸினுல் ப்ரகாசப்படுத்தப்பட்ட மனஸ்ஸுக்கன்றே மனனஞ்செய்யும் ஸாமர்த்தியம் ஏற்படுகிறது. அதனுற்றான் ப்ரஹ்மவித்துக்கள் விருத்திகளுடன் கூடின மனது ப்ரஹ்மத்தினுல் மதம்=விஷயீகரிக்கப்பட்டது அதாவது: வியாபிக்கப்பட்டது என சொல்லுகின்றனர். ஆகவே அதையே=ப்ரத்யக்சேதனரூபியான மனத்தினது ஆத்மாவையே, ப்ரஹ்மமாக அறிந்து கொள்ளுவாயாக. "நேதம் யதிதமுபாஸதே" என்றதாதிகளுக்கு முன்போலவே பொருள் கொள்ளவும். (6) (எ-று)

यच्चक्षुषा न पश्यति=न विषयीकरोति अन्तःकरणवृत्तिसंयुक्तेन लोकः, येन चक्षूंषि=अन्तःकरणवृत्तिभेदभिन्नाः चक्षुर्वृत्तीः पश्यति चैतन्यात्मज्योतिषा विषयीकरोति व्याप्नोति ॥ ७ ॥

यच्छ्रोत्रेण न शृणोति येन श्रोत्रमिदꣳ श्रुतम् ।
तदेव ब्रह्म त्वं विद्धि नेदं यदिदमुपासते ॥ ८ ॥

யச்ச்ரோத்ரேண ந ஶ்ருணோதி யேந ஶ்ரோத்ரமிதம் ஶ்ருதம் ।
ததேவ ப்ரஹ்ம த்வம் வித்தி நேதம் யதிதமுபாஸதே ॥ அ ॥

(ப—ரை) यत् (யத்)=எதை चक्षुषा (சக்ஷுஷா)=கண்ணினல் न पश्यति (ந பஶ்யதி)=லோகமானது பார்ப்ப (விஷயீகரிப்ப) தில்லையோ. येन (யேந)=அந்தக்கரணவிருத்தி ஸம்யுக்தமான எதனுல், அதாவது: ப்ரம்ஹத்தினல் चक्षूंषि (சக்ஷூம்ஷி)=அந்தக்கரண விருத்திகளின் பேதத்தையொட்டி பேதப்பட்ட சக்ஷுர்விருத்தி களை पश्यति (பஶ்யதி)=லோகமானது விஷயீகரிக்கின்றதோ तदेव (ததேவ)=அதையே ब्रह्म (ப்ரஹ்ம)=ப்ரம்ஹமாக, त्वम् (த்வம்)=विद्धि (வித்தி)=அறிவாயாக. यदिदमुपासते (யதிதமுபாஸதே)=(எதை இதம் என்பதாய் உபாதிபேதத்துடன் கூடினதாக உபாஸிக்கின்றனரோ इदं न (இதம் ந)=இது ப்ரம்ஹமன்று. (7) (எ—று)

பாஷ்யம்.—यच्चक्षुषा न पश्यति (யச்சக்ஷுஷா ந பஶ்யதி) எதைக் கண்ணினல் விஷயீகரிப்பதில்லையோ=(எது சாக்ஷுஷமான அந்தக்கரணவிருத்திக்கு விஷயமாகவாவதில்லையோ என்றுகருத்து) அந்தக்கரணத்தின் விருத்திகளுடன் கூடின எதனுல் சக்ஷுஸ்ஸு களை=அந்தக்கரணத்தின் விருத்திபேதத்தை யொட்டி பேதப்பட்ட வைகளான சாக்ஷுஷவிருத்திகளை, லோகமானது பார்க்கிறதோ சைதன்யாத்மஜ்யோதிஸ்ஸினுல் விஷயீகரிக்கிறதோ அதாவது: எங்கும் நிறைந்து நிற்கிறதோ என்றும். (7) (எ—று)

(ப—ரை) यत् (யத்)=எதை லோகமானது श्रोत्रेण (ஶ்ரோத்ரேண)=ஶ்ரோத்ரேந்திரியத்தினுல் न शृणोति (ந ஶ்ருணோதி)=விஷயீகரிப்பதில்லையோ येन (யேந)=எந்த சைதன்யாத்மஜ்யோதிஸ்ஸினுல் इदम् (இதம்)=இந்த श्रोत्रम् (ஶ்ரோத்ரம்)=ஶ்ரோத்ரேந்திரியமானது

यच्छ्रोत्रेण न शृणोति दिग्देवताधिष्ठितेन आकाशकार्येण मनोवृत्तिसंयुक्तेन न विषयीकरोति लोकः । येन श्रोत्रमिदं श्रुतं=यत्प्रसिद्धं चैतन्यात्मज्योतिषा विषयीकृतं तदेवेत्यादि पूर्ववत् ॥ ८ ॥

यत्प्राणेन न प्राणिति येन प्राणः प्रणीयते ।
तदेव ब्रह्म त्वं विद्धि नेदं यदिदमुपासते ॥ ९ ॥

யத்ப்ராணேந ந ப்ராணிதி யேந ப்ராண꞉ ப்ரணீயதே ।
ததேவ ப்ரஹ்ம த்வம் வித்தி நேதம் யதிதமுபாஸதே ॥ ௯ ॥

श्रुतम् (ஶ்ருதம்)=விஷயமாக்க (ப்ரகாசிப்பிக்க)ப்பட்டதோ तदेव (ததேவ)=அதையே ब्रह्म (ப்ரஹ்ம)=ப்ரம்ஹமாக त्वम् (த்வம்)=நீ विद्धि (வித்தி)=அறிந்துகொள்ளுவாயாக. यत् (யத்)=எதை इदम् (இதம்)=இது என்பதாய் உபாதிபேதத்துடன் கூடினதாக उपासते (உபாஸதே)=உபாஸிக்கின்ற (தியானிக்கின்ற)னரோ इदम् (இதம்)=இது न (ந)=ப்ரம்ஹமன்று. (௮) (எ–று)

பாஷ்யம்.—यच्छ्रोत्रेण न शृणोति (யச்ச்ரோத்ரேண ந ஶ்ருணோதி) திக்கு தேவதை இவற்றால் அதிஷ்டிதமும், ஆகாசத்தின் காரியமும், மனோவிருத்தியுடன் கூடினதுமான (ஶ்ரோத்திரத்தினால்) லோகமானது எதை விஷயீகரிப்பதில்லையோ எதனால்=சைதன்னியாத்மஜ்யோதிஸ்ஸினால், இந்த ஶ்ரோத்ரமானது ஶ்ருதமோ=விஷயமாக்கப்பட்டதோ तदेव (ததேவ) என்றதாதிக்கு முன்போலவே பொருள் கொள்க. (௮) (எ–று)

ப–ரை) यत् (யத்)=எதை, प्राणेन (ப்ராணேந)=க்ராணேந்திரியத்தினால் न प्राणिति (ந ப்ராணிதி)=லோகமானது விஷயீகரிப்பதில்லையோ. येन (யேந)=எந்த சைதன்யாத்மஜ்யோதிஸ்ஸினால் प्राणः (ப்ராண꞉)=க்ராணேந்திரியமானது प्रणीयते (ப்ரணீயதே)=தனது விஷயத்தைக்குறித்து செல்லும்படிசெய்யப்படுகிறதோ, तदेव (ததேவ)=அதையே ब्रह्म (ப்ரஹ்ம)=(ப்ரம்ஹமாக) त्वम् (த்வம்)=நீ विद्धि (வித்தி)=அறிந்து கொள்ளுவாயாக. यत् (யத்)=எதை इदम् (இதம்)=இது என உபாதிபேதவிசிஷ்டமாக उपासते (உபாஸதே)=த்யானிக்கின்றனரோ इदम् (இதம்)=இது न (ந)=ப்ரம்ஹமன்று. (௯) (எ–று)

यत्प्राणेन=घ्राणेन पार्थिवेन नासिकापुटान्तरवस्थितेन अन्तःकरण-प्राणवृत्तिभ्यां सहितेन यन्न प्राणिति=गन्धवन्न विषयीकरोति, येन चैतन्यात्मज्योतिषा अवभास्यत्वेन स्वविषयं प्रति प्राणः प्रणीयते। तदेवेत्यादि सर्वं समानम् ॥ ९ ॥

इति श्रीगोविन्दभगवत्पूज्यपादशिष्यस्य श्रीमत्परमहंसपरिव्राजकाचार्यस्य श्रीमच्छङ्करभगवतः कृतौ केनोपनिषत्पदभाष्ये प्रथमः खण्डः समाप्तः ॥

பாஷ்யம்.—எதை ப்ராணனால்=பார்த்திவமும், நாஸிகையின் ஓட்டையினுள்ளிலிருப்பதும் அந்தக்கரணம் ப்ராணன் இவற்றின் விருத்திகளுடன் கூடினதுமான க்ராணேந்திரியத்தினால் न प्राणिति (ந ப்ராணிதி) மணத்தைப்போன்று விஷயீகரிப்பதில்லையோ, எந்த சைதன்யாத்மஜ்யோதிஸ்ஸினால் ப்ரகாஶ்யமாக இருப்பதன்மூலம் க்ராணேந்திரியமானது தனது விஷயத்தை (மணத்தை) க்குறித்து போகும்படி செய்யப்படுகிறதோ तदेव (ததேவ) என்றதாதிகளுக்கு முன்போலவே பொருள் கொள்க. (9) (எ—று)

இவ்விதம் கோவிந்தபகவத்பூஜ்யபாதசிஷ்யரும், பரமஹம்ஸ பரிவ்ராஜகாசாரியருமான ஸ்ரீமத்சங்கரபகவத்பாதர் அவர்களின் கிருதியான கேநோபநிடதத்தின் பதபாஷ்யத்தில் முதலாவது கண்டம் முற்றிற்று.

இரண்டாவது கண்டம்.

यस्माद्विश्वमुदेति यत्र निवसत्यन्ते यदप्येति य-
त्सत्यज्ञानसुखस्वरूपमवधिद्वैतप्रणाशोज्झितम्।
यज्जाग्रत्स्वपनप्रसुप्तिषु विभात्येकं विशोकं परं
प्रत्यग्ब्रह्म तदस्मि यस्य कृपया तं देशिकेन्द्रं भजे ॥

அவதாரிகா பாஷ்யம்.—இவ்விதம் ஹேயமும் உபாதேயமுமானவற்றுக்கு மாறுபட்ட [ஆத்மாவே ப்ரம்ஹம் என வுபதேசிக்கப்

अथ द्वितीयः खण्डः ॥

एवं हेयोपादेयविपरीतस्त्वात्मा ब्रह्मेति प्रत्यायितः शिष्योऽहमेव ब्रह्मेति सुष्ठु वेदाहमिति मागृह्णीयादित्याशङ्क्याहाचार्यः शिष्यबुद्धिविचालनार्थम् यदीत्यादि। ननु दृष्टैव सुवेदाहमिति निश्चिता प्रतिपत्तिः, सत्यमिष्टा निश्चिता प्रतिपत्तिः नहि सुवेदाहमिति। यद्धि वेद्यं वस्तु विषयी भवति तत्सुष्ठुवेदितुं शक्यम्। दाह्यमिव दग्धुमग्नेर्दग्धुर्नत्वग्नेः स्वरूपमेव। सर्वस्य हि वेदितुः स्वात्मा ब्रह्मेति सर्ववेदान्तानां सुनिश्चितोऽर्थः। इहच तदेव प्रतिपादितं प्रश्नप्रतिवचनोक्त्या "श्रोत्रस्य श्रोत्रम्" इत्याद्यया। "यद्वाचानभ्युदितम्" इति च विशेषतोऽवधारितम्। ब्रह्मवित्संप्रदायनिश्चयश्चोक्तः॥

பட்ட சிஷ்யனானவன் நானே ப்ரம்ஹமென்றும், நான் என்னை நன்கு அறிவேன் என்றும் எண்ணிவிடுவான் எனவாசங்கித்து ஆசிரியர் சிஷ்யனுடைய புத்தியைப் பரிசோதித்துப்பார்க்கவேண்டி यदिमन्यसे (யதிமந்யஸே) என்றதாதியாலுபதேசிக்கத் தொடங்குகிறார்—

சங்கை—நன்கு அறிவேன் என்பதான நிஸ்சிதமான அறிவானது இஷ்டமானதுதானே எனின்?

உத்தரம்—நிஸ்சிதமான அறிவுவேண்டுமென்பது உண்மைதான். ஆயினும் (ப்ரம்ஹத்தை) நான் நன்கு அறிவேன் என்ற எண்ணம் வேண்டற்பாலதன்று. பொசுக்கும் திறமையுடைய நெருப்புக்கு பொசுக்கக்கூடிய பொருள் பொசுக்கமுடிவதாக வாகலாமேயொழிய அக்னியின் ஸ்வரூபமே அக்கினிக்கு பொசுக்கக்கூடியதாக வாவதில்லை என்பதுபோல, வேத்யமான எந்தவஸ்து விஷயமாகவாகக்கூடுமோ அது நன்கு அறியக்கூடியதாகவாகலாம். அறிபவனான எல்லாருக்கும் சொந்த ப்ரத்யகாத்மாவே ப்ரம்ஹம் என்பது எல்லா வேதாந்தங்களுடையவும் நன்கு நிஸ்சயிக்கப்பட்ட பொருள். இவ்விடத்திலும் "ஶ்ரோத்ரஸ்ய ஶ்ரோத்ரம்" என்றதாதியான ப்ரஸ்னப்ரதிவசன வார்த்தையினால் அதுவே சொல்லவும்பட்டது. "எது வாக்கினால் சொல்லப்படாததோ" என விசேஷித்து உறுதிப்படுத்தவும்பட்டது. ப்ரம்ஹவித்துக்களின் ஸம்ப்ர

"अन्यदेव तद्विदितादथो अविदितादधि" इत्युपन्यस्तम्, उपसंहरिष्यति च "अविज्ञातं विजानतां विज्ञातमविजानताम्" इति। तस्माद्युक्तमेव शिष्यस्य सुवेदेति बुद्धिं निराकर्तुम्। नहि वेदिता वेदितुर्वेदितुं शक्योऽग्निरिव दग्धुमग्नेः, नचान्यो वेदिता ब्रह्मणोऽस्ति यस्य वेद्यमन्यत्स्याद्ब्रह्म। "नान्यदतोऽस्ति विज्ञातृ" इत्यन्यो विज्ञाता प्रतिषिध्यते। तस्मात्सुष्ठु वेदाहं ब्रह्मेति प्रतिपत्तिर्मिथ्यैव। तस्माद्युक्तमेवाहाचार्यो यदीत्यादि ॥

यदि मन्यसे सुवेदेति *दभ्रमेवापि नूनं त्वं वेत्थ ब्रह्मणो रूपं यदस्य। त्वं यदस्य देवेष्वथ नु मीमांस्यमेव ते मन्ये विदितम् ॥ १ ॥

யதி மந்யஸே ஸுவேதேதி தப்ரமேவாபி நூநம் த்வம் வேத்த ப்ரஹ்மணோ ரூபம் யதஸ்ய। த்வம் யதஸ்ய தேவேஷ்வத நு மீமாம்ஸ்யமேவ தே மந்யே விதிதம்॥ க ॥

தாய மூலம் ஏற்படும் நிஸ்சயமும் சொல்லப்பட்டது. "அன்ய தேவ தத்விதிதாத் அதோ அவிதாத் அதி" எனவுபன்னிடவிக்கவும் பட்டது. "(1)அவிச்ஞாதம் விஜாநதாம் விச்ஞாதம் அவிஜாநதாம்" என முடிவில் கூறவும் போகிறது. ஆகவே 'நன்கு அறிவேன்' என்ற சிஷ்யனது எண்ணத்தை மறுத்தது பொருந்தக்கூடியதாகவே யாகிறது. அக்னியானது அக்னியினுல் பொசுக்கக்கூடியதாக எவ்விதமாகாதோ அவ்விதமே அறிபவனுல் அறிபவனுன தானே அறியக்கூடியவனுக வாகமாட்டான். எதற்கு வேத்யமாகவும் வேருவும் ப்ரப்ஹமாருமோ ப்ரப்ஹத்தைக் காட்டிலும் அன்னியனுன வேதிதாவும்=அறிபவனும் இல்லை. "அறியும் பொருள் யாதுண்டோ அது இந்த ப்ரம்ஹத்தைக் காட்டிலும் வேறுபட்டதன்று" என வேறு விக்ஞாதா=அறிபவன், மறுக்கவும்படுகிருன். ஆகவே நான் ப்ரம்ஹத்தை நன்கு அறிவேன் என்ற எண்ணம் பொய்யேயாகும். ஆனதுபற்றி ஆசிரியர் यदि मन्यसे (யதிமந்யஸே) என்றுதொடங்கிக் கூறினது பொருத்தமுள்ளதே யாகும்.

---

*दहरमेवापि (தஹரமேவாபி) என்றும வேறுபாடமுண்டு. அதன்படியும் பொருள் ஒன்றேயாகும். (1) இதன் பொருளை இரண்டாவது கண்டம் 3-வது மந்திரத்தில் காண்க.

यदि कदाचिन्मन्यसे सुवेदेति,सुष्ठु वेदाहं ब्रह्मेति । कदाचिद्यथाश्रुतं दुर्विज्ञेयमपि क्षीणदोषः सुमेधाः कश्चित्प्रतिपद्यते कश्चिन्नेति साशङ्कमाह— यदीत्यादि । दृष्टं च—"य एषोऽक्षिणि पुरुषो दृश्यत एष आत्मेति होवाचै- तदमृतमभयमेतद्ब्रह्म" इत्युक्ते प्राजापत्यः पण्डितोऽप्यसुरराड्विरोचनःस्व-

---

(ப—ரை) सुवेद (ஸுவேத)=நன்கு அறிவேன் इति (இதி)= என்று यदिमन्यसे (யதிமந்யஸே)=ஒருஸமயம் எண்ணுவாயேயா ஞல் अस्य ब्रह्मणः (அஸ்ய ப்ரஹ்மண)=இந்தப்ரம்ஹத்தினுடைய தான யत् रूपम् (யத் ரூபம்)=யாதொரு ஸ்வரூபமுண்டோ அதை त्वम् (த்வம்)=நீ दभ्रमेवापि वेत्थ (தப்ரமேவாபி வேத்த)=அற்பமாகவே அறிந்தவனுகின்ருய். अस्य (அஸ்ய)=இந்த ப்ரம்ஹத்துக்கு देवेषु (தேவேஷு)=அதிதைவதத்திலிருப்பதாக यत् (யத்)=எந்த ரூபத்தை எண்ணுகின்ருயோ அதையும் त्वम् (த்வம்)=நீ அற்பமாகவே அறிந் தவனுகின்ருய். अथनु (அதநு)=ஆகவே ते (தே)=உன்னுல் ப்ரம் ஹமானது मीमांस्यमेव (மீமாம்ஸ்யமேவ)=விசாரித்தறியக்கூடியதாக வே ஆகிறது. இவ்விதம் ஆசிரியரால் சொல்லப்பட்ட சிஷ்யன் தனித்த இடத்திலிருந்து மனத்தையடக்கினவனுய்க்கொண்டு ஆசிரி யராலிவ்விதஞ் சொல்லப்பட்ட சாஸ்திரத்தின் பொருளை விசாரித் தறிந்து யுக்தியினுலுமுறுதிப்படுத்திக்கொண்டு சொந்த அனுபவத் துக்குக் கொண்டுவந்து ஆசிரியரின் அருகில் வந்து "நான் இப்பொ ழுது विदितम् (விதிதம்) ப்ரம்ஹ மறியப்பட்டதாகவாகலாம் என मन्ये (மந்யே) எண்ணுகிறேன்" என்ருன். (1) (எ—று)

பாஷ்யம்.—ஒருஸமயம் நான் ப்ரம்ஹத்தை நன்கு அறிவேன் என எண்ணுவாயேல், ஶ்ருதியில் கூறப்பட்டபடிக்கான ப்ரம்ஹமா னது அறிதற்கரிதானதாயினும் தேய்ந்த தோஷமுள்ளவனும் மிக்க மேதாவியுமான வொருவன் ஒரு ஸமயம் அறிந்தாலும் அறிவான். ஒருவன் அறியாமலுமிருக்கலாம் எனக்கருதி यदि (யதி) என்ப தாய் (இங்கு மூலத்தில்) சந்தேஹத்துடன் உபதேசிக்கப்பட்டது. இவ்விஷயம் வேறு ஶ்ருதி மூலம் காணவும்பட்டிருக்கிறது. அதா வது:—"கண்ணில் யாதொரு இந்தப் புருஷன் காணப்படுகிருனே இவன் ப்ராணிகளின் ஆத்மா எனச்சொன்னுர். (எதை ஆத்மதத்வ மென்றுரோ) இதுவே அமிருதமும் அப்பமுமாகும். (ஆனதுபற்

भावदोषवशादनुपपद्यमानमपि विपरीतमर्थं शरीरमात्मेति प्रतिपन्नः। तथेन्द्रो देवराट् सकृत् द्विस्त्रिरुक्तं चाप्रतिपद्यमानः स्वभावदोषक्षयमपेक्ष्य चतुर्थे पर्याये प्रथमोक्तमेव ब्रह्म प्रतिपन्नवान्। लोकेऽप्येकस्माद्गुरोः शृण्वतां कश्चिद्यथावत्प्रतिपद्यते, कश्चिदयथावत्, कश्चिद्विपरीतं, कश्चिन्न प्रतिपद्यते, किमुवक्तव्यमतीन्द्रियमात्मतत्वम्। अत्र हि विप्रतिपन्नाः सदसद्वादिनस्तार्किकास्सर्वे। तस्माद्विदितं ब्रह्मेति सुनिश्चितोक्तमपि विषमप्रतिपत्तित्वात् "यदिमन्यसे" इत्यादि साशङ्कं वचनं युक्तमेवाचार्यस्य। दभ्रम्= अल्पमेवापि नूनं त्वं वेत्थ=जानीषे ब्रह्मणो रूपम्। किमनेकानि ब्रह्मणोरूपा-

---

நீயே) இது ப்ரப்ஹமுமாகும்" என்று குருவான ப்ரஜாபதியினால் சொல்லப்பட்டதும், ப்ரஜாபதியின் புத்திரனும், பண்டிதனும், அசுர ராஜனுமான விரோசனன் இயற்கையிலமைந்துள்ள தோஷ வசத்தினால் சரீரமே ஆத்மா என்பதாய் பொருந்தக்கூடாததாகவிருப்பினுங் கூட விபரீதமான (நேர்மாறான) பொருளையே கிரஹித்துக் கொண்டான். அவ்விதமே தேவராஜனான இந்திரன் ஒருதடவை இரண்டு தடவை மூன்றுதடவை சொல்லப்பட்டதையும் கூடக் கிரஹித்துக் கொள்ளமுடியாதவனாய் இயற்கையிலேற்பட்ட தோஷத்தின் தேய்தலை அபேக்ஷித்து நான்காவது தடவையில் முதற்றடவையிற் சொல்லப்பட்டதாகவே உள்ள ப்ரப்ஹத்தை அறிந்துகொண்டான். உலகிலுங்கூட ஒரே குருவினிடமிருந்து கேட்பவருள் ஒருவன் உள்ளபடி அறிந்துகொள்ளுகிறான். ஒருவன் உள்ளபடி அறிந்து கொள்ளுவதில்லை. ஒருவன் நேர்மாறாக அறிந்துகொள்ளுகிறான். ஒருவன் அறிந்து கொள்ளுவதேயில்லை. இவ்விதமிருக்க இந்திரியங்களுக்குப் புலனாகாத ஆத்மதத்த்வத்தைப்பற்றிச் சொல்லவும்வேண்டுமோ? காரணமான ப்ரம்ஹம் உண்டென்றும் இல்லையென்றும் சொல்லுகின்றவர்களான தார்க்கிகர்கள் யாவரும் இவ்விஷயத்திலன்றோ முறண்பட்ட எண்ணங்கொள்ளுகின்றனர். ஆகவே அவிதிதம்= வேதனரூபமான விருத்திக்கு விஷயமாகாதது ப்ரம்ஹம் என நன்கு நிஸ்சிதமாகச் சொல்லப்படினுங்கூட மாறுதலான அறிவேற்படல் கூடுமானதால் "நன்கு அறிவேன் என ஒரு ஸமயம் எண்ணுவாயேல்" என்றதாதியான ஆசங்கையுடன் கூடின ஆசிரியரின் வசன

णि महान्त्यर्भकाणि च येनाह दभ्रमेवेत्यादि? बाढम्। अनेकानिहि नामरूपोपाधिकृतानि ब्रह्मणो रूपाणि न स्वतः। स्वतस्तु "अशब्दमस्पर्शमरूपमव्ययं तथाऽरसं नित्यमगन्धवच्च यत्" इति शब्दादिभिस्सह रूपाणि प्रतिषिध्यन्ते। ननु येनैव धर्मेण यन्निरूप्यते तदेव तस्य स्वरूपमिति ब्रह्मणोऽपि येन विशेषेण निरूपणं तदेव तस्य रूपं स्यात्। अत उच्यते–चैतन्यं पृथिव्यादीनामन्यतमस्य सर्वेषां विपरिणतानां वा धर्मो न भवति, तथा श्रोत्रादीनामन्तःकरणस्य च धर्मो न भवतीति ब्रह्मणो रूपमिति–ब्रह्म

மானது பொருத்தமானதேயாகும். நீ நிஸ்சிதமாகவே அற்பமாகவேயுள்ள ப்ரம்ஹத்தின் ரூபத்தை அறிந்தவனாகின்றனை.

சங்கை—எக்காரணத்தினால் அற்பமாகவேயுள்ள ப்ரம்ஹத்தினது ரூபத்தை யறிகின்றாய் என்றதாதியைச் சொல்லுகிறாரோ அக்காரணம் பற்றி ப்ரம்ஹத்துக்குப் பெரியனவும் சிறியனவுமான அநேக ரூபங்களுண்டோ? எனின்.

உத்தரம்—ஆம். ப்ரம்ஹத்துக்கு நாமரூபங்களாகிற உபாதிகளினாற் செய்யப்பட்ட ரூபங்கள் அனேகங்கள் உண்டே யொழிய இயற்கையிலில்லை. இயற்கையிலோவெனில் "யாதொரு ப்ரம்ஹமுண்டோ அது "அசப்தம்=சப்தமற்றது, ஸ்பர்சமற்றது ரூபமற்றது, அழிவற்றது, அவ்விதமே ரஸமற்றது, நித்யமானது, கந்தமுள்ளதுமன்று" என்பதாய் சப்தாதிகளுடன் கூட ரூபங்களும் நிஷேதிக்க (மறுக்க) ப்படுகின்றன.

சங்கை—எந்தத்தர்மத்தினாலேயே எது நிரூபிக்கப்படுகின்றதோ அதுவே அதனுடைய ஸ்வரூபமாகும் என்பதுபற்றி ப்ரம்ஹத்துக்குங்கூட எந்த விசேஷத்தினால் நிரூபணம் ஏற்படுகிறதோ அதுவே அதனுடைய=ப்ரம்ஹத்தினுடைய ரூபமாகலாம். ஆனதுபற்றியே தான் சைதன்யமானது பூமி முதலியவைகளுள் ஒன்றினுடையவோ எல்லாவற்றினுடையவோ, சரீரமாக மாறுதலையடைந்தவைகளுடையவோ தர்மமாகவாகமாட்டாது. அவ்விதமே ஸ்ரோத்ராதிகளுடையவும் அந்தக் கரணத்தினுடையவும் தர்மமாகவாகாது என்று சொல்லப்படுகிறது. "ப்ரம்ஹணோ ரூபம்" என்பதாய் ப்ரம்ஹமா

रूप्यते चैतन्येन। तथाचोक्तम्—“विज्ञानमानन्दं ब्रह्म” “विज्ञानघन एव” “सत्यं ज्ञानमनन्तं” “प्रज्ञानं ब्रह्म” इति च ब्रह्मणो रूपं निर्दिष्टं श्रुतिषु। सत्यमेवम्। तथापि तदन्तःकरणदेहेन्द्रियोपाधिद्वारेणैव विज्ञानादिशब्दै-र्निर्दिश्यते तदनुकारित्वाद्देहादिवृद्धिसंकोचच्छेदादिषु नाशेषु च, न स्वतः। स्वतस्तु “अविज्ञातं विजानतां, विज्ञातमविजानताम्” इति स्थितं भविष्यति। यदस्य ब्रह्मणोरूपमिति पूर्वेण संबन्धः। न केवलं अध्यात्मो-पाधिपरिच्छिन्नस्यास्य ब्रह्मणोरूपं त्वमल्पं वेत्थ, यदप्यधिदैवतोपाधिपरि-च्छिन्नस्यास्य ब्रह्मणो रूपं देवेषु वेत्थ त्वं तदपि नूनं दभ्रमेव वेत्थेति मन्ये-

---

னது சைதன்யத்தினால் நிரூபிக்கப்படுகிறது அவ்விதமே “விக்ஞானம் ஆனந்தம் ப்ரம்ஹ” என்றும், “விச்ஞானகனனே” என்றும், “ஸத்யம் க்ஞானம் அனந்தம்” என்றும், “ப்ரக்ஞானம் ப்ரம்ஹ” என்றுமானவைகளால் சுருதிகளில் ப்ரம்ஹத்துக்கு ரூபமானது சொல்லவும்பட்டிருக்கிறது. எனின்?

உத்தரம்—இஃது தன்மைதான் ஆயினும் அந்தப்ரம்ஹமானது அந்தக்கரணம் தேஹம் இந்திரியம் இவையாகிற உபாதியின் வாயிலாகவே விச்ஞானதிசப்தங்களால் குறிப்பிடப்படுகிறது. தேஹாதிகளின் விருத்தி, ஸங்கோசம், வெட்டுப்படல் முதலியவற்றிலும் நாசங்களிலும் சைதன்யத்துக்குப் பொய்யான தேஹதர்மங்களை யனுஸரித்துத் தோன்றுதல் காணப்படுவதே அதன் காரணமாகுமே யொழிய இயற்கையில் அவ்விதமுபதேசிக்கப்படுவதில்லை. இயற்கையிலோ வெனில் விஜாநதாம்=விக்ஞானமென்ற அந்தக்கரணவிருத்திக்கு விஷயமாக அறிகிறவர்களுக்கு, அறியப்படாதது, முற்கூறியவாறு அறியாதவர்களுக்கு அறியப்பட்டதாக வாகிறது, என்பது நிலைத்ததாக வாகி விடுகிறது. “यदस्य ब्रह्मणो रूपम्” (“யதஸ்ய ப்ரஹ்மணோ ரூபம்”) என்பதாய் முன்னுள்ள வாக்கியத்துடன் சேர்த்துக் கொள்ளவேண்டும். சரீரத்திலுள்ள உபாதிபரிச்சின்னமான இந்த ப்ரம்ஹத்தினுடைய ரூபத்தை நீ அற்பமாகத் தெரிந்து கொள்ளுகின்றாய் என்பது மட்டுமில்லை. அதிதைவோபாதி பரிச்சின்னமான இந்த ப்ரம்ஹத்தினுடைய தேவர்களிடத்திலிருப்பதாக யாதொரு ரூபத்தை நீ அறிகின்றாயோ அதையும் நீ அற்பமாக

ऽहम्। यदध्यात्मं यदधिदैवं तदपि च देवेषूपाधिपरिच्छिन्नत्वादल्पत्वान्न निवर्तते। यत्तु विध्वस्तसर्वोपाधिविशेषं शान्तमनन्तमेकमद्वैतं भूमाख्यं नित्यं ब्रह्म न तत्सुवेद्यमित्यभिप्रायः। यत एवमथनु–तस्मान्मन्येऽद्यापि मीमांस्यं विचार्यमेव ते–तव ब्रह्म। एवमाचार्योक्तः शिष्य एकान्त उपविष्टः समाहितस्सन्यथोक्तं आचार्येणागममर्थतो विचार्य तर्कतश्च निर्धार्य स्वानुभवं कृत्वाऽऽचार्यसकाशमुपगम्योवाच–मन्येऽहमथेदानीं, विदितं ब्रह्मेति॥

कथमिति शृणुत।

नाहं मन्ये सुवेदेति नो न वेदेति वेद च।
यो नस्तद्वेद तद्वेद नो न वेदेति वेद च॥ २॥

நாஹம் மந்யே ஸுவேதேதி நோ ந வேதேதி வேத³ ச ।
யோ நஸ்தத்³வேத³ தத்³வேத³ நோ ந வேதேதி வேத³ ச ॥ ௨ ॥

வேதான் அறிகின்றாய் என நான் எண்ணுகிறேன். அத்யாத்மத்தில் எதண்டோ, அதிதைவத்தில் எதுண்டோ அதுவும் தேவர்களிடத்தில் உபாதியினால் பரிச்சின்னமாக்க (குறைக்க) ப்பட்டிருப்பதால் அற்பமாக விருக்குந்தன்மையினின்றும் நீங்குவதில்லை. அழிக்கப்பட்ட எல்லாவுபாதிவிசேஷத்தையு முடையதும், சாந்தமும், அனந்தமும், ஏகமும், அத்வைதமும், பூமா எனப் பெயரியதும், நித்யமுமான ப்ரஹ்மம் யாதுண்டோ அது நன்கு அறியக்கூடியதாக வாகாது என்பது கருத்து. யாதுகாரணத்தால் இவ்விதமிருக்கிறதோ அக்காரணத்தால் இப்பொழுதுங்கூட உன்னால் ப்ரம்ஹம் விசாரித்தறியக்கூடியதாகவே தானிருக்கிறது. இவ்விதம் ஆசிரியராலுபதேசிக்கப்பட்ட சிஷ்யன் தனியானவிடத்தில் உட்கார்ந்து சித்தத்தை யடக்கினவனாய்க் கொண்டு உள்ளபடி ஆசிரியராலுபதேசிக்கப்பட்ட சாஸ்திரத்தை அர்த்தத்துடன் விசாரித்தும் யுக்தியினாலுறுதிப்படுத்தியும் சொந்த அனுவத்துக்கும் கொண்டுவந்து பிறகு ஆசிரியருடைய அருகில் வந்து 'ப்ரஹ்மமானது அறியப்பட்டதாகவிருக்கலாமென நானிதுபோழ்து எண்ணுகிறேன்' என்றான். (1)

அவதாரிகா பாஷ்யம்.—எவ்விதமெனின்? கேளுங்கள் எனச் சொல்லுகிறான்—

नाह मन्ये सुवेदेति नैवाहं मन्ये सुवेद ब्रह्मेति। नैव तर्हि विदितं त्वया ब्रह्मेत्युक्त आह—नो नवेदेति वेद च। वेद चेति च शब्दान्नवेद च। ननु

(ப-ரை) सुवेदेति (ஸுவேதேதி)=ப்ரம்ஹத்தை நன்கு அறியேன் என * नाहमन्ये (நாஹமந்யே)=நான் எண்ணவேயில்லை. न वेदेति(நவேதேதி)=அறியவில்லையென்றும், नो (நோ)=எண்ணவேயில்லை. பின்னையோவெனில் वेद (வேத)=அறியவும் செய்கிறேன். च (ச)=அறியவுமில்லை. नो नवेदेति वेद च (நோ நவேதேதி வேத ச)="நோ நவேதேதி வேத ச" என்றவிடத்தில் वेद च(வேத ச)=என்றதனால் அறியவும் செய்கிறேன் ஆனால் அறியவுமில்லை என்ற तत् (தத்)=அந்த வார்த்தையை नः (நः)=என்னுடன் அத்யயனஞ்செய்பவருள் यः (யः)=எவனொருவன் वेद (வேத)=அறிவானோ அவன் तत् (தத்)=அந்த ப்ரம்ஹத்தை वेद (வேத)=அறிந்தவனாகவாகிறான்.

பாஷ்யம்.—नाह मन्ये सुवेदेति (நாஹ மந்யே ஸுவேதேதி) நன்கு அறிவேன் ப்ரம்ஹத்தையென நான் எண்ணவேயில்லை. அங்

---

* இங்கு மூலத்தில் "नाहमन्ये" ("நாஹமந்யே") என்றே பாடமிருக்க வேண்டுமெனப் படுகிறது. नाहं मन्ये (நாஹம் மந்யே) என்றபாடம் அவ்வளவு பொருத்தமானதன்று. ஏன்? मन्ये (மந்யே) என்ற உத்தமபுருஷப்ரயோகத்திலிருந்தே நான் என்பது கிடைத்து விடுவதும், பாஷ்யத்தில் नाह (நாஹ) என்பதற்கு नैव (நைவ) என அர்த்தம் செய்திருப்பதுமே அதன் காரணமாகும். नैवाहं मन्ये (நைவாஹம் மந்யே) என்றவிடத்தில் अहम् (அஹம்) என்ற சப்தம் பாஷ்யத்தில் காணப்படுவதானது मन्ये (மந்யே) என்ற உத்தமபுருஷப்ரயோகத்தால் கிடைத்த अहम् (அஹம்) என்றதைச் சேர்த்துக்கொண்டதாகவே கொள்ளவேண்டும். இல்லையேல் नैव (நைவ) எனக் கூறினதும் मन्ये (மந்யே) என்ற உத்தமபுருஷ ப்ரயோகத்தாலேயே अहम् (அஹம்) என்பது கிடைக்கக்கூடியதாக இருக்கத் திரும்பவும் அந்த अहम् (அஹம்) என்பதைக் கூறினதும் வீணாகிவிடும். மேலும் வாக்ய பாஷ்யத்தில் "अह" ("அஹ") என்பது தேற்றத்தைச் சொல்லும் சப்தமாகும். அதாவது: "नैवमन्ये" ("நைவமந்யே") அறியவேயில்லை" என்பது அதன் பொருள்" என பாஷ்யக்காரர் பொருள் கூறியிருப்பதும் மற்றொரு காரணமாகும்.

विप्रतिषिद्धं नाहं मन्ये सुवेदेति, नो न वेदेति, वेद चेति। यदि न मन्यसे सुवेदेति कथं मन्यसे वेद चेति। अथ मन्यसे वेदैवेति कथं न मन्यसे सुवेदेति। एकं वस्तु येन ज्ञायते तेनैव तदेव वस्तु न सुविज्ञायत इति विप्रतिषिद्धं संशयविपर्ययौ वर्जयित्वा। नच ब्रह्म संशयितत्वेन ज्ञेयं विपरीतत्वेनवेति नियन्तुं शक्यम्। संशयविपर्ययौ हि सर्वत्रानर्थकरत्वेनैव प्रसिद्धौ। एवमाचार्येण विचाल्यमानोऽपि शिष्यो न विचचाल। 'अन्यदेव तद्विदितादथो अविदितादधि' इत्याचार्योक्तागमसंप்रदायबलादुपपत्त्यनुभवबलाच्च

ஙனமாயின் உன்னால் ப்ரம்ஹமானது அறியப்படவேயில்லை என்று ஆசிரியரால் சொல்லப்படவே சிஷ்யன சொல்லுவதாவது—नो न वेदेति (நோ நவெதெதி) நான் அறியவில்லையென்பதுமில்லை. ஆயினும் वेद(வெத) அறிவேன் च(அ) என்ற சப்தமிருப்பதைக்கொண்டு न वेद च (ந வெத அ) எனச் சேர்த்துக்கொண்டு அறியவுமில்லை எனப் பொருள் சொல்ளவேண்டும்.

சங்கை—'நன்கு அறிகிறேன் என எண்ணவேயில்லை. அறியவில்லை என்பதுமில்லை அறியவும் அறிகிறேன். ஆனால் அறியவுமில்லை.' என்பது ஒன்றுக்கொன்று முறண்படுவதாகும். நன்கு அறியவில்லை என எண்ணுவாயேல் அறியவுமறிவேன் என எவ்விதமெண்ணக்கூடும். அறியவே அறிவேன் என எண்ணுவாயேல் நன்கு அறிவேன் என எவ்விதமெண்ணமலிருப்பாய். எவனால் ஒருவஸ்து அறியப்படுகிறதோ அவனாலேயே அதே பொருள் நன்கு அறியப்படவில்லை என்பது ஸம்சயம், விபரீதக்ஞானம் இவையில்லாதவிடத்தில் முறண்பட்டதேயாகுமன்றோ. ப்ரம்ஹமானது ஸம்சயிக்கப்பட்டதாக அறியவேண்டுமென்றோ, விபரீதமாக (மாறுபட்டதாக) அறியவேண்டுமென்றோ வற்புறுத்தக் கூடியதில்லையன்றோ. ஸம்சயம் விபரீதக்ஞானம் இரண்டும் எல்லாவிடத்திலும் அனர்த்தத்தைத் தரக்கூடியனவென்பது ப்ரஸித்தமன்றோ என இவ்விதம் ஆசிரியரால் அசைக்கப்படினும் சிஷ்யன் தனது நிர்ணயத்தினின்றும் மாறினனில்லை. *"அன்யதேவ தத்விதிதாத் அதோ அவிதிதாத்

---

* இம்மந்திரத்தின் பொருளை 1-வது கண்டம் 4-வது மந்திரத்தில் பார்க்கக் காண்க.

जगर्ज च ब्रह्मविद्यायां दृढनिश्चयतां दर्शयन्नात्मनः। कथमिति। उच्यते। यः=यः कश्चित्, नः=अस्माकं सब्रह्मचारिणां मध्ये तत्=उक्तं वचनं तत्वतो वेद स तत्=ब्रह्म वेद। किं पुनस्तद्वचनमित्यत आह—नो नवेदेति वेद चेति। यदेव 'अन्यदेव तद्विदितादथो अविदितादधि' इत्युक्तं तदेव वस्त्वनुमानानुभवाभ्यां संयोज्य निश्चितं वाक्यान्तरेण नो नवेदेति वेदचेत्यवोचदाचार्यबुद्धिसंवादार्थं मन्दबुद्धिग्रहणव्यपोहार्थं च। तथा च गर्जितमुपपन्नं भवति यो नस्तद्वेदेति ॥ २ ॥

शिष्याचार्यसंवादात्प्रतिनिवृत्य स्वेन रूपेण श्रुतिः समस्तसंवादनिर्वृत्तमर्थमेव बोधयति—यस्यामतमित्यादिना ॥

அதி" என்பதாய் ஆசிரியர் சொல்லிய சாஸ்திரம், ஸம்பிரதாயம், இவற்றின் வலுக்கொண்டும், அதற்குப் போதிய யுக்தி அனுபவம் இவற்றின் வலுக்கொண்டும் ப்ரம்ஹவித்யையில் தனக்குள்ள திருட நிஸ்சயத்தைக் காட்டவேண்டி கர்ஜித்துப் பேசத்தொடங்கினன். எவ்விதமெனின்? சொல்லுகிறோம். எனது தோழர்களான வித்யார்த்திகளுள் யாரேனுமொருவன் அதை=நான் சொன்னவார்த்தையை உண்மையாக அறிவானேல், அவன் அதை ப்ரம்ஹத்தை அறிந்தவனுவான். நீ சொன்ன அந்த வசனம் யாதெனில் சொல்லுகிறான். அதாவது:—"नो नवेदेति वेद च" ("நொ நவெதெதி வெத அ") (அறியவில்லை என்பதில்லை. ஆனல் அறியவும் அறிவேன், அறியவும் மாட்டேன்) என்றும். "அந்யதேவ தத்விதிதாத் அதோ அவிதாத் அதி" என்பதால் எதேபொருள் சொல்லப்பட்டதோ அதையே அனுமானம் சொந்த அனுபவம் இவற்றுடன் சேர்த்து வேறு வாக்கியத்தினுலும் நிஸ்சயித்துக்கொண்டு ஆசிரியருடைய எண்ணத்துடன் ஒற்றுமையைக் காட்டவேண்டியும், தான் மந்தமான புத்தியுள்ளவன் எனத் தன்னைப்பற்றி ஆசிரியர் கொண்ட எண்ணத்தைப் போக்கவேண்டியும், "नो न वेदेति वेद च" ("நொ நவெதெதி வெத அ") எனச் சிஷ்யன் சொன்னன். அவ்விதமானல் தான் "எங்களுக்குள் எவனெருவன் அதையறிவானே" எனக் கர்ஜித்தது பொருத்தமுள்ளதாகவாகும். (2) (எ-று)

यस्यामतं तस्य मतं मतं यस्य न वेद सः ।
अविज्ञातं विजानतां विज्ञातमविजानताम् ॥ ३ ॥

யஸ்யாமதம் தஸ்ய மதம் மதம் யஸ்ய ந வேத ஸ:।
அவிஜ்ஞாதம் விஜாநதாம் விஜ்ஞாதமவிஜாநதாம் ॥ ௩ ॥

அவதாரிகா பாஷ்யம்.—சிஷ்யன் ஆசிரியர் இவ்விருவரும் ஒத்துப்பேசும் முறையினின்றும் விலகி ஶ்ருதியானது சொந்த ரூபத்தினால் (தனது அபிப்பிராயமாக) இதுவரை சொல்லிய எல்லா வியவஹாரத்தாலும் ஏற்பட்டபொருளையே "யஸ்யாமதம்" என்றதாதியாற் சொல்லுகிறது—

(ப—ரை) यस्य (யஸ்ய)=எந்த ப்ரம்ஹவித்துக்கு ப்ரம்ஹமானது अमतम् (அமதம்)=அறியப்படாதது=அறிவென்ற அந்தக்கரண விருத்திக்கு விஷயமாகவாகாதது, [என मतम् (மதம்)=அபிப்பிராயமோ] तस्य (தஸ்ய)=அவருக்கு, मतम् (மதம்)=அது நன்கு அறியப்பட்டதாகவாகிறது என்பது அபிப்ராயம். यस्य (யஸ்ய)=எவனுக்கு मतम् (மதம்)=என்னால் அறியப்பட்டது ப்ரம்ஹமென்ற நிஶ்சயமேற்படுகிறதோ, सः (ஸ:)=அவன் न वेद (ந வேத)=ப்ரம்ஹத்தை அறிந்தவனேயில்லை. இவ்விதம் வித்வான் அவித்வான் இவர்களைப்பற்றிச் சொல்லப்பட்ட இரண்டு பக்ஷங்களையும் ஶ்ருதி உறுதிப்படுத்திப் பின்வருமாறு கூறுகிறது—विजानताम् (விஜாநதாம்) = ப்ரம்ஹம் அறியப்பட்டதே என்று நன்கு எண்ணுகின்றவர்களுக்கு अविज्ञातम् (அவிஜ்ஞாதம்)=அறியப்படாததேயாகிறது. अविजानताम् (அவிஜாநதாம்)=ஸம்யக்தர்சனமில்லாதவர்களுக்குங்கூட அதாவது:—இந்திரியம் மனஸ் புத்தி இவைகளிலேயே ஆத்மபுத்தி யுள்ளவர்களுக்குங்கூட என்றும். அது विज्ञातम् (விஜ்ஞாதம்)=அறியப்பட்டதாகவே ஆகிறது. இவ்விதம் எண்ணுகின்றவர்களுக்குங்கூட இந்திரியமனோ புத்தியாதிகளுக்கு ப்ரகாசத்தைத்தருவதாக ப்ரம்ஹமிருப்பதே அதன் காரணமாகும் என்பது கருத்து.* (3) (எ—று)]

---

*. ஜ்ஞானாஜ்ஞானாதி ஸகல நிலைகளிலுங்கூட ப்ரம்ஹமானது உள்நின்று ஸகலத்தையும் ப்ரகாசப்படுத்துவதாகவாகிறது என்று சொல்லப்பட்டதாகவாகிறது. ஆகவே ஸர்வாதிஷ்டான சின்மாத்ரமாகவுள்ளது ப்ரம்ஹம் என்பது இதனால் பெறப்பட்டது என்பது கருத்து.

यस्य=ब्रह्मविदः, अमतम्=अविज्ञातमविदितं ब्रह्मेति मतम्=अभिप्रायो निश्चयः तस्य मतम्=ज्ञातं सम्यग्ब्रह्मेत्यभिप्रायः। यस्य पुनर्मतं=ज्ञातं विदितं मया ब्रह्मेति निश्चयः, न वेदैव सः=न ब्रह्म विजानाति सः। विद्वदविदुषोर्यथोक्तौ पक्षाववधारयति—अविज्ञातम्=अमतमविदितमेव ब्रह्म, विजानताम्=सम्यग्विदितवतामित्येतत्। विज्ञातम्=विदितं ब्रह्म, अविजानताम्=असम्यग्दर्शिनामिन्द्रियमनोबुद्धिष्वेवात्मदर्शिनामित्यर्थः। न त्वत्यन्तमेवाव्युत्पन्नबुद्धीनाम्। नहि तेषां विज्ञातमस्माभिर्ब्रह्मेति मतिर्भवति। इन्द्रियमनोबुद्ध्युपाधिष्वात्मदर्शिनां तु ब्रह्मोपाधिविवेकानुपलंभात् बुद्ध्याद्युपाधेश्च

